NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
WE OFFER SERVICES IN:
Real Estate
Corporate Law
Litigation
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

December 2018

# ஏகுருவி

ekuruvi.com

$1 WOW!

Bring your parents & Grandparents worry free!
SuperVisa. Today
416 321 6000
support@supervisa.today



# தேசியத்தின் பெயரால்... பதுக்கப்பட்ட சொத்துக்களும் பதுக்(ங்)கியவர்களும்...

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Buying or selling a home?
Thipan Raj
Sales Rep.
Cell: 416-629-2444

THE GUARDIAN
GET A TEAM OF EXPERIENCED PROFESSIONALS WORKING FOR YOU.
WE HAVE THE Right Mortgage for you!
Gini Annarasa
Mortgage Broker
Cell : (416) 830-3241
Tel : (416) 556 7002
Fax : (416) 556-5115
Cell : (416) 830-3241
80 Nashdene Rd. Unit D221-222, Toronto, ON M1V5K4
www.mortgageguardian.ca

DOVE SQUARE
PROPERTY MANAGEMENT INC.
www.dovesquare.ca
Integrity | Community | Commitment
416-335-DOVE (3683)
10 Milner Business Court, Suite 510, Toronto, ON, M1B 3C6

Ideal Auto Tech
For all your domestic and imported vehicle repairs and services
Oil Change
$24.99 + tax
Conditions apply.
Tel: 416-752.LUBE(5823)
Fax: 416-752-0457

Century 21
Regal Realty Inc., Brokerage*
Jeyan Inpanayagam Comm.Eng
Sales Represntative
Direct: 416-877-3300
Tel: 416-291-0929
www.ihomeandcondo.com

GT Brokers
Do you want to become a Professional Advisor?
NOW HIRING
Full & Part Time Life & Health Insurance Advisors
Get your industry licence at no cost... Free in class teaching
guna@gtbrokers.ca | www.gtbrokers.ca
Guna Thuraisingham M.A.Sc (Eng.), P.Eng.
416 528 1407

வீடு விற்க... வாங்க...
Ram Krishnamurthy
SALES REPRESENTATIVE
Direct 416-526-4996
ROYAL LEPAGE
IGNITE REALTY- BROKERAGE 795 Milner Ave. Toronto, ON M1B 3C3

PRO-LIFE WELLNESS CENTRE
PHYSIOTHERAPY CLINICS
Our Services:
• Physiotherapy
• Chiropractic
• Massage
• Acupuncture
• Spinal Decompression
• Orthotics/Braces
• Car Accidents
• WSIB
PAIN? WE CAN HELP YOU!
OPEN 7 DAYS
416.357.2808
www.prolifewellnesscentre.com
AJAY THAVAM | 416.704.8074

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ekuruvi.com

www.ekuruvi.com
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com
PO Box 15 Pickering
Pickering ON
L1V 2R2

# இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட நல் ஆசிரியர் விருது மாணவர்களின் நல்லாசிரியர் தெரிவு எப்படி இருக்கும்...?

கடந்த புதிய வெளிச்சம் ஊடாக வடக்கு கிழக்கு ஆசிரியர்களுக்கு அவர்களின் ஆசிரிய பண்புகளை உயர்த்துவதற்கு கட்டம் கட்டமாக பல பயிற்சி பட்டறைகளை நடத்தி வந்தோம். இதன் பெறுபேறுகளின் அடிப்படையில் தொடர்ச்சியாக ஆசிரியர்களின் ஒட்டுமொத்த தராதரத்தையும் கூட்டுவதற்கு சிறந்த ஆசிரியர் விருதுகளை வழங்குவதாக தீர்மானித்தோம். அவ்வேளையில் கடந்த ஒக்டோபர் மாதம் , யுத்தத்தில் ஒரு கையையும் தாயையும் இழந்த முள்ளியவளை மாணவி ராகினி தேசிய ரீதியிலான ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகளை பெற்று சித்தியடைந்து, தனது செவ்வியில் தனது ஆசிரியர் போல் வரவேண்டும் என்று தெரிவித்தார்

மாணவி செல்வி ஞானசீலன் இராகினி ஊடகங்களில் தெரிவித்த கருத்துக்கள் "ஒரு மாணவியின் பார்வையில் தனது ஆசிரியர் எவ்வாறு இருக்கவேண்டும்" என்பதை சர்வதேசத்திற்கும் வெளிச்சம் போட்டுக்காட்டியது. கடந்த மூன்று வருடங்களாக நாம் எடுத்துக்கொண்ட புதிய வெளிச்ச செயற்பாடுகளில் 'ஆசிரியர்களை வளப்படுத்தல்' செயல்திட்டத்தின் தொடர் நிகழ்வாக இந்த ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டிற்குமான 'நல் ஆசிரியர் விருதினை' அவர் கூறிய ஆசிரியருக்கு வழங்கியதன் மூலம் அறிமுகம் செய்தோம் .

இவ் விருதுகளுக்கான ஆசிரியரை தெரிவு செய்வதில் ஒரு புதிய அணுகு முறையை அறிமுகப்படுப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்;. ஒரு ஆசிரியரை சரியானதாகவும், துல்லியமானதாகவும் மதிப்பிடக் கூடிய ஆற்றல் அவரது மாணவர்களிடமே உள்ளது என்ற வகையில் மாணவர்களைக் கொண்டே நல்லாசிரியரைத் தெரிவு செய்யக்கூடிய ஒரு திட்டத்தினை அறிமுகம் செய்து அதன் ஊடாக, ஒவ்வொரு வருடமும் உலக ஆசிரியர் நாளன்று நல்லாசிரியர்களைக் கௌரவிக்கவுள்ளோம். இந்த முயற்சியில் மாணவர்களின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு புதிய வெளிச்சத்தின் கல்வியாளர் குழுவினர் மிகவும் துல்லியமாகவும். பாரபட்சமற்றமுறையிலும் நல்லாசிரியர்களைத் தெரிவுசெய்ய உள்ளனர். இது தொடர்பான விபரங்கள் மற்றும் பிரமாணங்களை வெகு விரைவில் அறியத்தருகின்றோம்.

இதனை தொடர்ந்து வடக்கு கிழக்கில் உள்ள ஆசிரியர்களுக்கு சுமார் 25 விருதுகளை பணப்பரிசில்கள் முலம் வழங்கவுள்ளோம். மாணவர்களைக் கொண்டு பாடசாலையில் கற்பிக்கும் ஒரு ஆசிரியர் மதிப்பீடு செய்யப்படும் பொழுது,பின்வரும் திறன்களையும், ஆளுமைகளையும் அறிந்து கொள்ளலாம்:

1. ஒரு ஆசிரியரின் கற்பித்தல் திறன் 2. பொது பரீட்சைப் பெறுபேறுகளில் அவரது பங்கேற்பு 3. மாணவர்களுடன் நல்ல உறவைப் பேணுதல் 4. பாடசாலை அதிபருடன் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி நல்லுறவைப் பேணுதல். 5. மாணவர்களைத் தனித்ததனியாகக் கவனிப்பதில் குழுமுறைச் செயற்பாடு மற்றும் செய்முறை ரீதியான கற்பித்தலில் ஈடுபடுதல் 6. மாதாந்த பரீட்சைகள் வைத்துப் பெற்றோரை அழைத்துக் கலந்துரை யாடுதல். 7. பாடசாலையின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஏனைய ஆசிரியர்களுடன் இணைந்து செயற்படும் போக்கு 8. அதிகளவில் விடுப்பு (லீவு) எடுக்காது முழுமையாகப் பாடசாலையில் தனது பங்களிபபை வழங்குதல் 9. பாடசாலை மாணவர்களில் மெல்லக் கற்கும் மாணவர்கள் மீது அக்கறை எடுக்கும் தன்மை.இதில் மேலதிக வகுப்புகள் எடுத்தல், விடுமுறை நாட்களில் வகுப்புகள் எடுத்தல் என்பவை கருத்தில் எடுக்கப்படும் 10. மாணவர்களுக்கு எல்லா வகையிலும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டுதல் 11. பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னரே பாடசாலைக்குச் சமுகமளித்து காலைப் பிரார்த்தனையில் கருத்துக்கள் வழங்குதல்,மாணவர்களின் திறன் விருத்தியில் சிரேஸ்ட மாணவர்களுடன் சேர்ந்து பங்களிப்புச் செய்தல் 12. மாணவர்களின் தனிப்பட்ட நலன்கள் அவர்களது கல்வி முன்னேற்றம் மற்றும் ஒழுக்கவிழுமியங்கள் தொடர்பாக நேரடியாகப் பெற்றோரை சந்தித்தல். 13. இன்னும் வேறு பல குறிகாட்டிகளை மாணவர்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். 14. இத்தனை பண்புகளையும் கொண்டுள்ள ஒரு ஆசிரியர்,தேவை ஏற்படின் மாணவர்கள்; விட்ட சில தவறுகளை அவர்களே உணரும் வகையிலும் தண்டனைகளை ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலும் சில தண்டனைகளையும் வழங்குவதையும் காணலாம் 15 பொது அறிவு , மொழியறிவில் கவனம் செலுத்துபவர்கள் ..

என சுமார் 50 கேள்விகளுடாக ஆசிரியரை மாணவர்கள் மதிப்பீடு செய்வதன் மூலம் சிறந்த ஆசிரியர்களாக உருவாக்கலாம் .

இவ்வாறான ஆசிரியர் ஊக்குவிப்புச் செயற்பாடுகள், புதிய வெளிச்சம் தொடர்ந்தும் அடுத்து வரும் ஆண்டுகளுக்கு முன்னெடுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். இதன் மூலம் ஆசிரியர்களின் திறனில் பெருமாற்றத்தை எதிர்பார்க்கலாம். இதற்கு புலம்பெயர் பழைய மாணவர் சங்கங்கள் , பாடசாலை சங்கங்கள் ஊர்ச் சங்கங்களிடமிருந்து ஆதரவையும் ஒத்துழைப்பையும் வேண்டிநிக்கின்றேன் .

உங்கள்; அழைப்பை ஏற்று காத்திருக்கும் புதிய வெளிச்சம்

இகுருவி பத்திரிகை ஒரு டொலர் சிவத்த உண்டியல் ... நம்பிக்கை

வர்தக நிறுவனங்கள் தோறும் எமது சிவப்பு உண்டியல்கள் இகுருவிப் பத்திரிகை அருகில் கரம் கூப்பி உங்களின் ஒவ்வொரு டொலர்களையும் அன்போடு பெற்றுக் கொள்கிறது. ஜூன் மாதத்திலிருந்து உங்கள் அன்பினாலும், ஆதரவினாலும் சிவப்பு உண்டியல்களை மகிழ்வித்தீர்கள்.




சிலர் இத்தனை இலவச பத்திரிகைகளுக்குள் காசு பத்திரிகை சாத்தியமா? உண்டியலுக்குள் பணம் போடாமல் பத்திரிகையை எடுத்துச் சென்றால் என்ன செய்வீர்கள்? போன்ற கேள்விகள் எம்மை நோக்கி வந்த வண்ணமே உள்ளன. இதற்கு எங்களிடம் ஒரே பதில் தான் உண்டு அந்தப் பதில்....... நம்பிக்கை தான் வாழ்க்கை.

நீங்கள் பத்திரிகைக்காக கொடுக்கும் ஒவ்வொரு டொலர் அன்பளிப்புக்கும் புதிய வெளிச்சமூடாக தாயகத்தில் பல கல்வி, பொருளாதார, செயற்பாடுகளை செய்யலாம் என்று நம்புகின்றோம்

இந்த டிசம்பர் மாத இகுருவி பத்திரிகையை அதற்குரிய பெறுமதியான $1 ஐ சிவத்த உண்டியலில் வழங்கி வாங்குவீர்கள் என்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

## உள்ளடக்கம்

கை நழுவுமா ஒஷோவா? -Triden V Balasingam

லோகன் கணபதி ஒரு பச்சை பொய்யரா?

வாவேய் அதிகாரியின் கைதின் பின்னால் உள்ள நுண்அரசியல் - **பார்கவி**

சவுதிக்கு எதிராக அமெரிக்காவின் நகர்வு - **ஜனகன் முத்துக்குமார்**

ஜமால் கசாகி கொலை ஏன்? எதற்கு? - **ரதன்**

இயற்கை வேளாண் நெல் ஜெயராமன் - **குரு அரவிந்தன்**

கூட்டு தொடர்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு என்ன? - **தர்சினி உதயராஜா**

அனைத்துத் தரப்பு மக்களின் குரல்களையும் கேட்போம்! - -**புருஜோத்தமன் தங்கமயில்**

குழம்பிப் போயிருக்கும் கொழும்பு: தமிழ்த் தரப்பு என்ன செய்யலாம்? - **நிலாந்தன்**

கனேடிய தமிழர் பேரவையின் தமிழர்களுக்கு எதிரான வழக்குகள்! - -**நவஜீவன் அனந்தராஜ்**

தடுமாறுகிறாரா ஜஸ்ரின் ரூடோ? ு- **குயின்ரஸ் துரைசிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாவேய் அதிகாரியின் கைதின் பின்னால் உள்ள நுண்அரசியல்...




வாவேய் (Huawei) நிறுவனத்தின் தலைமை நிதி தலைவர் (Meng Wanzhou) மென் வென்சோ வன்கூவர் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். அமெரிக்க அதிகாரிகளின் கோரிக்கையின் அடிப்படையிலேயே இக் கைது இடம் பெற்றது. இவரை அமெரிக்காவிற்கு நாடு கடத்த வேண்டும் என்ற கோரிக்கையும் அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டுள்ளது. சில நாட்களில் இதற்கான உத்தியோகபூர்வ கோரிக்கையை, கனடிய நீதி மன்றத்திடம், அமெரிக்கா கையளிக்கும். கைது நடைபெற்ற உடனேயே, உலகரங்கில் இக் கைது ஒரு முக்கிய விடயமாகிவிட்டது. ஏன்?

வாவேய் ஒரு சீன நிறுவனம். தொலைத் தொடர்பு சாதனங்கள், மக்கள் நுகர்வு இலத்திரனியவியல் சாதனங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம். இந் நிறுவனம் ரென் சங்பீ (Ren Zhengfei) என்ற சீனப் பொறியியலாளரால் 1987ல் சீனாவில் ஆரம்பிக்கப்பட்டது. இன்று 170 உலக நாடுகளுக்கு இது வியாபித்துள்ளது. 170,000 ஊழியர்கள் உள்ளனர். இதில் 76,000 பேர் ஆய்வாளர்களாக கடமையாற்றுகின்றனர். 2017ம் ஆண்டு இந் நிறுவனம் 13.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஆராய்ச்சிக்கென செலவிட்டுள்ளது. இதன் மொத்த வருமானம் 2018ல் 100 பில்லியனைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தொழிலாளர்களே வாவேயின் உரிமையாளர்கள். ரென் சங்பீ 1.5 வீத பங்குகளையே வைத்துள்ளதாக நிறுவனம் தெரிவிக்கின்றது. சீனத் தொழிலாளர்களே இதன் உரிமையாளர்கள். ஆனாலும் ரென் சங்பீக்கு நெருக்கமான பலருக்கும் இங்கு பங்குள்ளதால், அல்லது ரென் சங்பீ வேறு விதத்தில் பங்குகளை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதாக கூறப்படுகின்றது.

ரென் சங்பீயின் முதல் மனைவியின் மகளே மென் வென்சோ. சீன கலாச்சாரப்படி தனது தாயின் பெயரை தனது இறுதிப் பெயராகக் கொண்டுள்ளார். 46 வயதான மென், வாவேய் நிறுவனத்தில் ஒரு எழுதுவினைஞராக தொடங்கி, தலைமை நிதி அதிகாரியாக, சில மாதங்களுக்கு முன் உதவி தலைமை நிதித் தலைவராக பதவி உயர்வு பெற்றுள்ளார். ஏற்கனவே ரென் சங்பீக்கும், சீன அரசுக்குமான தொடர்புகள் பல கேள்விகளை எழுப்பின. ரென் சங்பீ சீன இராணுவத்தில் தொலைத் தொடர்பு பொறியியலாளராகவும், முக்கிய அதிகாரியாகவும் கடமையாற்றியுள்ளார். 1978ல் சீனக் கொம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். எனவே இவருக்கும் சீன அரசுக்குமான நெருக்கம் அதிகமாக உள்ளது என்பது வெளிப்படையாகவுள்ளது.

அதே சமயம் வாவேய் நிறுவனத்தின் மூலம் உலக நாடுகளை சீன உளவு பார்க்கின்றது என்பது பல நாடுகளின் குற்றச்சாட்டு. நியுசிலன்ட், 5ஜி தொழில்நுட்பத்தை வாவேயிடமிருந்து வாங்குவதற்கு தடைவிதித்துள்ளது. அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும் அடுத்த தலைமுறைக்கான வாவேயின் தொழில்நுட்ப விற்பனையை தடைசெய்துள்ளன. கனடாவும் வாவேய் பொருட்களை மீளாய்வுக்குட்படுத்துகின்றது.

கடந்த வருடங்களில் அமெரிக்கா, சீனா தனது தொழில்நுட்பத்தை திருடுவதாக குற்றஞ்சாட்டியிருந்தது.

FIRRMA (Foreign Investment Risk Review Modernisation Act, CFIUS (Committee on Foreign Investment in the United States), DIUX (Defence Innovation Unit Experimental போன்ற அரச ஆய்வு அமைப்புக்கள் சீனா, சிலிக்கன் வலி பிரதேசத்தில் முதலீடு செய்வதை அமெரிக்க அரசு வரவேற்கக் கூடாது என்கின்றன. சீன அரசுடன் நெருக்கமான Baidu நிறுவனம் சிலிக்கன் வளி பிரதேசத்தில் முதலீட்டு நிறுவனத்தை நடாத்திவருகின்றது. அடுத்த வருடம் சன் பிரான்சிக்கோ நகரில், அந் நகரின் இரண்டாவது உயர்ந்த கட்டிடமான ஓசியன் வைட் சென்ரர் திறக்கப்படவுள்ளது. இது சீன முதலீட்டிலியே கட்டப்பட்டுள்ளது. சீன அமெரிக்காவின் தொழில்நுட்பத்தை பின் கதவின் வழியே வந்து எடுத்துச் செல்கின்றது என்பது மேற்கூறிய அமைப்புக்களின் குற்றச்சாட்டு. Intellectual property theft -இதனால் அமெரிக்காவிற்கு ஒவ்வொரு வருடமும் 225-600 பில்லியன் டொலர்கள் இழப்பு ஏற்படுவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டுகின்றது. சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் சீன அமெரிக்க பொறியியலாளர்கள், அமெரிக்காவில் கைது செய்யப்பட்டனர். இவர்கள் சீனாவிற்கு, அமெரிக்க தொழில்நுட்ப இரகசியத்தை விற்பதாக குற்றஞ் சாட்ப்பட்டது.

Skycom என்ற நிறுவனம், ஈரானுக்கு HP கணணி பாகங்களை விற்பனை செய்துள்ளது. அமெரிக்கா, ஈரானுடன் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. எச்.எஸ்.பி.சி வங்கியினூடாக பல நிதி நடவடிக்கைகள் ஈரானுக்கும் ஸ்கைகொம்முக்கும் நடைபெற்றதுள்ளது.. பின்னர் ஸ்கைகொம் நிறுவனத்தை Canicula Holding என்ற நிறுவனம் வாங்கியுள்ளது. Canicula நிறுவனம் மொரீசியஸ் நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. Canicula நிறுவனத்தின் பங்குதாரர்கள் யார்? இது வாவேய் நிறுவனத்தின் துணை நிறுவனமா? போன்ற விடயங்களை ஆராயமுடியாமல் உள்ளது. மொரிசியஸ் போன்ற நாடுகளில் விபரங்களைப் பெறுவது மிகவும் கடினம். ஸ்கைகொம் 2017 நவம்பரில் மூடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த Skycom வாவேய் நிறுவனத்திற்கு சொந்தமானது. கைது செய்யப்பட்ட மென் வென்சோ ஸ்கைகொம்மின் தலைமை அதிகாரிகளில் ஒருவராக மாசி 2008லிருந்து, சித்திரை 2009 வரை இருந்துள்ளார். இதனாலேயே இவரை அமெரிக்கா கைது செய்யுமாறு, கனடாவிடம் கூறியது. இவரது நடவடிக்கைகள் மிக உன்னிப்பாக கவனிக்கப்பட்டன. இவர் எங்கு செல்கின்றார், என்ன செய்கின்றார் என்பனவற்றை அமெரிக்க அதிகாரிகள் தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தனர். இவர் ஏழு கடவுச்சீட்டுக்களை சீன மற்றும் ஹொங்ஹொங்கிடமிருந்து பெற்றதாக அமெரிக்க அதிகாரிகள் கனடாவிடம் தெரவித்துள்ளனர். அத்துடன் கடவுச் சீட்டு இலக்கங்களையும் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்னர் சீனாவின் மிகப் பெரிய தொலைத் தொடர்பு நிறுவனமான ZTE, ஈரானுடன் வர்த்தகத்தில் ஈடுபட்டமைக்காக 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை நட்டஈடாக அமெரிக்க அரசுக்கு செலுத்தியது. இந் நிறுவனத்தின் அதிகாரிகள் எவரும் கைது செய்யப்படவில்லை. ஸ்கைகொம்மின் பண பரிவர்த்தனைகளை செய்த எச்.எஸ்.பி.சி மீது எந்த நடவடிக்கையும் இல்லை. இதன் பின்னால் ஒரு வர்த்தகப் போட்டியிருப்பதையும் மறுக்கமுடியாதுள்ளது. ஸ்மார்ட் போன் (Smart Phone) விற்பனையில் உலக அரங்கில் ஐந்து நிறுவனங்கள் முன்னிலையில் உள்ளன. Samsung, Apple, Huawei, Xiaomi, Oppo ஆகிய நிறுவனங்கள் முன்னிலையில் உள்ளன. இவற்றுள் விற்பனையில் சாம்சாங் முன்னிலையில் இருந்தாலும், அப்பிளின் மொத்த விற்பனையை வாவேய் தாண்டிவிட்டது. 2009ல் 20 பில்லியன் வருமானத்தைப் பெற்ற வாவேய், இப்பொழுது 100 பில்லியனைத் தாண்டிவிட்டது. சீன தொலைத் தொடர்பு நிறுவனங்கள் உலக ஸ்மார்ட்போன் விற்பனையில் கணிசமான பங்கைக் கொண்டுள்ளன. உலக நாடுகள் பலவற்றிற்கும் இவை தனது விற்பனையை விஸ்தரித்து விட்டன. இது அமெரிக்க நிறுவனங்களுக்கு ஆபத்தாக உள்ளது. சீன-அமெரிக்க வர்த்தக போரின் ஒரு எச்சமாக இந் நடவடிக்கை உள்ளது.

மெக்சிக்கோவிற்கு செல்லும் வழியில் வன்கூவர் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட மென் வென்சோவை கைது செய்தமையை சீன அரசும், சீன ஊடகங்களும் மிகக் கடுமையாக கண்டித்துள்ளன. கனடாவை எச்சரித்தும் உள்ளன. அமெரிக்காவிற்கும், சீனாவிற்குமிடையில் கனடா மாட்டிக் கொண்டதாக உலக ஊடகங்கள் கருத்து தெரிவிக்கின்றன. சீன அரசும், கனடாவிடம் மென்னை விடுதலை செய்யுமாறு கோரியுள்ளது. இதற்கிடையில் சீனா இரு கனடியர்களை கைது செய்துள்ளது. கனடிய பிரதமர் இதன் பின்னால் எந்த வித அரசியலுமில்லை எனத் தெரிவித்துள்ளார். ஆனால் அமெரிக்காவின் கோரிக்கையின் பின்னால் உள்ள நுண்அரசியலை நிராகரிக்க முடியாது. மென் தற்சமயம் பிணையில் விடுதலை செய்யப்பட்டாலும், அமெரிக்காவிற்கான நாடுகடத்தல் தவிர்க்க முடியாது. அதற்கு இன்னமும் மூன்று மாதங்கள் எடுக்கலாம். சீன-அமெரிக்க வணிகப் போரில் ஒரு பலிக்கடாவாக கனடா தற்சமயம் உள்ளது. ஆனாலும் கனடாவால் இந் நிலையை தவிர்க்க முடியாது.

**பார்கவி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VJP Wedding Service

உங்கள் அனைத்து விதமான வைபவங்களையும் சிறப்புற நடத்திட அழையுங்கள்



* Weddings
* Birthday Partes
* Puberty Ceremonies
* Receptions
* Christmax Parties
* Meetings

All Other Occasions.

Serving Areas
- Scarborough
- Mississauga
- Markham
- Etobicoke
- Brampton
- Ajax

Choose from 10 Luxurious banquet Halls, Accommodating 50 to 1000 guests.

குமார் 416 302 6727

# 20 Year Pay Insurance

## இருபது வருடக் கட்டுப்பணம்! வாழ்நாள் முழுவதும் காப்புறுதி!



இருபது வருடங்களுக்கு மட்டும் மாதாந்தக் கட்டுப்பணத்தைச் செலுத்துங்கள். அதன் பின்னர் உங்கள் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு காப்புறுதி இருக்கும்.

இருபது வருடங்களின் பின், விரும்பினால் காசுப் பெறுமதியை (Cash Value) அல்லது Policy Loan ஐப் பெற்றுக் கொள்ளலாம்.

| Age | 20 | | 25 | | 30 | | 35 | | 40 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 72 | 60 | 82 | 68 | 92 | 84 | 112 | 98 | 131 | 116 |
| 200K | 126 | 108 | 147 | 126 | 172 | 158 | 211 | 185 | 248 | 223 |
| 300K | 188 | 162 | 220 | 188 | 258 | 236 | 317 | 278 | 372 | 334 |



RBC Insurance · Manulife · Industrial Alliance · La Capitale Financial Group · Assumption Life · BMO Insurance · Sun Life Financial

**Thana Manickavasagar** Broker

Cell:416.728.5772 Office:416.519.3896

• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
• Non-Medical Insurance • Travel Insurance • Super Visa Medical Coverage • Drug and Dental Plan • TFSA

thana7@gmail.com www.thana.ca Fax: 647.547.8147 80 Nashdene Road, #D218, Scarborough, ON, M1V 5E4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசியத்தின் பெயரால்... பதுக்கப்பட்ட சொத்துக்களும் பதுக்(ங்)கியவர்களும்...

தமிழீழ விடுதலைக்காக சேகரிக்கப்பட்ட பொது மக்களின் பணம் மீண்டும் விவாதப் பொருளாக மாறியிருக்கின்றது. தேசியத்தின் பெயரால் சேகரிக்கப்பட்ட பெருந்தொகைப் பணத்திற்கு என்ன நடந்தது என்ற விவாதம் 2009 முதல் இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றது.

சில வாரங்களுக்கு முன்னர் ரொரன்ரோவில் நடைபெற்ற நாடு கடந்த அரசாங்கத்தின் நிகழ்வின் போது உலகத் தமிழர் அமைப்பின் முன்னாள் தலைவர் ரெஜி அவர்கள் ஊடகவியலாளர் கிருபா கிரிசனுக்கு வழங்கிய நேர்காணலின் போது முக்கியமான சில கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தார். அவர் வெளியிட்ட கருத்துக்கள் மக்கள் மத்தியில் கடும் அதிர்வுகளை ஏற்படுத்தியிருந்த நிலையில் அதற்கு பதிலளிக்கும் வகையில் அல்லது எதிர்வினையாற்றும் வகையில் கனேடிய தமிழர் தேசிய அவையின் பேச்சாளர் தேவா சாபபதி அவர்கள் தளிர் சஞ்சிகையினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் சில கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தார். இந்த இருவரது கருத்துகளுக்கும் இந்த கட்டுரையில் பதிவு செய்யப்படுகின்றன.

### தேசியத்தின் சொத்துக்கள்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு பலம் பொருந்திய அமைப்பாக மாறியதில் முக்கிய பங்கினை புலம்பெயர்ந்த சமூகம் வழங்கிய பொருளாதாரப் பங்களிப்பு கொண்டிருந்ததாக பலரும் கருதுகின்றனர். எனினும் அந்த கருத்துடன் இந்த கட்டுரையாளர் உடன்படவில்லை.

விடுதலைப் புலிகளின் வளர்ச்சி என்பது அங்கு தங்கள் உதிரத்தை சிந்தி இன்னுயிர்களை தியாகம் செய்த மாவீரர்களின் ஒப்பற்ற தியாகத்தினால் கட்டியெழுப்பப்பட்டது.

அவர்களின் தியாகங்களின் முன்னால் புலம்பெயர்ந்த சமூகம் அனுப்பி வைத்த டொலர்களும். பவுண்சுகளும், யுரோக்களும் மதிப்பிழந்து விடுகின்றன.

ஆனாலும் விடுதலைப் போராட்டதின் போக்கினை மாற்றிய சாதனைகளுக்கு புலம்பெயர் சமூகத்தின் உதவி இன்றியமையாததாக இருந்துள்ளது என்பதையும் மறுக்க முடியாது.

ஆனால் இங்குள்ள சிலர் கருதுவதும் பேசுவதும் போல் நாம் அனுப்பி பணத்தில் தான் அங்கே புலிகள் போராடினார்கள் என்பதெல்லாம் பேதமையின் உச்சம்.

புலம் பெயர்ந்த சமூகத்தில் உள்ள பலரும் தமிழீழ தேசிய விடுதலையை உளமார விரும்பினார்கள் எமக்கான தேசத்தை மீட்டெடுப்பதற்கு எமது உறவுகள் மீது காலம் காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த இன அடக்குமுறையை அறுத்தெறிவதற்கும் விடுதலைப் போராட்டத்தை தமது தோள்களின் தூக்கிச் சுமந்தார்கள். இரவு பகல் பாராது தமது சுய நலன்களை நோக்காது விடுதலைக்காக உழைத்த பலரை இந்த புலம்பெயர் சமூகம் கண்டிருக்கின்றது.

காலம் உருண்டோடிய போது கட்டமைப்பு மாற்றங்கள் புதிய முகங்களை தேசியத்தின் பெயரால் புலம்பெயர் சமூகத்தில் அறிமுகம் செய்தது.

முன்னர் இருந்தவர்கள் ஓரங்கட்டப்பட புதியவர்கள் முன்னிலைப்படுத்தபடுகின்றனர்.

புலம்பெயர் நாடுகளில் விடுதலையின் பெயரால் பல செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன பல மில்லியன் டொலர்கள் மக்களிடம் இருந்தும் வியாபார நிறுவனங்களிடம் இருந்தும் திரட்டப்பட்டன .

தமிழீழ தனியரசு ஒன்று உருவாகும் போது அதற்கான பொருளாதார பலமாக புலம்பெயர் சமூகத்தின் பங்களிப்பு இருக்க வேண்டும் என்பதற்காக திட்டமிட்டு உருவாக்கப்பட்ட கட்டமைப்பு முள்ளிவாய்கால் பேரவலத்துடன் சிதைந்தளிந்து போயிருக்கின்றது என்பது கசப்பான உண்மை.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு துணை நிற்பதற்காக தேசியத்தின் பெயரால் உருவாக்கப்பட்ட சமூக அமைப்புகள், ஊடகங்கள், ஆலயங்கள். வணிக நிறுவனங்கள் அனைத்தும் இப்போது தனிநபர்களின் ஆளுகைகளுக்குள் சென்றுள்ளமை காலத் துயரம் அன்றி வேறொன்றுமில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பின் நிர்வாகத்தில் இருந்த குறைபாடுகள் அல்லது தூரநோக்கற்ற தன்மைகள் காரணமாவே இந்த நிலை புலம்பெயர் தேசங்களில் ஏற்பட்டிருக்கின்றது.

தமது கட்டுப்பாடு இழக்கப் படாது என்ற நம்பிக்கையில் தொலைக் கட்டுபாட்டு இயங்கு பொறிமுறை மூலம் செயல்படுத்தப்பட்ட புலம்பெயர் தேசத்தின் கட்டமைப்புகள் முள்ளிவாய்கால் முடிவோடு தாயகத்தில் இருந்தான தமது கட்டுப்பாட்டை இழந்தன. இதனால் நூலறுந்த பட்டம் போல் தமக்கான திசை வழிகளில் அவர்கள் பறக்கத் தொடங்கினார்கள். தாயகம், தேசியம் போன்றவை எல்லாமே காற்றில் பறந்து தொலைந்து காணமல் போயின.

இது தமிழ் சமூகமாக எமக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தியிருக்கின்றது. ஒரு சமூகமாக நாம் மீண்டெழ முடியாத நிலையினையும் அது ஏற்படுத்தியிருக்கின்றது.

**தேசியத்தின் சொத்துக்கள் ஏன் மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும் ?**

தேசியத்தின் பெயரால் உருவாக்கப்பட்ட கட்டமைப்புகளின் செயல்பாடுகளில் மக்களுக்கு ஏற்பட்ட கடும் அதிருப்தி நிலையே யுத்தத்தின் பின்னரான தயாகத்தின் மீள் கட்டுமானத்திற்கு புலம்பெயர் சமூகத்தின் ஒன்று திரண்ட ஆதரவுத் தளத்தை ஏற்படுத்த முடியாமல் போனதற்கு காரணம்.

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட யுத்தக் மேற்கொள்கையில் விடுதலைப் போருக்காக தமது வீட்டை விற்று தாலியை விற்று பணம் கொடுத்தவர்கள் நடுத்தெருவில் நிற்பதால் தோன்றிய ஆதங்கத்தை எதைக் கொண்டும் ஆற்ற முடியாது.

கடந்தவாரத்தில்கருத்துவெளியிட்ட ரெஜி அவர்களும் தேவா அவர்களும் பொதுமக்களின் பணம் முறை கேடாக சிலரால் பயன்படுத்தப்பட்டுள்ளதை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஆனால் அந்த சிலர் யார் என்பது குறித்தோ அதற்கான ஆதாரங்கள் குறித்தோ வெளிப்படையாக பேச முயடியாதபடிக்கு அவர்களும் ஏதோ ஒன்றால் கட்டுப்படுத்தப்படுகின்றார்கள் என்பதே மறுக்க முடியாத உண்மை.

**வழி ?**

இந்த விடயம் குறித்த ஒரு பொது மக்கள் சந்திப்பினை நடத்தி அதன் ஊடாக இதுவரை நடந்த விடயங்களையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற விடயங்களையும் தெளிவு படுத்துவதற்கு அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டியது காலத்தின் தேவையாக மாறியுள்ளது.

ஆனால் இதற்கு எவரும் தயாரில்லை என்பதும் இது ஏன் என்பதும் எவருக்கும் புரியவில்லை. சில விடயங்களை பொதுவெளிக்கு கொண்டு வருவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் என்ற கோரிக்கை பல வருடங்களாகவே முன்வைக்கப்பட்டு வருகின்றது. ஆதாரங்களோடு வெளிப்படுத்தவில்லை. அவ்வாறான ஒரு விடயம் இதுவரை சாத்தியமாகவில்லை. இந்த விடயங்கள் பகிரங்கப்படுத்தப்படாவிட்டால் அதன் தாக்கம் ஒட்டு மொத்தமாக தமிழினத்திற்கு பாதிப்புகளையே ஏற்படுத்தும்.

சிலர் வெளிப்படையாகவே தலைவர் வரட்டும் கணக்கு காட்டுகின்றோம் என்று 'தில்லாக' கூறித் திரியும் நிலையை தொடர்வதற்கு இது வாய்பினை ஏற்படுத்தி விடும்.

இறுதி யுத்தத்தின் போது எல்லாவற்றையும் அவர்களுக்கே அனுப்பி விட்டோம் எங்களிடம் எதுவும் இல்லை என்று வெறும் கைகளை காண்பிக்கின்றவர்களையும் நாம் நம்ப

## உலக தமிழர் அமைப்பின் முன்னாள் தலைவர் ரெஜி


நான் சில கருத்துக்களை முன் வைக்கின்றேன். 2003 ஆம் ஆண்டு மட்டும் நான் உலகத்தமிழர் இயக்கத்தின் பொறுப்பாளராக இருந்தேன். அந்த காலக்கட்டத்தில் நிர்வகித்த சொத்துக்களை ஓரளவுக்கு எனக்கு தெரியும். ஓரளவுக்கென்ன, முழமையாக எனக்கு தெரியும். அதன் பிறகு தாயகத்திலிருந்து முதலீடு செய்யப்பட்டதுகள் உண்மையில் எனக்கு தெரியாது. தாயக தளபதிகள் தற்போது வீர மரணத்தை தழுவியிருந்தாலோ இல்லாட்டி அதை ஒப்படைத்தவர்கள் தாயகத்தில் போய் செய்வார்கள் என்று நம்பிக்கையுடன் எதிர்ப்பார்க்கின்றேன்.

ஆனால் அதை நிர்வாக 2009 மட்டும் நிர்வகித்த உலகத்தமிழர் இயக்கம், 2006 இல் தடை செய்யப்பட பின்னர், சில சொத்துக்கள் முக்கியமாக CMR வானொலி , அந்த வானொலிக்கு இப்போது நிர்வகிப்பவர்கள் அதற்கு ஏதாவது செலவு செய்திருந்தால் அந்த செலவுகளை அவர்கள் எடுத்துக் கொண்டு, மிகுதியை கட்டாயமாக தாயகத்துக்கு சேர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும். அவர்களே அதை செய்யலாம். ஒரு டிரஸ்ட் அறக்கடடளை ஒன்றை உருவாக்கலாம்.

தேசிய சொத்துக்களான சிவிஸி வானொளி, TVI இருந்தது, ஒரு அலுவலகம் கட்டிடம் ஒன்று இருந்தது, 39 கோஸந்தி Road , இதை விட கோவில் இருந்தது, கோவில், ஆனால் அவர்கள் தொடர்ந்து நடத்தி வருகின்றார்கள். எதிர் காலத்தில் தாயகத்தில் ஏதாவது செய்வார்கள் என்ற நம்பிக்கை .

இதை விட வேறு நிறுவனங்கள் எட்டு நிறுவனங்கள் தொடர்ந்து உலகத்தமிழ் இயக்கத்தின் ஆதரவு அமைப்பு அல்லாவிடில் அவர்களுக்கு விரும்பியவர்களால் கட்டுப்படுத்தப்படு கொண்டு வருகின்றது, அந்த நிதியை ஒரு அறக்கட்டளை போட்டு செய்வோம், என்று ஒரு பத்திரிகையாளர் மாநாடும் வைத்தார்கள் ஆனால், இதுவரை எந்த இதுவும் முன்னெடுக்கப்படவில்லை. அவர்கள் செய்ய வேண்டும்...

இந்த கருத்துக்களை நான் ஏன் சொல்லுகின்றேன் என்றால், நாங்கள் எல்லாரும் சேர்ந்து பயணிக்க வேண்டும். எதிர் காலத்தில் நாடு கடந்த அரசையும் பலப்படுத்தி எமது போராடடத்தை முன்னெடுக்கவேண்டும்.



அந்த எட்டு நிறுவனங்களும் அவர்கள் சரியாக பயன்படுத்தவில்லை. தமிழ் தொழிநுட்ப கல்லூரி, CTR வானொலி, உலகத்தமிழர் பத்திரிகை, வணிகம் புத்தகம். வணிகம் புத்தகம் பத்தி சொல்லணும். தற்போது இந்த வருடத்திலிருந்து எம்மோடு சேர்ந்து பயணிக்க ஆரம்பித்துள்ளார். இப்போது நடந்தும் வருகிறது. இன்னும் மூன்று நிறுவனங்கள் அதாவது விளையாட்டு துறை என நினைக்கின்றேன்.

CTR வானொலி, TVI , அலுவலகம், சுரபி இவையெல்லாமே இன்று ஒரு தனிப்பட்ட சொத்தாக மாற்றப்படுள்ளது. சுரபி அங்காடி தனது property tax கட்டமுடியாதுள்ளது. Trust க்கு வருவோம் என்று கூறியிருக்கிறரர்கள். மற்றவர்கள் சிலர் கதைக்கவே முன்வருகின்றார்கள் இல்லை.

TVI மக்களுக்கான தொடங்கப் பட்டது அது 1.5 மில்லியனுக்கு விற்கப்பட்டது. அந்த காசு முழுக்க தாயகத்துக்கு போகும் என்று ஒரு அறிவித்தல் விட்டார்கள். பத்திரிகை யாளர் மாநாடும் செய்தார்கள். ஆனால் இதுவரை அதற்கான காசு போகவில்லை, ஆனால் விற்கப்பட இடத்திலிருந்து மாத மாதம் போய்க்கொண்டிருக்கினறது ஆனால் அங்கு போகவில்லை.

மிக முக்கியமான பொறுப்பில் உள்ளவர்கள், சில அமைப்பிகளின் தலைவர் எல்லாம் அந்த TVI விடயத்தில் தொடர்பாக இருக்கின்றார். கனேடியன் தமிழ் காங்கிரஸ் தலைவர் அதில் தொடப்புடையவராக இருக்கின்றார். அவர்கள் அதற்கான பொறுப்புக்கூறல் வேண்டும்.

இந்த நேரத்தில் நான் இன்னொரு விடயமும் குறிப்பிடவேண்டும் கனேடியன் தமிழ் காங்கிரஸ் மற்றும் வேறு அமைப்புகளும் சில வேலைத்திட்டங்களை முனனெடுத்தார் கள். செய்து முடிக்கப்படவேண்டும். ஊர்ச் சங்கங்களில் இருந்து காசுகளை வாங்கி " தென்ன மரவாடி என்ற வேலைத்திட்டத்துக்கு முன்மொழிந்து போனார்கள். ஆனால் அங்கு காசு போய் அந்தவேலைத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை. மிக முக்கியமானது பொறுப்பு எடுத்தவர்கள் நடந்து முடிக்கவில்லை. திரும்பவும் பத்திரிகையாளர் மாநாடு வைத்து அதை சொல்லவேண்டிய தேவை இருக்கிறது.

அதே போல் வேறு அமைப்புக்கள் பொதுமக்களிடம் இருந்த காசு சேர்த்து வேலை திட்டங்களை முன்னெடுத்தார்கள் என்றார் அவர்கள் அந்த வேலையை சரியாக செய்கிறார்கள் என்பதை எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தணும். நான் இதை முக்கியமாக சொல்வது என்னவென்றால், நாங்கள் இதை குரோதத்திற்காகவோ, அல்லது அவர்களை தாக்குவதற்கோ இல்லை. மாவீரர்கள் குடும்பங்கள், போராளிகள் எல்லாரும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

ஒரு சில கணக்குகள் இல்லாமல் இருக்கலாம். அதை எல்லாம் சரியாக்கி கொண்டு எல்லோரும் ஒரே திசையில் பயணிக்க வேண்டுமென்பது தான் என் கருத்து. மக்களும் இதை எதிர்பார்க்கிறார்கள். இந்த சொத்துக்களை வைத்துக் கொண்டு இருப்பவர்களும் குறிப்பாக இந்த 39 பில்டிங் வைத்திருப்பவர்கள் எல்லாம் எந்த ஒரு செயல்திட்டத்திலும் ஈடுபடவில்லை என்பது கவலைக்குரியது. நாங்கள் அங்கத்தவர்கள் எல்லோரும் 50, 100 என்று போட்டு தான் அந்த பில்டிங் வாங்கினோம். எங்களுடைய தேவைகளுக்காக அலுவலகத்தை பாவித்து கொண்டு motgage ஐ கட்டி கொண்டிருந்தோம். அது டபுள் விலையாக வந்த பிறகும் அதை செய்யாதது மிக கவலைக்குரிய விஷயம். அவர்கள் எல்லோரும் அதை முன்னெடுக்கணும். தேசியத்தலைவர் வரத்தான் கணக்கு முடிப்பேன் என்று சொல்வது மிகவும் வருத்தத்துக்கு உரியது. தலைவர் வந்தால் சந்தோஷப்படுவோம். இதை மக்களுக்கு கொண்டு போய் சேருங்கள்.



**உலகத்தமிழர் அமைப்பின் முன்னாள் தலைவர் ரெஜி அவர்களது செவ்வியை இந்த இணைப்பில் பார்வையிடலாம் www.biztha.com/video/Speech1**

குற்ங்களுக்கும் எமது மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கும் எமது இனம் சந்தித்த இன அழிப்பிற்கும் எதிரான குரலாக புலம்பெயர் சமூகத்தின் குரல் ஒலிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

விடுதலையின் பெயரால் நிதி சேகரிப்பில் ஈடுபட்டவர்களில் சிலர் வளமான வாழ்வினை

இவர்களைப் போலவே இன்னும் சிலரும் தேசியத்தின் சொத்துக்கள் குறித்தான தமது ஆதங்கங்களை தமக்கு நெருக்கமானவர்களிடம் வெளிப்படுத்தி வருகின்றாரகள்;. ஆனால் இவ்வாறான கருத்து வெளிப்பாடுகாளல் இந்த சொத்துக்களை மீளப் பெற்றுக் கொள்ள முடியாது.

**தேசியத்தின் சொத்துக்களை மீப்பதற்கு என்ன**

அவரிடம் அது இருக்கின்றது இவரிடம் இது இருக்கின்றது இது தேசியத்தின் சொத்து என்பதான் சொல்லாடல்கள் மட்டுமே எமக்கு கேட்கின்றன ஆனால் அவற்றை உறுதிப்படுத்தும் வல்லமை மிக்கவர்கள் எல்லாம் வாய் மூடி மௌனமாகவே இருக்கின்றார்கள்.

இந்த சொத்து விபரங்களை இதுவரை எவரும் வெளிப்படையாக

வேண்டிய துர்பாக்கிய நிலையினையும் இது எமக்கு ஏற்படுத்தி விட்டுள்ளது.

எது உண்மை எது பொய் என்று தெரியாத சூனிய வெளிக்குள் தமிழ் சமூகம் தள்ளப்பட்டு நிற்கின்றது.

உண்மையான நிலைமைகளை தெரிந்த பலரும் தமக்கேன் வீண் வம்பு என்று தமது சோலிகளை பார்க்கத் தொடங்கி விட்டுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கனேடிய தமிழர் தேசிய அவையின் பேச்சாளர் தேவா சபாபதி

பொதுமக்களால் இங்கே கொடுக்கப் பட்ட சொத்துக்கள் எங்கே என்ற கேள்வி பலரிடம் எழுந்துக்கொண்டிருக்கிறது. அந்த கேள்விகளுக்கான விடைகளை கூட இங்கிருக்கின்ற ஊடகங்கள் வெளிக்கொண்டு வர வேண்டும்.

உதாரணமாக இங்கிருக்கின்ற TVI , CMR போன்ற ஊடகங்களை இங்கிருக்கின்ற ஊடகங்கள் மக்கள் முன்னாள் வெளிக்கொண்டு வரவேண்டும் . சுரபி எனும் பல்பொருள் அங்காடி மக்களால் வாங்கப்பட்டது. அதை வெளிக்கொணரவேண்டும். இவை மாத்திரமல்ல. கனடா கந்தசாமி கோவிலுக்கு சொந்தமான வீடு விற்கப்பட்டிருக்கின்றது. அதனுடைய கணக்கை மக்கள் மன்றத்திலே வெளிக்கொணர வேண்டும். இவை மாத்திரமல்ல.. keel அண்ட் finch உள்ள ஒரு அடுக்குமாடி கட்டிடம் 6 மாதத்துக்கு முன்பாக விற்கப்பட்டு ஏழு மலசல கூடம் கட்டி கணக்கு முடிக்கப்படுள்ளது. அவைகளும் வெளிக்கொணரப்படவேண்டும் . இவை மட்டுமா? பொசிடினாவில் உள்ள தடைசெய்யப்பட அன்று உலகத்தமிழர்களுடைய கட்டிடம் ஒனபது மில்லியனுக்கு விற்கப்பட்டிருக்கின்றது. தலைவர் வந்தால் கணக்கு காட்டுவோம் என்கின்றீர்களே ?

தலைவர் நீங்கள் அங்கிருக்கின்ற கஷ்டப்பட்ட உறவுகளுக்கு உதவி செய்தால் தலைவர் வந்தாலும், உங்களை பாராட்டுவார். நீங்கள் இதை சுருட்டுவதற்காக உங்களுக்குள் நீங்களே போடப்பட்டிருக்கினற ஒரு மாயை. அதன் காரணமாக கூறுகின்றேன். தமிழர்களால் உருவாக்கப்பட்டு 2006 ஆம் ஆண்டுக்கு முன்பாக வேண்டப்படட அத்தனை சொத்துக்களும் இங்கிருக்கின்ற ஊடங்கள் வெளிப்படுத்த வேண்டும்.

இங்கிருக்கின்ற ஊடகங்கள் நேர்மையாக செயற்படுவையாக இருந்தால், மக்களால் வேண்டப்பட்ட சொத்துக்கள் மக்களிடமே செல்ல வேண்டும். அதற்கு வெளிப்படையான உங்களுடைய ஆதரவு இருக்கவேண்டும். ஆகவே ஊடகங்கள் ஊடக தர்மம் என்றால் அதுதான் ஊடக தர்மம். ஆகவே விளம்பரங்களை போடுவதோ , Cut and Paste மூலம் செய்திகளை போடுவதோ ஊடகங்களின் வேலையல்ல. சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவது தான் ஊடங்களில் வேலை.



**கனேடிய தமிழர் தேசிய அவையின் பேச்சாளர் தேவா சபாபதி அவர்களின் உரையினை இந்த இணைப்பில் பார்வையிடலாம்**
www.biztha.com/video/Speech2

விடுதலைப் போரின் பெயரால் தங்கள் பொருளாதாரத்தைத் தொலைத்தவர்களும் அவை அறவிடமுடியாக் கடன் என்ற கணக்கில் அவற்றை போட்டு விட்டு கடந்து போய்க் கொண்டிருக்கின்றார்கள்.

அதனையும் தாண்டி தாம் பணம் கொடுத்தவர்களை கேள்வி கேட்க முயன்றவர்கள் 'பயங்கரவாதிகளுக்கு' உதவினீர்கள் என்று காவல்துறையில் காட்டிக் கொடுக்கப்படுவீர்கள் என்ற அச்சுறத்தலால் பயமுறுத்தப்பட்ட சம்பவங்களும் நடந்தேறுகின்றன.

### விடுதலைப் புலிகள் மீதான தடையும் தேசியத்தின் சொத்துக்களும்

யுத்தம் முடிவடைந்த 10 ஆண்டுகள் நெருங்கும் தருணத்திலும் விடுதலைப் புலிகள் மீதான தடையை பலம்பெயர் நாடுகளில் நீக்குவதற்கு காத்திரமான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படாமல் இருப்பதன் பின்னணியும் கூட சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது.

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால் பணம் கொடுத்தவர்கள் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான வாசல்கள் திறக்கும் என்று எதிர்வு கூறப்படுகின்றது. அவ்வாறு ஒரு நிலை உருவானால் பொதுச் சொத்துக்களை பதுக்கியவர்கள் சட்டத்திற்கு பதிலளிக்கும் நிலை உருவாகும் என்றும் சொல்லப்படுகின்றது.

இந்த விடயம் குறித்து வெளிப்படையான உரையாடல்களை நடத்துவதற்கும் விடுதலையின் பெயரால் சேகரிக்கப்பட்டு தனி நபர்களால் உரிமை கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டமைப்புகளை மக்கள் மயப்படுத்த வேண்டும் என்று இடைக்கிடை சில குரல்கள் கேட்கும். பின்னர் அவையும் காணமல் போய்விடும்.

### தேசியத்தின் சொத்துகளுக்கான பொது நிதியம் ஒன்று சாத்தியமா ?

பொது மக்கள் பணத்தில் உருவாக்கப்பட்ட கட்டமைப்புகள் பொது நிதியத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு அதனை நிர்வகிப்பதற்கான சபை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

அது வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட வேண்டும் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் வாழக் கூடிய தமிழ் சமூகத்திற்கு பல்வேறு வழிகளிலும் உதவிகளை அது வழங்க வேண்டும்.

எமது தயாக மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் திட்டங்களுக்கு அது பங்களிப்பை வழங்க வேண்டும்.

குறிப்பாக எமது தாயகம் எதிர் கொண்ட சவால்களால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த சரியான ஆதாரங்களை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதுவரை காலமான விடுதலைப் போர் ஏற்படுத்திய அவலங்கள் , நாம் இழந்த உறவுகளின் எண்ணிக்கை என்ன, மாவீர்களாய் மடிந்தவர்;, காணமல் ஆக்கப்பட்டவர்கள், அங்கவீனமானவர்கள், உளவியல் பாதிப்புக்களுக்கு உட்டபட்டவர்கள் என ஏராளமான தகவல்கள் எவையும் இதுவரை திரடப்படவில்லை.

எமது விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதற்கான எந்த ஏற்பாடுகளும் இதுவரை செய்யப்படவில்லை.

புலம்பெயர்ந்த தேசங்களில் வாழும் ஏனைய சமூகங்களுக்கு இருப்பது போன்ற வரலாற்று காப்பகங்களோ, அருங்காட்சியங்களோ எமது சமூகத்திற்கு இல்லை.

எமது தமிழ் சமூகத்தின் அடையாளங்களை வெளிப்படுத்தக் கூடியதான ஒரு சமூக நிலையம் கூட இல்லை.

புலம்பெயர் நாடுகளில் இருக்கும் அரசியல் கட்சிகளுடன் ஒரு சமூகமாக நாம் பேரம் பேசக் கூயடிதான எந்த ஒரு கட்டமைப்பும் இல்லை.

இத்தனை இல்லைகளுக்கும் காரணம் எமது தமிழ் அமைப்புகள் மீதான நம்பிக்கைகளை மக்கள் இழந்து வருவது தான்.

### தமிழர் அமைப்புகள் யாரால் யாருக்கா ?

கனேடிய தமிழர் பேரவை, கனேடியத் தமிழர் தேசிய அவை, நாடு கடந்த அரசாங்கம் என்று பெயர் சொல்லும் அமைப்புகள் உருவான போதும் இங்கே செயல்பட்டு வருகின்ற போதிலும் , ஏன் இந்த கேள்விகளுக்கு எங்களால் பதில் காண முடியாமல் போகின்றது.

அல்லது ஏன் இந்த விடயங்களை இந்த அமைப்புகள் நடைமுறைப்படுத்த தவறுகின்றன என்ற கேள்வியும் எழுகின்றது.

இவற்றை ஏற்படுத்துவதற்கு வெளிப்படைத்தன்மையும் நம்பிக்கையும் கொண்ட ஒரு பொதுவான கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டியது அவசியம். அந்த அமைப்பு பொறுப்பு கூறல் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். தமிழ் சமூகத்தின் சகல மட்டத்திலும் உள்ளவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கி சமூக நோக்கில் செயல்பட வேண்டும்.

தனி மனிதர்களை முன்னிலைப்படுத்தும் செயல்பாடுகளில் ஈடுபடாமல் ஒரு தமிழ் சமூகமாக நாம் முன்னேறுவதற்கான ஏற்பாடுகளை அது மேற்கொள் வேண்டும்.

பொது மக்களின் பெயரால் உருவாக்கப்பட்ட அனைத்து கட்டமைப்புகளையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து வெளிப்படைத் தன்மையோடு அவற்றின் செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். வரவு செலவுத் திட்டங்கள் பொதுமக்கள் பார்வைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும்.

### தமிழ் சமூகம் சந்திக்கும் சவால்களும் தீர்வுக்கான வழிகளும்

சமூகத்தின் குரல்களை கேட்பதற்கான பொறி முறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அந்த குரல் சகல தரப்புகளையும் சென்றடைவதற்கான ஏது நிலைகள் உருவாக்கப்பட வேண்டும்.

புலம்பெயர் தேசங்களில் தமிழ் சமூகமாக நாம் எதிர் கொள்ளும் சவால்களுக்கு தீர்வுகளை தேடும் முனைப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழ் மூதாளர்கள் எதிர் கொள்ளும் சவால்கள், குடும்ப வன்முறைகள், இளம் சமூகம் சந்திக்கும் பிரச்சினைகள், உள வள ஆற்றுப்புடுத்தலுக்கான தேவைகள், போதைப் பழக்கத்தில் இருந்து விடுவிப்பதற்கான முயற்சிகள் என பல விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இந்த பணிகளை முன்னெடுப்பதற்கு ஆளுமை கொண்ட எமது இளம் சமூகம் முன் வரவேண்டும். இதனை சரியான வழியில் கொண்டு செல்லும் தலைமைத்துவங்களை நாம் அடையாளம் காண வேண்டும். தன்னலமற்று சமூக நோக்கில் எம்மை சரியாக வழிநடத்தக் கூடிய தலைவர்கள் எமது சமூகத்தில் இருந்து நாம் உருவாக்க வேண்டும்.

தவறுகளில் இருந்து நாம் பாடங்களை கற்றுக் கொண்டு முன்னெறுவதற்கு அது ஒன்று தான் மார்க்கம்.

அதனை விடுத்து அவர் எடுத்தார் இவர் மறைத்தார் என்று ஏட்டிக்கு போட்டியான அறிக்கைகளை விட்டுக் கொண்டிருப்பதால் ஆகிவிடப் போவது ஒன்றும் இல்லை.

இப்போது எங்கள் முன்னுள்ள மிகப் பெரிய கேள்வி இந்த பூனைக்கு யார் மணி கட்டுவது ? என்பத மட்டும் தான்.

**ரமணன் சந்திரசேகரமூர்த்தி**

**Business Meeting, Classroom & Event Space Available**

Accommodate Up to 50 people
Chairs & Tables included
Full Kitchen facility available
Audio Visual Equipments available
Available all day
Free Wi-Fi

Frontline Community Services
3031 Markham Road # 27
Scarborough, ON
(Markham & Steel)
info@ fcscanada.org
416-840-4425

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துத் தரப்பு மக்களின் குரல்களையும் கேட்போம்... அதுதான் இப்போதைய தேவை!

## அதிக பட்சம் இன்னும் பத்து வருடங்கள்தான் தாயகத்துக்கும் புலம்பெயர் தேசத்துக்குமான தொடர்பு



கடந்த இரண்டு வருடங்களாக தாயகத்துக்கு வந்து செல்லும் புலம் பெயர் தேசத்து செயற்பாட்டாளர் ஒருவரை கடந்த மாவீரர் தினத்துக்குப் பின்னரான நாளொன்றில் சந்தித்தேன். மாவீரர் தினத்தன்று காலையில் கிளிநொச்சி கனகபுரம் துயிலுமில்லத்துக்கும், மாலையில் கோப்பாய் துயிலு மில்லத்துக்கும் சென்றதாக அவர் கூறினார். இலங்கையில் ஆட்சிக்குழப்பம் ஏற்பட்டிருக்கின்ற நிலையிலும், நெருக்கடிகளை மீறி ஆயிரக்கணக்கான மக்கள் மாவீரர் துயிலுமில்லங்களை நோக்கி வந்திருப்பதைக் காணும் போது, ஈழ விடுதலைப் போராட்டத்துக்கான அர்ப்பணிப்பு என்பது வீரியத் தோடு இருப்பதை உணர முடிந்ததாகக் கூறினார். அவரே, அவசர அவசரமாக, இன்னொரு விடயத்தையும் கூறினார், மாவீரர் தினத்தைத் தாண்டி தாயக மக்களை யோசிக்கும் போது, போருக்குப் பின்னரான தாக்கங்களிலிருந்து சிறிதும் வெளிவராத மக்களின் துன்பம், தன்னுள் குற்ற உணர்ச்சியை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டார். இவ்வாறான வார்த்தை களை புலம்பெயர் தேசத்து செயற் பாட்டாளர்கள் மற்றும் நண்பர் களைச் சந்திக்கின்ற எல்லாத் தருணங்களிலும் கேட்டிருக்கிறேன்.

கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் அஞ்சலி செலுத்தும் நேரத்தில் (கழுகுப் பார்வையில்) எடுக்கப்பட்ட காணொளி ஒன்று சமூக ஊடகங்களில் அதிகமாகப் பகிரப்பட்டது. ஆயிரக்கணக்கான தீபங்களின் வீச்சம் பார்ப்பவர்களை புல்லரிக்க வைத்தது, உணர்ச்சி மேலீட்டால் கண்ணீரை வரவழைத்தது. ஆனால், அந்த உணர்ச்சி மேலீட்டுக்கு அப்பாலான கேள்வியையோ, அது கொடுக்கும் கடப்பாட்டையோ யாரும் அவ்வளவாக கணக்கில் எடுப்பதில்லை. அதுதான், முள்ளிவாய்க்கால் முடிவுக்குப் பின்னரான கடந்த ஒன்பது ஆண்டுகளில் தமிழ் மக்கள் மீளெழுவது குறித்து சிந்திக்க முடியாமைக்கான காரணமாகும்.

முப்பது வருடங்களுக்கு மேலாக கொடூர ஆயுத மோதல்களைச் சந்தித்த சமூகமாகவும், விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கின்ற சமூகமாகவும் தமிழ் மக்கள் அரசியல், சமூக, பொருளாதார ரீதியில் மிகுந்த அக்கறையோடு இருக்க வேண்டும். குறிப்பாக, போரின் விளைவுகளை பெரும் வடுக்களாக தாங்கியிருக்கின்ற சமூகமாக ஒவ்வொருவரின் கடப்பாடும் மிகப்பெரியது. ஆனால், தமிழ் மக்களிடையே நிகழ்ந்து கொண்டிருப்பது என்ன? ஏன் ஒன்பதரை வருடங்களின் பின்னரும் முள்ளிவாய்க்காலில் எப்படி நின்றோமோ அதே மாதிரியான நிலையொன்றோடு இன்றைக்கும் நிற்க வேண்டியிருக்கின்றது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மற்றும் மாவீரர் நாட்களில் வெளிப் படுத்தப்படும் கூட்டுணர்வினை, நாம் ஏன் மற்றைய நாட்களில் வெளிப்படுத்த முடியவில்லை?

2015 ஆட்சி மாற்றத்துக்குப் பின்னரான நாட்களில் புலம்பெயர் தேசத்து செயற்பாட்டாளர்கள், குறிப்பாக இளம் செயற்பாட்டாளர்கள் குறிப்பிட்டளவில் தாயகத்தை நோக்கி வந்தார்கள். இன்னமும் அது தொடர்கிறது. ஆனாலும், போக்குவரத்து அச்சுறுத்தல் இருந்த காலத்தில் தாயக மக்களிடமும் புலம்பெயர் மக்களிடமும் காணப்பட்ட இடைவெளியின் அளவு, போக்குவரத்து அச்சுறுத்தல்கள் குறைந்துவிட்ட கடந்த மூன்று ஆண்டுகளிலும் கூட முன்னேற்றம் அடையவில்லை. புலம்பெயர் தேசத்திலிருந்து வருகை தரும் செயற்பாட்டாளர்கள், தங்களுக்கு இணக்கமான தரப்புக்களை தாயகத்தில் தேடுகின்றனர். அவ்வாறான தரப்பு என்பது, எப்போதுமே சனத்தொகையில் மிகமிக சிறியதாகவே இருக்கின்றது. ஆனால், அப்படியான தரப்புக் களோடு உரையாடல்களை நடத்தி விட்டு, பெருமளவு மக்களின் மனங்களை புரிந்து கொள்வதிலிருந்து தவறிவிடுகிறார்கள். அரசியல் கருத்தியல் ரீதியில் ஒத்த நிலையில் இருப்பவர்களோடு, இணைந்து வேலை செய்வதோ, திட்டங்களை வகுப்பதோ தப்பில்லைத்தான். ஆனால், பெருமளவான மக்களின் குரல்களை கேட்பதிலிருந்தே தவறி நிற்கின்ற தருணம் என்பது, இடைவெளியின் அளவை எந்த விதத்திலும் குறைப்பதற்கு உதவவில்லை. மாறாக, ஒருவித ஒவ்வாமையையே ஏற்படுத்தி விட்டிருக்கின்றது.

அதிக பட்சம் இன்னும் பத்து வருடங்கள்தான் தாயகத்துக்கும் புலம்பெயர் தேசத்துக்குமான தொடர்பு என்பது நேரடியான தலைமுறைகளுடனானதாக இருக்கும். அதன்பின்னர், தொடர்பு என்பது, புலம்பெயர் தேசங்களிலேயே பிறந்த தலைமுறைகளுக்கும் தாயகத்தில் பிறந்த தலைமுறைக்குமானதாக மாறிவிடும். அது, இன்னும் இன்னும் இடைவெளியின் அளவை அதிகரிக்கவே செய்யும். புலம்பெயர் தேசத்தில் பிறந்த பிள்ளைக்கு தன்னுடைய பிறந்த நாடு, முதல்

**பொறுப்புக்களை நிறைவேற்றாது விட்டு, குற்ற உணர்ச்சிகள் குறித்து பேசி எந்தப் பயனும் இல்லை. அவ்வாறான கட்டத்தில்தான், இனி வரப்போகும் நாட்களிலாவது, குழும மனநிலைகளைக் கடந்து எல்லா மக்களின் குரல்களையும் கேட்டு, அதன்போக்கில் இயங்கும் சூழலொன்றை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவாக இருப்பது தவிர்க்க முடியாதது. தன்னுடைய தாய் வழி, தந்தை வழி தேசம் என்பது இரண்டாம் பட்சமாக மாறும். அதுவும், உலக மயமாக்கம் கோலோச்சும் இன்றைய காலத்தில், தேசியவாதம் இடர்பாடுகளைச் சந்தித்து, புதிய தலைமுறையிடம், தமிழர் தேசத்துக்கான கடப்பாடு ஏன் என்பதையே கொண்டு சேர்க்க முடியாத ஒரு சூழலை உருவாக்கிவிடும். இதனை, 1980களின் ஆரம்பத்தில் புலம்பெயர்ந்து விட்டவர்களுக்கும் மற்றவர் களுக்குமான இடைவெளியின் அளவைப் பார்த்தால் புரிந்து கொள்ள முடியும். இயல்பாக, அவர்களிடம் தமிழும், தமிழர் தேசமும் இரண்டாம் பட்சமாகிவிடுகின்றன. அவ்வாறான சூழலை நாங்கள் மிகவேகமாக சரிசெய்ய வேண்டும்.

அதன்போக்கில்தான், புலம் பெயர் செயற்பாட்டாளர்கள், அமைப்புக்களை தாயகத்திலுள்ள அனைத்துத் தரப்பினரோடும் உரையாடல்களை நிகழ்த்த வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. அரசியல் ரீதியாக, சிந்தனை ரீதியாக முரண்பாடுகள் ஏற்படுவது சகஜமானது. ஆனால், அந்த முரண்பாட்டினை ஒரு உள்ளக போராக நாம் மாற்ற முடியாது. முரண்பாடுகளுக்கு அப்பால் நின்று இணக்கப்பாட்டின் புள்ளியை, உரையாடல்களின் வழியில் கண்டடைய வேண்டும். மாறாக, குழும மனநிலையில் மாத்திரம் நின்று கொண்டு, தாயகச் சூழலை அவர்கள் சுமந்திரனின் ஆட்கள், அவர்கள் விக்னேஸ்வரனின் ஆட்கள், அவர்கள் கஜேந்திரகுமாரின் ஆட்கள், அவர்கள் டக்ளஸின் ஆட்கள் என்று பிரிவுகளை அடையாளங்களை உருவாக்கிவிட்டு, அதன் மீது நின்று ஒழுக ஆரம்பித்தால், இடைவெளியின் அளவு அதிகரிப்பதை எந்த வகையிலும் தவிர்க்க முடியாது.

இன்னொரு பக்கத்தில், தாயகத்தை நோக்கி வரும் செயற்பாட்டாளர்கள், தாயகத்தின் உண்மையான நிலைமையை உணர்ந்தாலும், அதில் தங்களுக்கு எது தேவையோ அதனை எடுத்துக் கொண்டு மற்றவை பற்றி பேசுவதே இல்லை. குறிப்பாக, மக்களின் பொருளாதாரம், தொழில் தேவைகள் பற்றி எந்தச் சிந்தையையும் வெளிப்படுத்துவதில்லை. அதிலும், குறிப்பாக, முன்னாள் போராளிகளும், போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்துக்காக அல்லாடும் மக்களைக் குறித்தும் பேசுவதில்லை. இது ஒருவகையில், சுயநல போக்கிலானதா என்கிற கேள்வியை எழுப்பிவிடுகின்றது. தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை இராணுவம் இழைத்த போர் குற்றங்களுக்கு எதிராக நாம் நீதியைத் தேடியே ஆக வேண்டும். காணாமலாக்கப்பட்டவர்களை மீட்பதற்காக போராடி ஆக வேண்டும். இது, ஒவ்வொருவரினதும் கடமை. அதனை தாயகத்திலும் சர்வதேசத்திலும் தளராது முன்னெடுக்க வேண்டும். அதில், எந்தவித மாற்றுக்கருத்துக்களும் இல்லை. அதுபோலவே, தாயகத்திலுள்ள மக்களின் சமூக— பொருளாதார பிரச்சினைகளை, குறிப்பாக வாழ்வாதாரப் பிரச்சினைகளையும் பேச வேண்டும். அவை, குறித்தும் புலம்பெயர் செயற்பாட்டாளர்களும் அமைப்புக்களும் அதிக கரிசனை கொள்ள வேண்டும்.

ஏனெனில், காலம் வேகமாக உருண்டோடிவிடும். அது, நாம் செய்ய வேண்டிய வேலைகளை எம்மிடமிருந்து அகற்றிவிடும். அவ்வாறான சூழலொன்றையே நாம் தற்போது சந்தித்து நிற்கின்றோம். அப்படியான தருணத்தில், குற்ற உணர்ச்சிகள் குறித்து நாம் பேசுவது என்பது தார்மீகமற்றது. ஏனெனில், எங்களது பொறுப்புக்களை நிறைவேற்றாது விட்டு, குற்ற உணர்ச்சிகள் குறித்து பேசி எந்தப் பயனும் இல்லை. அவ்வாறான கட்டத்தில்தான், இனி வரப்போகும் நாட்களிலாவது, குழும மனநிலைகளைக் கடந்து எல்லா மக்களின் குரல்களையும் கேட்டு, அதன்போக்கில் இயங்கும் சூழலொன்றை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு, கருத்தியல் முரண்கள் தாண்டி முன்வர வேண்டும். அதுதான், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், மாவீரர் நாட்களின் மீது நாம் வெளிப்படுத்தும் கடப்பாடாக இருக்கும்.

**தாயகத்தை நோக்கி வரும் செயற்பாட்டாளர்கள், தாயகத்தின் உண்மையான நிலைமையை உணர்ந்தாலும், அதில் தங்களுக்கு எது தேவையோ அதனை எடுத்துக் கொண்டு மற்றவை பற்றி பேசுவதே இல்லை. குறிப்பாக, மக்களின் பொருளாதாரம், தொழில் தேவைகள் பற்றி எந்தச் சிந்தையையும் வெளிப்படுத்துவதில்லை.**

புருஜோத்தமன் தங்கமயில்


வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?





அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.

SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A
MOTOR VEHICLE ACCIDENT
Fractures | Spinal Cord Injury | Brain or Head Injury | Internal Injuries | Scarring or Disfigurement | Catastraphic Injuries

FOR CASH SETTLEMENT KNOW YOUR RIGHTS AGAINST THE INSURANCE COMPANY.

MATRIX LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

Over 30 Years Combined Experience
Even if you are at fault:
Unemployed . Employed
Passenger . Pedestrian
Cyclist . Travelling in public transit . Student
Housewife.





DON'T BE MISLEAD INTO TAKING A POOR OR SMALL
CASH SETTLEMENT
IF YOU ARE INJURED PHYSICALLY AND/ OR PSYCHOLOGICALLY
CALL US NOW!

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்.

தீபன்
(416) 505-9804
(416) 831-4444
24 Direct Line

2190 Warden Ave., Suite 202, Toronto, ON M1T 1V6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவுதிக்கு எதிராக அமெரிக்காவின் நகர்வு



அமெரிக்க செனட் சபை நிறைவேற்றவிருக்கும் தீர்மானம் சவூதிய அண்மைய கொள்கைகள் அமெரிக்காவின் மத்திய கிழக்கு பிராந்திய நலன்களுக்கு பாதகமாக இருக்கமாயினும் அமெரிக்க தாற்பரியங்களுக்கு விரோதமானது என்ற அடிப்படையில் — குறித்த தீர்மானம், பத்திரிகையாளர் ஜாமால் கஷோகிஜி கொலை செய்யப்பட்டதில் இளவரசர் முகம்மது பின் சல்மான் "உடந்தையாக" இருந்தார் என நிறைவேற்றப்படவுள்ளமை, மத்தியகிழக்கில் அமெரிக்காவின் ஆதிக்கத்தை வேறு ஒரு திசைக்கு திருப்புவதிலும், அதன் அடிப்படியில் சவூதி தொடர்ச்சியாக யேமனில் நடாத்தும் யுத்தத்தில் அமெரிக்கா ஒரு பக்க சார்பு நிலையை எடுக்கவேண்டிய நிலைக்கு வருகின்றமையையுமே காட்டுகின்றது. குறித்த 6 பக்க தீர்மானம் இது தவிர, ஊடகவியலாளர்கள் ஒடுக்குமுறை, யேமெனில் மேற்கொள்ளும் மனிதாபிமானத்துக்கு எதிரான யுத்தம், மாற்றுக்கொள்கையாளர்களை சிறைப்படுத்தல் மற்றும் சவுதியில் மனிதஉரிமைகளை பெருமளவு வரையறைசெய்துள்ளமை என பல நிரல்களில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு தீர்மானமாக — வெளிப்படையான கூறின் — ஐக்கிய அமெரிக்க மற்றும் சவுதிக்கு இடையிலான நட்புறவை தகர்க்கக்கூடிய ஒரு வெளிப்பாடாகவே பார்க்கப்படுகின்றது. இத்தீர்மானம், இளவரசர் முகமதுவின் கொள்கைகளை மட்டுமல்லாமல், அவரது நெருங்கிய நட்பு நாடான ஐக்கிய அரபு இராச்சியத்தின் (கஷோகி கொலைக்குப் பின்னர் சவூதித் இளம் தலைவர் விஜயம் செய்த முதல் நாடு ஐக்கிய அரபு இராச்சியம் என்பது குறிப்பிடத்தக்கது) இளவரசர் முகம்மது பின் ஸாயீடின் அரசியல் நிரலுக்கு எதிராக அமைக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் குறித்த இவ்வாறான நகர்வுக்கு காரணம் என்ன என்பது பற்றியே இப்பத்தி ஆராய்கின்றது.

குறித்த நகர்வு நான்கு விடையங்களை அடிப்படையாக கொண்டது. முதலாவது, சவூதி — அமெரிக்க உறவானது நீண்ட வரலாறு, பிராந்திய மூலோபாய நலன்கள், அரசியல் பிணைப்புக்கள் மற்றும் எண்ணெய் மற்றும் ஆயுத வியாபாரம் என பலதரப்பட்ட வகையில் இணங்கிச்செல்வதாகும். அதனடிப்படையில் பார்க்கப்போனால் குறித்த இத்தீர்மானம் தனியாகவே கஷோகியின் கொலையுடன் மட்டும் சம்பத்தப்பட்டது என்பது சவூதி — அமெரிக்க உறவைப்பொறுத்தவை நம்பமுடியாத ஒன்று.

இரண்டாவது, அண்மையிலேயே சவூதி — கனடா முரண்பாடுகள் கனேடிய தூதுவரை சவூதி தனது நாட்டிலிருந்து மனிதவுரிமை சம்பந்தமாக கனடிய அரசாங்கம் சவுதிக்கு எதிராக வெளியிட்ட கூற்றை கண்டிக்கும் முகமாக வெளியேற்றியிருந்தது. அது தொடர்பில் இப்பத்தியாளர் முன்னொரு பத்தியில் குறிப்பிடுகையில், சவூதி — கனடா உறவுகள் எப்போதும் குறிப்பிடத்தக்க அளவில் பேசப்படவில்லை. மத்திய கிழக்கின் பாதுகாப்பு கட்டமைப்பில் நேட்டோவின் உறுப்புரிமையாக செயல்படும் கனடா, அதனை தாண்டி தனிப்பட்டளவில் சவுதியுடன் எந்தவித பாதுகாப்பு உடன்படிக்கைகளை கொண்டிருக்காமை, ஆயுத உற்பத்தி, மற்றும் சவுதிக்கு யேமென் மீதான போரியலில் நேரடியாக உதவுவதற்கு கனடா விருப்பம் காட்டத்திருந்தமை, இது தவிர கனடா அதன் தளத்தில் இருந்து ஒரு போதும் சவுதிக்கு எதிராக பழிவாங்கும் நடவடிக்கையை மேற்கொள்ளாது என சவூதி கருதுவதுமே காரணமாகும்.

மூன்றாவதாக, சவூதி அரேபிய அரசாங்கத்தின் ஆதரவான யேமென் அரசாங்கம் மற்றும் ஹூதியா போராளிகளுக்கிடையில் இடையே ஸ்வீடனில் போரினை முடிவுக்கு கொண்டுவரும் பொருட்டு மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் சவுதியின் கரங்களையும் மீறி மிக உடனடியான சாதகமானதும், அதன் காரணமாக சவுதியின் பிராந்திய தலைமைத்துவம் தொடர்பில் சவூதியின் நிலைப்பாடு தகர்க்கப்பட்டுள்ளது.

நான்காவதாக, இளவரசர் முஹம்மதுவின் சில நட்பு நாடுகளின் மத்தியில் குறித்த தீர்மானம் கோபத்தைத் தூண்டக்கூடிய ஒன்றாக காணப்பட்டாலும், குறித்த தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அல்லது செயல்படுத்தப்பட்டால், குறிப்பாக அது, ஐக்கிய அரபு இராச்சியத்தை சவுதியின் நேரடி நட்பு வட்டத்திலிருந்து பிறக்கவே செய்யும் என்பதுடன் அது ஐக்கிய அரபு இராச்சிய அடிப்படை மூலோபாயங்களை மறுபரிசீலனை செய்ய ஏதுவாய் இருக்கும். அது அரேபிய மற்றும் மத்திய கிழக்கின் இஸ்லாமிய நவீனத்துவத்தின் ஒரு வழிகாட்டியாக ஐக்கிய அரபு இராச்சியத்தை நிலைநிறுத்தவும், சவுதியின் இறுக்கமான கொள்கைகளில் இருந்து பிராந்திய நாடுகளை விடுவிக்கவும் உதவும் ஒரு முன்னிரலாக அமையும். இவ்வாதத்தை பிரதிபலிப்பதாவவே ஐக்கிய அரபு இராச்சிய இளவரசர் முகமதுவின் நெருங்கிய நண்பரும், அமெரிக்காவுக்கான ஐக்கிய அரபு இராச்சிய தூதுவருமான யூசுப் அல்—ஒடிபா, இளவரசருக்கு அனுப்பிய ஒரு (வெளிக்கசிந்த) மின்னஞ்சலில் பின்வருமாறு தெரிவித்திருந்திருந்தார். "பிராந்திய அரசியலில் சவுதியின் தலைமைத்துவம் தொடர்ச்சியாக இருக்கும் என நான் நினைக்கவில்லை." மேலும், அல்—ஒயிடிபா "இது நீண்ட காலத்தில் நாங்கள் சவுதி அரேபியா மீது ஒரு நல்ல செல்வாக்குடன் இருக்கவும், சவுதியின் மூலோபாய விடயங்களில் நாங்கள் செல்வாக்கு செலுத்தக்கூடியதாய் இருக்கும்" என குறிப்பிட்டிருந்தமை பிராந்தியத்தில் சவுதியில் செல்வாக்குக்கு எதிராக மாற்று தலைமை ஒன்று உருவாக்குவதற்கு நிலைமைகள் உண்டு என்பதையே காட்டுகின்றது.

இவற்றின் அடிப்படையில், மேலும் மேற்கத்தேய நாடுகள் (குறிப்பாக கனடா, மற்றும் ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், ஜேர்மன்) வெளிப்படையாகவே சவுதியை குறித்த கஷோகியின் மரணம் தொடர்பான விடயங்களில் கைவிட்ட நிலையில், அமெரிக்க செனட் சபை தீர்மானத்தை கொண்டுவந்துள்ளது. இது முதலாவதாக அமெரிக்க நிறைவேற்றுத்துறையை குறுகிய கால நலன்களில் அடிப்படையில் இரு தரப்பு வர்த்தக உடன்படிக்கையில் சவுதியை தளர்வு நிலைக்கு கொண்டுவருவதன் மூலம் வர்த்தக இலாபத்தை மீட்டல், மேலும், சவுதியை தொடர்ச்சியாக தனது கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் என்பதற்கான ஒரு உத்தியாக பார்க்கப்படுகின்றது. இரண்டாவதாக, சவூதி தொடர்ச்சியாகவே தனது இறுக்கமான ஜனநாயகத்துக்கு எதிரான தலைமைத்துவம், மற்றும் மனித உரிமைகளை மறுத்தல் என்பதை நடைமுறைப்படுத்துமாயின் அமெரிக்காவும் மேற்கத்தேய நாடுகளும் வேறொரு பிராந்திய நாட்டுடன் நட்பாக செயல்படவேண்டிய அவசியம் ஏற்படும் என்பதை சவுதிக்கு சுட்டிக்காட்டுதல் (அதன் காரணமாகவே குறித்த செனட் நடவடிக்கை ஒரு சட்டவலுவற்ற தீர்மானமாக நிறைவேற்றப்படுகிறது), மூன்றாவதாக, ஐக்கிய அரபு இராச்சியத்தை தனது சொந்த மூலோபாய நகர்வுகளை மேற்கொள்ள சுகந்திரமளித்தல் — அதன் மூலம், சவுதிக்கு அடுத்ததாக இன்னொரு நாட்டை (குறிப்பாக சவுதிக்கு ஆதரவான ஒரு நாட்டை) தனது பிராந்திய நலன்களுக்கு பயன்படுத்தல், நான்கு, மேற்கத்தேய நாடுகள் வரிசையில் அமெரிக்கா தனியாக பிராந்திய நலன்களுக்காக உலக மனித உரிமையையே அடகுவைக்கின்றது என்ற விமர்சனத்திலிருந்து தன்னை பாதுகாத்தல் (யேமென் மனிதாபிமானத்துக்கு எதிரான சவுதியின் நகர்வுகளில் அமெரிக்கா கண்மூடித்தனமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது) என பல காரணிகளின் அடிப்படையிலேயே குறித்த தீர்மானம் முன்மொழியப்பட்டுள்ளது.

ஆகவே, வெளிப்படையாக இது அமெரிக்கா தனது மத்திய கிழக்கு பிராந்திய நலன்களுக்காக மூலோபாய நட்பு நாடான சவுதிக்கு எதிராக தீர்மானம் மேற்கொள்ளுதல் அதன் வெளிவிவாகார கொள்கைக்கு முரணாக அமையும் என தென்பட்டாலும், அதன் உள்ளார்ந்தம் மிகவும் கணிக்கப்பட்ட செயற்ப்பாடே என்பதே ஆழமாக நோக்கப்படவேண்டியதாகும்.

**ஜனகன் முத்துக்குமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழ்த் தரப்பு என்ன செய்யலாம்?

எந்த ஒரு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை அபிவிருத்திக்கு அவசியம் என்று வாதிடப்பட்டதோ எந்த ஒரு நிறைவேற்று அதிகாரத்தின் கீழ்தான் யுத்தத்தை வெல்லக்கூடியதாக இருந்தது என்று எடுத்துக் காட்டப்பட்டதோ அதே நிறைவேற்று அதிகாரம் இப்பொழுது இலங்கைத்தீவை அம்மணமாக்கி நிறுத்தியிருக்கிறது. நிறைவேற்று அதிகாரத்திற்கும் நாடாளுமன்றத்திற்கும் இடையிலான மோதலானது நாட்டை அரசாங்கமற்ற ஒரு நிலைக்குத் தள்ளியிருக்கிறது. சட்டவாக்கத்துறை அதாவது நாடாளுமன்றமே உயர் மன்றமாகும். நீதிபரிபாலனம் அதற்குக் கீழ்ப்பட்டதே என்று முன்பு வாதிடப்பட்டது. ஆனால் இப்பொழுது நீதிபரிபாலனக் கட்டமைப்பிடமே தீர்வை எதிர்பார்க்கும் ஒரு நிலை தோன்றியிருக்கிறது. தீர்ப்பு எப்படியும் அமையலாம். அதை நிறைவேற்று அதிகாரம் எப்படி எதிர்கொள்ளப் போகிறது என்பதே இங்குள்ள பிரச்சினையாகும். அதாவது நாட்டில் நடப்பவற்றைத் தொகுத்துப் பார்த்தால் எல்லாப் பிரச்சினைகளுக்கும் காரணம் நிறைவேற்று அதிகாரமா? என்று கேட்கத் தோன்றும்.

கொழும்பில் உள்ள லிபரல் ஜனநாயகவாதிகளும் பெரும்பாலான புத்திஜீவிகளும், யு.என்.பியினரும் அவ்வாறுதான் கூறி வருகிறார்கள். இலங்கைத்தீவின் ஜனநாயகப் பாரம்பரியத்தை நிறைவேற்று அதிகாரமே நாசமாக்கியது என்றும் அவர்கள் கூறுகிறார்கள். அப்படியென்றால் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட யுத்தத்தில் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கு அவர்களுடைய பதில் என்ன? யுத்தத்தை வெல்வதற்கு ஒரு காரணமாக இருந்த நிறைவேற்று அதிகாரமே இப்பொழுது ஜனநாயகத்தை பாழாக்கியதற்கும் காரணம் என்று கூறப்படுகிறது ஆயின் யுத்தத்தில் பெறப்பட்ட வெற்றியென்பது ஜனநாயகத்தை மதித்து பெறப்படவில்லையென்பதனை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா? மெய்யாகவே இங்கு நிறைவேற்று அதிகாரம் மட்டும்தான் பிரச்சினையா?

**நிச்சயமாக இல்லை. நாட்டில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் குழப்பங்களை பின்வருமாறு விளங்கிக்கொள்ளலாம்.**

**தமிழ் மக்களுக்கு எதிராக யாப்பை மீறி வந்த ஒரு பாரம்பரியம் இப்பொழுது அதன் உச்சக்கட்ட விகாரத்தை அடைந்திருக்கிறது. அதாவது இன ஒடுக்கு முறையே யாப்பு மீறல் பாரம்பரியத்தின் தொடக்கமாகும். யாப்பு தமிழர்களை ஒடுக்கும் ஒரு கருவியாகவே பயன்படுத்தப்பட்டது. எப்பொழுது யாப்பு இன ஒடுக்கு முறையின் கருவியாக மாறியதோ அப்பொழுதே இலங்கைத்தீவின் யாப்புப் பாரம்பரியம் அதன் புனிதத்தை இழந்து விட்டது. அப்பொழுதே இலங்கைத்தீவின் ஜனநாயகப் பாரம்பரியமும் சிதையத் தொடங்கிவிட்டது. எனவே இலங்கைத்தீவின் ஜனநாயகம் சீரழிக்கப்பட்டது மகிந்தவால் அல்லது சிறிசேனவால் என்று கூறப்படுவது பிரச்சினையை மேலோட்டமாக விளங்கிக் கொள்ளும் ஓர் ஆய்வு முறைதான். மாறாக இன ஒடுக்கு முறையிலிருந்தே இலங்கைத்தீவின் ஜனநாயகம் சீரழியத் தொடங்கிவிட்டது என்பதுதான் சரி.**

**ஜே.வி-.பியின் முதலாவது கிளர்ச்சியை ஒடுக்கியபின் பெற்ற படிப்பினைகளின் அடிப்படையிலும் தமிழ்மக்களின் ஆயுதப்பிரச்சினையை ஒடுக்குவதற்குரிய தயாரிப்பாகவும் ஜயவர்த்தனா நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைவீமையை உருவாக்கினார். தனக்கு முன்பிருந்த எந்தவொரு தலைவரும் பெற்றிராத ஐந்தில் நாலு பெரும்பான்மையை அவர் பெற்றார். ஆனால் அந்த மக்கள் ஆணையை மக்கள் ஆட்சிக்கு எதிராகத் திருப்பினார். ஒரு மன்னராட்சியை சிருஷ்டித்தார். அம்மன்னராட்சியின் கீழ் தனது சொந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் திகதியிடப்படாத ராஜினாமாக் கடிதங்களை வாங்கி வைத்திருந்தார். தமிழ் மக்களை ஒடுக்குவதற்கான யாப்புத் திருத்தங்களையும் முன்னெடுத்தார். ஒடுக்கு முறையின் விளைவாக இந்தியத் தலையீடு ஏற்பட்டது. அதன் விளைவாக ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சி எழுந்தது. அதாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையின் கீழ் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருந்திருந்தால் ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சி எப்படி ஏற்பட்டது? எனவே நிறைவேற்று அதிகாரமெனப்படுவது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார வளர்ச்சிக்கும் உதவவில்லை.

அதே சமயம் ஜயவர்த்தனாவிற்குப் பின்வந்த பிறேமதாசா அதே நிறைவேற்று அதிகாரங்களைப் பிரயோகித்து ஜே.வி.பியை ஒடுக்கினார். நாட்டின் ஆறுகளில் பிணங்களை மிதக்கச் செய்தார். தெருக்களில் ரயர்களைப் போட்டு பிணங்களை எரிக்கும் ஓர் அரசியலை முன்னெடுத்தார். அவருக்குப் பின் வந்த எல்லா ஜனாதிபதிகளும் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களை ஒடுக்க முற்பட்டார்கள். முடிவில் மகிந்த ராஜபக்ஷ நந்திக் கடற்கரையில் அறுபதினாயிரத்திற்கும் குறைவான தமிழ் மக்களைக் கொன்று ஆயுத மோதல்களை முடிவிற்குக் கொண்டு வந்தார்.

இப்படிப் பார்த்தால் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் சிங்கள மக்களும் இரத்தம் சிந்தியிருக்கிறார்கள். தமிழ் — முஸ்லிம் மக்களும் ரத்தம் சிந்தியிருக்கிறார்கள். இலங்கைத்தீவின் மூன்று இனங்களும் இரத்தம் சிந்தக் காரணமாகவிருந்த நிறைவேற்று அதிகாரம் இப்பொழுது இலங்கைத்தீவை ஒரு தோல்வியுற்ற நாடாக மாற்றியிருக்கிறது. எனவே நாட்டை இப்போது ஏற்பட்டிருக்கும் குழுப்பங்களிலிருந்து மீட்பதென்றால் நிறைவேற்று அதிகாரத்தை அகற்றினால் மட்டும் போதாது. மாறாக யாப்பை ஒடுக்கு முறையின் கருவியாக மாற்றிய இனஒடுக்கு முறைக்கும் தீர்வு காணப்பட வேண்டும். தமிழ் மக்களுக்கு நீதி கிடைத்தால் மட்டும்தான் இலங்கைத்தீவின் யாப்பும், ஜனநாயகமும் மகிமை பெறும். எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வை எப்படிக் கண்டுபிடிப்பது என்பதைக் குறித்தே தமிழ்த் தலைவர்களும் முஸ்லிம் தலைவர்களும் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள நீதியான தரப்புக்களும் சிந்திக்க வேண்டும். ரணிலைக் காப்பாற்றினால் அது நடக்குமா?

இல்லை. இனவாதத்தை மகிந்த என்ற ஓர் அளவுகோளால் மட்டும் அளக்கக்கூடாது. மகிந்த வெளிப்படையான இனவாதி. ரணில் மனித முகமூடியோடு வரும் இனவாதி. அவர் நீருக்குள் மிதக்கும் பனிக்கட்டியைப் போன்றவர். நீர் வேறு பனிக்கட்டி வேறு அல்ல. கடந்த நொவெம்பர் மாதம் மூன்றாம் திகதி கொழும்பு லிபேர்ட்டி சுற்று வடத்தில் நடந்த ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றிய ஒரு சிங்களப்பெண் ஒரு செய்தியாளரிடம் பின்வருமாறு கூறினார்.'மகிந்த ஒரு புற்று நோய் ஆனால் ரணில் ஒரு மருந்து அல்ல' தமிழ் மக்களும் இப்படித்தான் கூறுவார்கள். எனவே ரணிலைக் காப்பாற்றுவதால் தீர்வு கிடைத்து விடாது. மாறாக சிங்கள அரசு யந்திரத்தின் மீது வெளி நிர்ப்பந்தத்தைப் பிரயோகிப்பதன் மூலமே ஒரு தீர்வைக் கண்டு பிடிக்கலாம். இலங்கைத்தீவில் இதுவரை எட்டப்பட்ட ஒப்பீட்டளவில் நீண்டகாலம் நீடித்த இரண்டு தீவுகளும் மூன்றாவது தரப்பின் அழுத்தம், பிரசன்னம், கண்காணிப்பு போன்றவைகளின் கீழ் செய்யப்பட்டவைதான்.

முதலாவது இந்திய - இலங்கை உடன்படிக்கை இதற்கு இந்தியா பொறுப்பேற்றது. இந்தியப் படைகள் இலங்கைத்தீவில் பிரசன்னமாகியிருந்தன. இரண்டாவது ரணில் - பிரபா உடன்படிக்கை. இதற்கு நோர்வே அனுசரணை வழங்கியது. மேற்கு நாடுகள் இணை அனுசரணை வழங்கின. ஸ்கண்டிநேவிய யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்கள் நாட்டில் பிரசன்னமாகியிருந்தார்கள்.

எனவே மேற்கண்ட இரண்டு தீர்வு முயற்சிகளின் போதும் மூன்றாந் தரப்பொன்றின் பிரசன்னம் காணப்பட்டது. அப்படி மூன்றாந் தரப்பொன்றின் பிரசன்னத்தின் கீழ்த்தான் இனிமேலும் தீர்வு முயற்சிகள் சரிப்பட்டு வரும். அப்படி மூன்றாந் தரப்பொன்றின் மேற்பார்வையில்லாத ஒரு நிலமையின் கீழ் இரண்டு இனவாதக் கட்சிகளும் சேர்ந்துருவாக்கிய நிச்சயமற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மையின் மீது நம்பிகைகளை முதலீடு வைத்ததன் விளைவாக இப்பொழுது தீர்வு முயற்சிகள் தடைபட்டு விட்டன. எனினும் இந்த இடத்தில் யு.என்.பி ஆதரவாளர்கள் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டுவார்கள். மேற்காட்டிய இரண்டு தீர்வு முயற்சிகளிலும் ஈடுபட்டது யு.என்.பிதான். எஸ்.எல்.எவ்.பி அல்லவென்று. அது உண்மைதான் அதே சமயம் இவ்விரண்டு சமாதான முன்னெடுப்புக்களின் போதும் மூன்றாம் தரப்பின் பிரசன்னம் இருந்தது என்பதும் அதே அளவிற்கு உண்மைதான். தவிர, பண்டாரநாயக்காவின் தீர்வுத் திட்டத்தையும் சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தையும் குழப்பியது யுஎன்பிதான் என்பதும் ஒரு வரலாற்று உண்மைதான்.

எனவே தமிழ்த் தலைமைகள் ரணிலைக் காப்பாற்றுவது என்பதற்குமப்பால் இப்போதிருக்கும் நிலைமைகளைப் பயன்படுத்தி இலங்கைத்தீவின் சீரழிந்த ஜனநாயகக் கட்டமைப்பை அம்பலப்படுத்த முயற்சிக்க வேண்டும். யாப்பை அளாப்பும் தலைவர்களிடமிருந்து எப்படித் தீர்வைப் பெறலாமென்று வெளியுலகத்திடம் கேட்க வேண்டும். கடந்த மூன்றரை ஆண்டுகளாக இனவாதத்தை ஏன் தோற்கடிக்க முடியவில்லை அல்லது ஏன் அதன் பலத்தைக் குறைக்க முடியவில்லை. என்ற கேள்வியை ஐ.நாவிடமும், உலக சமூகத்திடமும் கேட்க வேண்டும். ஓர் இனப்படுகொலைக்குப் பின்னரும் ஆட்சி மாற்றத்தின் பின்னரும் இலங்கைத்தீவின் அரசுக்கட்டமைப்பில் நம்பிக்கையூட்டும் மாற்றங்கள் நடக்கவில்லை என்பதைத்தான் நாட்டில் நடப்பவை நிரூபித்துள்ளன. எனவே மூன்றாவது தரப்பொன்றின் கண்காணிப்பும் மேற்பார்வையும் இல்லாமல் ஒரு தீர்வைக் கண்டுபிடிக்க முடியாது. அவ்வாறான மூன்றாவது தரப்பொன்றின் தலையீட்டிற்கான உத்தரவாதத்தையே தமிழ்த்தரப்பு முதலில் பெறவேண்டும்.

நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் சிங்கள மக்களும் இரத்தம் சிந்தியிருக்கிறார்கள். தமிழ் - முஸ்லிம் மக்களும் ரத்தம் சிந்தியிருக்கிறார்கள். இலங்கைத்தீவின் மூன்று இனங்களும் இரத்தம் சிந்தக் காரணமாகவிருந்த நிறைவேற்று அதிகாரம் இப்பொழுது இலங்கைத்தீவை ஒரு தோல்வியுற்ற நாடாக மாற்றியிருக்கிறது.

இது விடயத்தில் ரணில் விக்கிரமசிங்கிவிடமிருந்து உத்தரவாதம் எதையும் பெற முடியாது. ஏனெனில் அவர் ஒரு நொண்டிக்குதிரை. அவர் தானாக ஓடமாட்டார். தமிழ், முஸ்லிம், மலையக வாக்குகள் இல்லையென்றால் அவர் வெல்லவும் மாட்டார். சாதாரண சிங்கள மக்கள் அவரை சிங்களத் தன்மை பொருந்திய ஒரு மிடுக்கான தலைவராகப் பார்க்கவில்லை. மேற்கத்தைய தன்மை மிக்க மேற்கின் சேவகனாகவே பார்க்கிறார்கள். அதுதான் உண்மையும். ரணில் என்ற நொண்டிக்குதிரையை மேற்கு நாடுகளே ஓட வைக்கின்றன. அந்த நொண்டிக் குதிரையோடு எந்தவொரு உடன்படிக்கையையும் செய்ய முடியாது. பதிலாக அந்த நொண்டிக் குதிரையின் கடிவாளத்தை கையில் வைத்திருக்கும் மேற்கு நாடுகளுடன்தான் தமிழ்த்தரப்பு ஏதும் ஓர் உடன்படிக்கையைச் செய்ய வேண்டும். இல்லையென்றால் கடந்த மூன்றரை ஆண்டுகளின் பின் பெற்ற அதே தோல்விதான் திரும்பவும் கிடைக்கும்.

நாட்டை தேர்தல்களை நோக்கி நிர்ப்பந்திப்பதே மைத்திரி + மகிந்த அணியின் நிகழ்ச்சி நிரலாகும். இப்படி தேர்தல்கள் நடந்தால் அதில் ஜனாதிபதித் தேர்தலை மகிந்த விரும்புவார். நாடாளுமன்றத் தேர்தலை அவர் குறைந்தளவே விரும்புவார். ஏனெனில் ஜனாதிபதித் தேர்தல் எனப்படுவது நபர்களை மையப்படுத்துவது. அதில் யுத்தவெற்றி நாயகர் ஒருவர் போட்டியிட்டால் அவருக்கு முன் ரணில் நின்று பிடிக்க மாட்டார். பதிலாக நாடாளுமன்றத் தேர்தல் என்று வரும் பொழுது தமிழ் வாக்குகளும், முஸ்லிம் வாக்குகளும் ரணிலைப் பலப்படுத்தக்கூடும். எனவே ரணில் உடனடிக்கு ஒரு தேர்தலை விரும்பாவிட்டாலும் கூட ஜனாதிபதித் தேர்தல் அல்லாத ஏனைய தேர்தல்கள் பரவாயில்லை என்று கருதக்கூடும். சில சமயம் நாடாளுமன்றத் தேர்தல் ஒன்று நடந்தால் அல்லது இப்பொழுது பரவலாக ஊகிக்கப்படுவது போல சில வேளை மைத்திரி ஒரு சர்வசன வாக்கெடுப்பை நடத்தினால் அதில் ரணில் வெல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அதன்பின் என்ன நடக்கும்?

அப்பொழுதும் அவரால் ஒரு தீர்வைக் கண்டு பிடிப்பது சவால்கள் மிகுந்ததாகவே இருக்கும். ஏனெனில் அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும். அதைவிட முக்கியமாக இன்னும் ஓராண்டு காலத்திற்கு மைத்திரியே ஜனாதிபதியாக இருப்பார். அவர் ஒரு தீர்வை நோக்கி ரணிலைப் போக விடமாட்டார். எனவே ரணில் சில சமயம் வென்றாலும் ஒரு தீர்வை நோக்கிப் போவது சவால்கள் மிகுந்ததாகவே இருக்கும். யாப்பை மாற்றாத வரை ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷக்களுக்கு வெற்றி வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கும். யாராவது ஒரு ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும் வரை ஒரு தீர்வு கிடைக்கப்போவதில்லை.

எனவே நிறைவேற்று அதிகாரத்திற்கும் நாடாளுமன்றத்திற்கும் இடையிலான மோதல் அதோடு நிறைவேற்று அதிகாரமானது நீதி பரிபாலனக் கட்டமைப்பை எப்படிக் கையாளக்கூடும் என்ற கேள்விக்கான விடைகள் போன்றவற்றின் பின்னணியில் சிந்திக்கும் பொழுது ஒரு புதிய யாப்பைக் கொண்டு வந்து நிறைவேற்று அதிகாரத்தை நீக்காத வரையிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கண்டுபிடிப்பது கடினமானதாகவே இருக்கும். ஆனால் யார் வென்றாலும், தோற்றாலும் தமிழ் மக்களின் பேரம் உயர்வாகவே இருக்கும். தமிழ் மக்களை வைத்துத்தான் தென்னிலங்கைத் தலைமைகளைக் கையாள வேண்டிய தேவை இந்தியாவிற்கும் இருக்கும். மேற்கிற்கும் இருக்கும். தமக்கிருக்கும் பேரத்தைப் பயன்படுத்தி முதலில் வெளித்தரப்புக்களோடு உடன்படிக்கை செய்வதைக் குறித்து தமிழ்த்தரப்புக்கள் சிந்திக்க வேண்டும். கடந்த வாரம் ஐ.பி.சி.தொலைக்காட்சியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் ஒரு கூட்டமைப்பு உறுப்பினர் சொன்னார்... 'ஏற்கனவே எழுதப்படட உடன்படிக்கைகள் தோல்வியுற்றபடியால்தான் இம்முறை எந்த ஒரு உடன்படிக்கையையும் எழுதவில்லை' என்று. எழுதப்பட்ட உடன்படிக்கைகள் ஏன் முறிக்கப்பட்டன என்று ஆராயவேண்டும். மூன்றாம் தரப்பொன்றின் மேற்பார்வை இலையென்பதே காரணம். அதற்குத் தீர்வு உடன்படிக்கையை எழுதாமல் விடுவதல்ல. மாறாக அதில் மூன்றாவது தரப்பொன்றை பொறுப்புக்கூறவைப்பதே. ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை ராஜதந்திரப் போர் என்பது இந்த அடிப்படையில் தான் திட்டமிடப்பட வேண்டும

இகுருவிக்காக **நிலாந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# Call Me For Your Platinum Access.
# & Flexible Payment Deposit



**9TH & MAIN CONDOS + TOWNS STOUFFVILLE**
8 Storeys – Two Towers
212 Condominium Suits and 34 Townhomes



**543 Richmond Residences at Portland**
Mid-rise condominium
Occupancy date of 2021.



**High end luxury towns**
Links in richmond hill,
closing 2020



**Homes in Bobcaygeon**
Stating 389,900, Closing 2020
West Street, Kawartha Lakes



## 14 Yers Of Excellent Service
## And Full Time Realtor



Double Centurion Award Winner 2014
Centurion Award Winner 2015
Double Centurion Award Winner 2016
Centurion Award Winner 2017

TOP Sales Representative 2014,2015,2016,2017
at Century 21 Innovative Realty Inc.

**Thana Suseendra**
Sales Representative
**416 893 4376**
thanarealestate@gmail.com

Century 21
Innovative Realty Inc.
INDEPENDENTLY OWNED AND OPERATED
Brokerage

INNOVATIVE REALTY INC.
Office 416 298 8383
Fax 416 298 8303
3-2250 Markham Road ,
Toronto ON M1B 2W4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லோகன் கணபதி அவர்கள் சுப்ரமணிய சுவாமியை சந்திக்கவில்லை என்று கூறிய காணொளி
www.biztha.com/video/logan-Speech



இப்போது வெளியான திரு லோகன் கணபதி அவர்கள் சுப்பிரமணியம் சுவாமி அவர்களை சந்தித்து கை கொடுக்கும் காணொளி
www.biztha.com/video/logan



# லோகன் கணபதி ஒரு பச்சை பொய்யரா?

'தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின் தன்நெஞ்சே தன்னைச் சுடும்.' என்றார் வள்ளுவர் இதன் பொருள்

ஒருவன் தன் நெஞ்சம் அறிவதாகிய ஒன்றைக்குறித்துப் பொய்ச் சொல்லக்கூடாது, பொய் சொன்னால் அதைக் குறித்துத் தன் நெஞ்சமே தன்னை வருத்தும் என்பதாகும்.

கடந்த வாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியது ஒன்ராறியோ மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி சொன்ன பொய்.

கடந்த நொவெம்பர் மாதம் 3ம் திகதி கனடாவின் இந்து நாகரீக அருங்காட்சியகம் ஏற்பாடு செய்த இந்து பாரம்பரிய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்திய அரசியல் வாதியான சுப்பிரமணியம் சுவாமி அவர்கள் கனடாவிற்கு வருகை தந்திருந்தார்.

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மீது கடுமையான எதிர்பினை வெளிப்படுத்தி வருபவர் என்ற வகையிலும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் நெருங்கிய நட்பு வட்டத்தில் உள்ள ஒருவர் என்ற வகையிலும் இவருடைய வருகை குறித்து தமிழ் சமூகம் அதிருப்தி கொண்டிருந்தது.

அவர் டொரோண்டோ வரும் போது தமிழர்கள் விமான நிலையம் அருகே பாதைகளுடன் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தார்கள்

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட மாகாண சபை உறுப்பினர் திரு.லோகன் கணபதி அவர்கள் சுப்பிரமணியம் சுவாமிக்கு அருகில் இருப்பது போன்ற புகைப்படங்களும் அது தொடர்பான விமர்சனங்களும் சமூக வலைத் தளங்களிலும் சில ஊடகங்களிலும் வெளியாகியிருந்தது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு மாகாண சபை உறுப்பினர் என்ற வகையில் தன்னை தெரிவு செய்த மக்களின் அழைப்பினை ஏற்று ஒரு நிகழ்வில் கலந்து கொள்வதை எவரும் கேள்விக்கு உட்படுத்த முடியாது என்பதை நாம் உறுதியாக நம்புகின்றோம்.

எனினும் இந்த விமர்சனங்களுக்கு பதிலளிப்பதாக எண்ணி மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் ஒரு காணொளிப் பதிவினை, கனேடிய மற்றும் ஒன்ராறியோ கொடிகளுக்கு முன்னாள் இருந்தவாறு தனது முகநூலில் பதிவேற்றம் செய்திருந்தார்.

அந்த காணொளியில் தான் அந்த மாநாட்டில் கலந்து கொண்டது உண்மை என்றும் எனினும் அங்கு கலந்து கொண்ட சுப்பிரமணியம் சுவாமியை தான் சந்திக்கவில்லை என்றும் அவருடன் கதைக்கவோ புகைப்படம் எடுக்கவோ இல்லை என்றும் திருலோகன் கணபதி அழுத்தம் திருத்தமாக குறிப்பிட்டிருந்தார்.

தன் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப் பட்டு வரும் அவதூறுப் பிரசாரங்களின் தொடர்ச்சியாகவே இந்த புகைப்படம் சிலரால் பகிரப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதை தொடர்ந்து அந்த காணொளியை ஊடகங்கள் பகிர்ந்திருந்தன, அதுமட்டுமின்றி சிவிஸி



முதலில் வெளியான புகைப்படங்கள்

வானொலியிலும் தனது கருத்தை வலிந்து தெரிவித்திருந்தார் . "தான் அவரை சந்திக்கவே இல்லை, திட்டமிட்ட அவதூறு' என்று தெரிவித்திருந்தார் .

அவருடைய காணொளியை அவருக்கு நெருக்கமான சிலரும் தமது முகநூல் தளங்களில் பகிர்ந்து திரு.லோகன் கணபதி மீது அவதூறு செய்பவர்களை கடுமையாக சாடி தமது கருத்துக்களையும் முன்வைத்திருந்தனர். அப்புகைப்படங்கள் இரண்டும் போட்டோஷாப் முலம் செய்யப் பட்டது என்று எல்லாரையும் நம்பவைக்கப்பட்டது.

எனினும் மீண்டும் ஒரு மாதம் கடந்த பின்னர், அந்த மாநாட்டில் திரு.லோகன் கணபதி அவர்கள் சுப்பிரமணியம் சுவாமியை சந்திப்பதற்கு கால் கடுக்க காத்திருந்த காட்சிகளும் அமர்ந்திருக்கும் சுப்பிரமணியம் சுவாமிக்கு பின்னால் நின்று கை கொடுத்து அவரின் முதுகில் தட்டிக் கொடுக்கும்காட்சிகளும்காணொளியாக வெளியிடப்பட்டிருந்தது.

இந்த காட்சிகளில் மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் வெளிப்படுத்திய உடல்மொழி என்பது விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

மறுபுறம் சுப்பிரமணியம் சுவாமியை சந்தித்ததை ஏன் அவர் மறுக்க வேண்டும் என்றும். எதற்கான அவர் பொய் கூறினார் என்றும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

ஒரு மக்கள் பிரதிநிதியாக வெளிநாட்டு அரசியல்வாதி ஒருவரை சந்திப்பதில் தவறேதும் இல்லை. அவ்வாறு சந்திப்பு ஒன்று நடந்து, அவருடன் கைகொடுத்து பேசிய பின்னர் அவரை சந்திக்கவில்லை என்றும் அவருடன் பேசவில்லை என்றும் கனேடிய மற்றும் ஒன்ராறியோ கொடிகளுக்கு முன்னால் இருந்தவாறு காணொளியை வெளியிடுவது, மக்களை ஏமாற்றும் ஒரு தந்திரோபாயமாகவே கருதப்படுகின்றது. அவர் மீதான கடந்தகால நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாகியுள்ளது .

சுப்பிரமணியம் சுவாமியை சந்திப்பது தவறு என்று மாகாண சபை உறுப்பினர் கருதினால் ஏற்பாட் டாளர்களுக்கு தனது நிலைப்பாட்டை தெளிவு படுத்தி விட்டு அந்த மாநாட்டில் கலந்த கொள்வதை தவிர்த்திருக்கலாம்.

அதனையும் தாண்டி அந்த சந்திப்பில் கலந்து கொண்டு சுப்பிரமணியசுவாமியை சந்தித்து அவருக்கு கைகொடுத்து கலந்துரையாடி விட்டு அவரை சந்திக்கவே இல்லை என்று 'பச்சைப் பொய்' சொல்வது அவரை மட்டுமல்ல அவர் சொன்ன பொய்யை உண்மை என்று நம்பி அவருக்கு ஆதரவாக குரல் கொடுத்த அனைவருக்கும் மிகப்பெரிய அசௌ கரியத்தை ஏற்படுத்தி விட்டுள்ளது.

கனேடிய தேசியக் கொடியின் முன்னால் அமர்ந்திருந்தவாறு அவர் இந்த பச்சைப் பொய்யை சொல்லியிருக்கின்றார். இதற்காக அவர் பதவியை விட்டு இராஜினாமா செய்யவேண்டும் ? அல்லது பகிரங்கமாக மன்னிப்பு கேட்கவேண்டும்.

இதற்காக ஒன்ராறியோ அரசு என்ன பதிலை சொல்லப்போகின்றது ?

மாகாண சபை உறப்பினராக பதவிப் பிரமாணம் செய்துக் கொள்ளும் போது பின்வரும் வாசகங்களை அவர் உரத்துச் சொல்லியிருப்பார்.

"I, do solemnly, sincerely and truly affirm and declare the taking of an oath is according to my religious belief unlawful, and I do also solemnly, sincerely and truly affirm and declare that I will be faithful and bear true allegiance to Her Majesty Queen Elizabeth.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# கொய்யாத்தோட்டம், பாண்டியன்தாழ்வு, ஈச்சமோட்டை மக்களின் ஒன்றுகூடல் நிகழ்வு

மேலதிக புகைப்படங்களை இகுருவி இணையத்தில் பார்வையிடலாம் .

# Debt Free Credit Solution நிறுவன ஆலோசனை கலந்துரையாடல்





இளங்கீரன் தான் அவர்களின் நிர்வாகத்தில் இயங்கிவரும் Debt Free Credit Solution நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கு எவ்வாறான சேவைகளை வழங்குகின்றது என ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டது.தனி மனுதனுக்கு ஏற்படும் கடன் அதனால் ஏற்படும் விளைவுகளை எவ்வாறு எதிர்கொள்வது , கிரெடிட் கார்டு கொடுப்பனவுகள், அதி கூடிய மாதாந்த கொடுப்பனவுகளாலும் , அதனால் ஏற்ப்படும் விளைவுகளை சரிசெயவது தொடர்பான விளக்கங்களை இளங்கீரன் வழங்கினார் . தமது நிறுவனம் அனைத்துவிதமான கிரெடிட் பிரச்சனைகளுக்கும் சரியான தீர்வாக அமையும் என உறுதியளித்தார்





# RE/ON 2nd Annual Christmas Gala Night 2018
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கை நழுவுமா ஒஷோவா?




"GM Town" என்று வர்ணிக்கப்பட்ட ஒஷோவாவில் இயங்கிவரும் மோட்டார் வாகன தொழிற்சாலைக்கு 2019க்கு பின் எந்தவிதமான வாகன பொருத்தல் ஒதுக்கீடும் செய்யப்படாத நிலையில் அங்கு தொழில்புரியும் 2500கும் மேற்பட்ட தொழிலாளர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

கனடாவில் சென் கத்தரின்ஸ் இங்கர்சொல் ஆகிய இடங்களில் இருக்கும் ஜெனரல் மோட்டர்ஸ் தொழிற்சாலைகளை காட்டிலும் மிகமுதன்மையானது என கருதப்படும் ஒஷோவாவின் இன்றைய நிலைக்கான பின்புலங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கம்.

### மக்லாகிலின் மரபு

1832இல் அயர்லாந்தில் இருந்து குடிபெயர்ந்த ஜோன் மக்லாகிலின் ஒஷோவாவில் ஆரம்பித்த குதிரை வண்டி தொழிற்சாலை காலபோக்கில் முதலாம் தலைமுறை மோட்டார் வாகனங்களைதயாரிக்க ஆரம்பித்தது.1921 இல் ஜெனரல் மோட்டர்ஸ் இத்தொழிற்சாலையை கொள்வனவு செய்ததன் பிற்பாடு 1953 இல் தற்போதும் இயக்கத்தில் இருக்கும் பிரதான பொருத்து தளம் நிறுவப்பட்டது. இங்கு Cadillac XTS,Chevrolet Impala,Chevrolet Silverado ñŸÁ‹ GMC Sierra வாகனங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வந்தாலும் ஐந்தாம் தலைமுறை Camaro உள்ளடங்கலாக பல மோட்டார் வாகனங்கள் 2015வரை தயாரிக்கப்பட்டு வந்தது. அவை படிப்படியாக மெக்சிக்கோ உள்ளிட்ட பிற நாடுகளுக்கு நகர்த்தப்பட பல வாகன உற்பத்தி தொழில்கள் ஒண்டாரியோ மாகாணத்தை விட்டு மறைய ஆரம்பித்தது. கடந்த முப்பது வருடங்களில் 25000 தொழிலாளர்களில் இருந்து வெறும் 2500ஆக இந்த எண்ணிக்கை குறைவடைந்தது.

### 2009 வங்குரோத்து பிணையெடுப்பு

2008 டிசெம்பரில் மத்திய மற்றும் மாகாண அரசின் 10.8 பில்லியன் டொலர் நிதி பாய்ச்சலின் மூலமாக பொருளாதார வீழ்ச்சியின் வங்குரோத்து நிலையில் இருந்து மீண்ட ஜெனரல் மோட்டர்ஸ் இன்றைய தேதிவரை 2.7பில்லியன் டொலர்களை மீள செலுத்தவில்லை. பொது மற்றும் முதன்மை பங்குகளை விற்றல், வட்டிவருமதி, மீள்செலுத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலமாக 8 பில்லியன் பணத்தை மத்திய மாகாண அரசுகள் திரும்ப பெற்றமையை அடுத்து இன்றுவரை கிரைஸ்லர் மற்றும் ஜெனரல் மோட்டர்ஸ் தொடர்பில் 3.7பில்லியன் டொலர்கள் மக்கள் வரிப்பணம் துண்டு விழுந்துள்ளது.

இந்நிலையில் தற்போது இந்த தொழிற்சாலை உட்பட அமெரிக்காவின் 4 தொழிற்சாலைகள் மூடப்படுவதற்கு ஜெனரல் மோட்டர்ஸ் சொல்லும் காரணங்கள் பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. தர்க்க ரீதியாக சிந்தித்தால் ஜெனரல் மோட்டர்ஸ் அறிவிப்பின் பிரகாரம் தாம் தன்னியக்க மற்றும் மின்சார வாகனங்கள் பக்கம் தமது கவனத்தை திருப்புவதாகவும் அதன் விளைவே இந்த ஐந்து தளங்களின் செயற்பாடுகளை கைவிடும் முடிவு என்பதில் பெரும்பாலும் உண்மை இல்லை என்றே படுகிறது. இதற்கு காரணம் ஒஷோவா தளம் மிக இலகுவாக எந்தவித வாகனங்களுக்கும் ஏற்றாற்போல் மாற்றியமைக்கப்படக்கூடியது என்பதோடு உலகத்தரம் வாய்ந்த வர்ண பட்டறை மற்றும் விருது வென்ற தொழிலாளர்களையும் உள்ளடக்கியது.

இன்னொரு திக்கில் சிந்தித்தால் அமெரிக்காவில் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்ட தொழிற்சாலைகளே வோல்ட் ,போல்ட் போன்ற பச்சை வலு வாகனங்களை தயாரிப்பது அவர்கள் அறிவித்த காரணங்களை உடனடியாகவே பொய்ப்பிக்கின்றன.

### Trump இன் அதிருப்தியும் Ford இன் புரிதலின்மையும்

Trump மாநில சந்திப்புகளில் உற்பத்திசார் வேலைவாய்ப்புகள் மீள அமெரிக்காவுக்குள் எடுத்துவரப்படுவதாக சொல்லிவந்த கூற்றை பொய்ப்பித்துக்கொண்டு வந்திருக்கும் ஜெனரல் மோட்டர்ஸ் அறிவிப்பு Trumpä ஒருபோதும் குளிர்ச்சிப்படுத்துவதாக இருக்காது. இதன் உடனடி விளைவாக அமெரிக்காவில் இன்னமும் நடைமுறையில் இருக்கும் 7500 டொலர் தள்ளுபடியை நீக்கும் பிரேரணை குறித்து சிந்திக்க ஆரம்பித்துள்ளனர். இது ஜெனரல் மோட்டர்ஸ் நிறுவனம் தயாரிக்க நினைக்கும் பச்சை வலு வாகனங்கள் மீதான அழுத்தத்தை கொண்டுவரும் என எதிர்பார்க்கலாம்.


ஒண்டாரியோ மாகாணத்தை பொறுத்தவரை பதவியேற்ற பழமைவாதிகளின் அரசியல் தேன்நிலவு முடிவுக்கு வந்ததன் பின்னதாக சந்திக்கும் மிகப்பெரிய பின்னடைவு இதுவாக பார்க்கப்படுகிறது. முதல்வர் Ford தரப்பில் இருந்து ஏதேனும் அழுத்தம் மிக்க மந்திர தந்திரங்களை ஒஷோவா தொழிற்சாலை மூடல் குறித்து எதிர்பார்க்கமுடியாது.

டெஸ்லாவின் ஈலான் மஸ்க் மூடப்படும் ஜெனரல் மோட்டர்ஸ் தொழிற்சாலைகளை கொள்வனவு செய்வது குறித்து ஆர்வம் அடைந்துள்ள நிலையில் ஒஷோவாவில் டெஸ்லா தொழிற்சாலை அமைவது சந்தேகமே. முதன்மைக்காரணம் மாகாண பழமைவாத அரசு கைவிட்ட பச்சை வலு வாகன தள்ளுபடிகள் மற்றும் உள்வரும் பல்தேசிய கம்பெனிகளுக்கான நலன்புரி திட்டங்கள் டெஸ்லாவின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் அதன் வரவை மிக சிக்கலாகும். இதுவே Ford முன்மொழிகின்ற ஒண்டாரியோவின் திறந்த வியாபார கொள்ளகையின் தன்முரணான நிலையாகும்.

மேலதிகமாக டெஸ்லாவின் உற்பத்தி வழிமுறைகள் பெரும்பாலும் தன்னியக்க மயப்படுத்தபட்டவை என்பதும் அவ்வாறான சந்தர்ப்பத்தில் புதிதாக தோன்றும் வேலைவாய்ப்புகள் நேரடியாக தற்போது பணியில் இருப்பவர்களுக்கே சென்றடையும் என்கிற எவ்வித உத்தரவாதத்தையும் தரமாட்டாது என்பதும் துணை காரணங்கள் ஆகும்.

### தொழிற்சங்க நடவடிக்கைகள்

ஒஷோவா விவகாரம் கசிந்ததில் இருந்து தொடர்புபட்ட தொழில்சங்கமான Unifor தனது பங்குக்கு பெரும் அழுத்தங்களை முன்வைக்க ஆரம்பித்துள்ளது. கைஎழுத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் குறித்து நீதிமன்றங்கள் வரை இப்பிரச்சினை இழுபடலாம். இவை வரும் கோடைகாலத்துக்கு முன்னதாகவே ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கும் "வீட்டுக்கு அனுப்பும் படலத்தை" சற்று தாமதிக்க செய்யும் என்பதோடு ஒருபோதும் நிரந்தர தீர்வாக அமையாது. இத்தளத்தில் பணிபுரியும் பாதி எண்ணிக்கையானோர் ஓய்வுபெறுவதற்கு தகுதியானவர்கள் என்பதால் அவர்கள் ஏதேனுமொரு ஓய்வுப்பொதி ஒன்றை பெற்றுக்கொள்ளுமாறு நிர்பந்திக்கப்படலாம். கனேடிய அதிருப்தியை வெளிக்காட்டும் முகமாக ஜெனரல் மோட்டர்ஸ் வாகன கொள்வனவை கனேடியர்கள் ஏற்கனவே புறக்கணிக்க ஆரம்பித்துள்ள நிலையில் ஆண்டுக்கு மூன்று இலட்சம் வாகனங்கள் என்கிற கனேடிய சந்தை நிச்சயம் ஜப்பானிய ஐரோப்பிய தயாரிப்புகள் பக்கம் திரும்ப ஆரம்பிக்கும் !




Triden V Balasingam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜமால் கசாகி கொலை ஏன்? எதற்கு?



அண்மைக் கால சரித்திரத்தில், அதிகளவு ஊடகங்களால் பதிவு செய்யப்பட்ட மரணம் ஜமால் கசாகியினுடையது. ஜமால் கசாகி, துருக்கியில் உள்ள சவூதி தூதரகத்திற்கு, செப்ரம்பர் 28ல் தனது திருமணப் பத்திரங்களைப் பெறுவதற்காக சென்றிருந்தார். இவர் தனது முதல் மனைவியை விவாகரத்துச் செய்திருந்தார். இவரது துருக்கிய காதலியை, திருமணம் முடிப்பதற்கு, இவர் விவாகரத்து பெற்ற பத்திரங்கள் தேவை. மீண்டும் இரண்டு வாரங்களின் பின்னர் வருமாறு கூறியமையால், ஒக்ரோபர் 2ல் மீண்டும் சென்றிருந்தார். அவரது துருக்கிய காதலி, சவூதி தூதரகத்திற்கு வெளியே காத்திருந்தார். கசாகி, தான் நான்கு மணித்தியாலத்திற்கு பின்னரும் வராவிட்டால், துருக்கிய பொலிஸாருக்குத் தெரிவிக்குமாறு கூறியிருந்தார். கசாகி வரவில்லை. முதலில் சவூதி, அவர் தூதரகத்தில் இல்லை என்றார்கள். பின்னர் பல நாட்களின் பின்னர் அவர் இறந்து விட்டார் என்றார்கள். அதன் பின்னர் உலக நாடுகள் வற்புறுத்தவே, அவர் கொலை செய்யப்பட்டார் என்றது சவூதி.

இந்தக் கொலையை செய்தவர் யார்? ஏன்?

நவம்பர் 30, டிசம்பர் 1 ஆகிய நாட்களில் ஜி20 மகாநாடு, இம் முறை ஆர்ஜன்ரீனாவில் நடைபெற்றது. அதற்கு முன்பாக சவூதி இளவரசர் மொகமட் பின் சல்மன், (இவரை எம்.பி.எஸ் என அழைப்பார்கள் (Mohammed bin Salmanன் சுருக்கம் MBS )) தனது நட்பு நாடுகளுக்கு விஜயம் செய்திருந்தார். பாலஸ்தீனியத்துக்கு 60 மில்லியன் டொலர்களை சவூதி கொடுத்திருந்தது. அமெரிக்கா, பாலஸ்தீனியத்துக்கான நிதியுதவியை நிறுத்துவேன் என்று சொன்னதன் பின்னரே, இதனை சவூதி செய்திருந்தது. இதற்கிடையில் கட்டார், ஹமாஸின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் பகுதிக்கு 150 மில்லியன் டொலர்களை கொடுத்திருந்தது. ஹமாசின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள மக்கள் மிகவும் குறைந்த வசதி களுடன் வாழ்ந்து வருகின்றனர். குடிப்பதற்கு தூய நீர், அவர்களுக்கு கிடைப்பதில்லை. ஒரு புறம் இஸ்ரேலால் ஒடுக்கப்படுகின்றார்கள். மறு புறம் ஹமாசின் கடும் போக்கால், பல நாடுகள் தள்ளியே நிற்கின்றன. அம் மக்கள் நிலை மிகவும் மோசமானது. கட்டாருக்கு போட்டியே சவூதியின், பாலஸ்தீனத்துக்கான உதவி. அத்துடன் தன் மேல் சுமத்தப்பட்டுள்ள களங்கத்தை போக்குவதற்கும் இவ்வாறான உதவிகள், உதவி செய்யும் என்ற உள்நோக்கமும் காரணம்.

சவூதி இளவரசர், தன் மேல் சுமத்தப்பட்டுள்ள ஜமால் கசாகியின் கொலை குற்றத்திலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள நட்பு உதவி தேவைப்படுகின்றது. அத்துடன் கட்டார் மீதான நடவடிக்கைகளுக்கு ஆதரவு பெறுவதும் இளவரசரின், நேச நாடுகளுக்கான விஜயமாகவிருந்தது. ஜி20 மாநாட்டில், கனடிய பிரதமரைத் தவிர வேறு எவரும் குரலெப்பவில்லை. ஆனாலும், இளவரசரை சநதிப்பதை தவிர்த்தனர்.

ஏன் இந்தக் கொலை? யார் இந்த ஜமால் கசாக்கி

ஜமால் கசாகி சவூதியின் முக்கிய குடும்பமொன்றில் பிறந்தார். இவரது பாட்டனர் துருக்கியைச் பிறப்பிடமாகக் கொண்டவர், பாட்டி, அப்போதைய சவூதி அரசர் அப்துல்அசிஸ் அல் சவுட்டிற்கு (Abdulaziz Al Saud) பிரத்தியேக வைத்தியராக கடமையாற்றிருந்தார். கசாகியின் ஒன்று விட்ட சகோதரர் டோடி பயிற் (first cousin of Dodi Fayed) டயானாவுடன் கார் விபத்தில் இறந்தவர். டயானாவின் காதலன் எனக் கூறப்பட்டவர். Harrods என்ற பிரபல்ய பிரித்தானிய நிறுவனத்தின் தலைவராக இருந்தவர். இவர் எகிப்தில் பிறந்திருந்தாலும், இவரது தாயார் சவூதியைச் சேர்ந்தவர். கசாகி, இந்தியானா பல்கலைக் கழக வணிக முகாமையியலில் பட்டதாரியாவார். பின்னர் சவூதி கசட் உட்பட்ட பல பத்திரிகைகளில் பத்திரிகையாளராக கடமையாற்றிருந்தார். சவூதி உளவுப் பிரிவிற்கும் இவர் வேலை பார்த்தாக கூறப்படுகின்றது. சவூதி அரச குடும்பத்திற்கு மிக நெருக்கமானவராகவும் இருந்துள்ளார். இவ் வருடம் சித்திரை மாதம் போஸ்ட் பத்திரிகையில் சவூதி வெளிநாட்டுக் கொள்கைகளை கண்டித்துள்ளார். கட்டாருக்கு சவூதி கொடுக்கும் நெருக்கடிகள் மனிததன்மையற்றவை என கண்டித்திருந்தார். சவூதி, பெண்களை நடாத்தும் முறையும், அவர்களுக்கு சமத்துவம் கொடுக்காமையும் கண்டிக்கப்படவேண்டும் என இவர் வோசிங்டன் போஸ்ட் பத்திரிகையில், அவர் எழுதி வந்த பத்திகளில் குறிப்பிட்டுள்ளார்.

இவரது முன்னால் மனைவி ஒரு வைத்தியர். இவர்களுக்கு இரு பிள்ளைகள் உண்டு. இவரது மூன்று பிள்ளைகள் அமெரிக்க பிரசைகளாவார்கள். இவர் கொலை செய்யப்பட்டபோது இவரது பிள்ளைகள் சவூதியில் இருந்துள்ளார்கள். இவர்கள் வெளியேற அப்போது தடை விதிக்கப்பட்டது.

மொகமட் பின் சல்மன், (இவரை எம்.பி.எஸ் என அழைப்பார்கள் (Mohammed bin Salmanன் சுருக்கம் MBS ) மாற்றங்களை விரும்பினாலும், அவரின் பின்னால் உள்ள பழமைவாதிகள் அவரை வேறு விதமாகத் தூண்டுகின்றார்கள் என போஸ்ட் பத்தியில் எழுதியிருந்தார். அதே போல் எகிப்தையும் இவர் சாடியிருந்தார். அறுபாதியிரம் எதிர்க்கட்சியினரை எகிப்து சிறையிலடைத்ததாக இவர் எழுதியிருந்தார்.

இதன் விளைவு, இவரை சவூதி கொலை செய்யத் திட்டமிட்டது. துருக்கிக்கு ஒரு கெட்ட பெயரை ஏற்படுத்த வேண்டும். அதே சமயம் திட்டமிட்டவாறு இவரையும் கொலை செய்ய வேண்டும். சவூதியும், துருக்கியும் சுனி முஸ்லீம் நாடுகளாக இருந்த போதும், துருக்கியின் எழுச்சியை சவூதி விரும்பவில்லை. கசாகி தனது குடிவரவு ஆவணங்கள் விடயமாக, துருக்கியில் உள்ள சவூதித் தூதரகத்திற்கு சென்ற போது, அவரை பின்னர் வருமாறு ஒரு கூறி, அவரை கொலை செய்ய திட்டமிடப்பட்டது. தூதரகத்தைச் சுற்றியுள்ள விடியோ கமராக்கள் அகற்றப்பட்டன. கொலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட அன்று, இவர் தனது மனைவியுடன் சவூதி தூதரகத்திற்கு சென்றுள்ளார். மனைவியிடம், நான் நான்கு மணித்தியாலங்கள் சென்றும் வராவிட்டால், துருக்கி பொலிசாருக்கு அறிவிக்க வேண்டும் எனக் கூறிச் சென்றார். அதன் பின்னர் நடைபெற்றவை உலகறிந்தவை.

அமெரிக்க வெளியுறவுக் கொள்கை

அமெரிக்க வெளியுறவுக் கொள்கையானது ஒபாமாவின் பின்னர் பல மாற்றங்களை கொண்டதாக உள்ளது. ஒரு குழப்பமான கொள்கை கொண்டதாக காணப்படுகின்றது. சில கொள்கைகள் முந்தைய கொள்கைகளை கட்டுப்பாட்டுடன் கடைப்பிடிப்பதாக உள்ளது. அதே சமயம் சில கொள்கைகள் தீர்க்கமான முடிவாக தெரிவிக்கப்படுகின்றது. அது தவறான கொள்கையாயினும், அதற்கு ஒரு விளக்கம் கொடுக்கப்படுகின்றது. அது மக்களோ அல்லது தேசம் சார்ந்ததாகவோ இல்லாமல், வணிக நலன் சார்ந்ததாக உள்ளது.

இந்த மூன்றாவது நிலையை அண்மையில் கொல்லப்பட்ட சவீதி அரேபிய ஊடகவியலாளர் விடயத்தில் டொனால்ட் ரம்ப் கூறிய கருத்தில் காணலாம். கடந்த காலங்களில் டொனால்ட் ரம்ப்பின் வெளியுறவுக் கொள்கைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சீனா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம், ஜெருசலேம் என பல நாடுகளின் மீதான, அமெரிக்காவின் நடவடிக்கைகள் இவற்றிற்கு சிறந்த உதாரணங்கள். மறுபுறம் இவ்வாறான நடவடிக்கைள் ருசியா, சீனா போன்ற நாடுகளின் பலத்தை அதிகரித்துள்ளன.

சீனாவின் வளர்ச்சிக்கு அமெரிக்காவின் தற்போதைய வெளிநாட்டுக் கொள்கையும் ஒரு காரணம். டொனால்ட் ரம்ப்பின் முதல் இரண்டு ஆண்டுகள் பல தடங்கல்கள், தடைகள், ஊடகப் போர்கள், நீதிபதிகளின் மாறான தீர்ப்பு, அதிரடியாக அமைச்சர்கள், அதிகாரிகள் நீக்கம் என பலவற்றை மீறியும் கடந்து கொண்டிருக்கின்றது. றிப்பளிக்கன் கட்சி, இரண்டு அவைகளிலும் பலமாகவிருந்தமை ரம்ப்பிற்கு சாதகமாகவிருந்தது. நவம்பர் மாதம் நடைபெற்ற இடைக்காலத் தேர்தலில் டெமோகிரட்டிக் கட்சி ஒரு சபையை கைப்பற்றி விட்டது. செனட் மட்டுமே றிப்பளிக்கனின் ஆட்சியில் உள்ளது. இது ரம்பின் பல கொள்கைகளை அமுல்படுத்த முடியாமல் போகச் செய்யும். அத்துடன் கடந்த அமெரிக்கத் தேர்தலில், ருசியாவின் ஊழலுக்கு எதிரான விசாரணையில், ரம்ப்பை மேலும் சிக்கலில் மாட்ட டெமோகிரட்டிக் கட்சி முயலும்.

இந் நிலையில் ஜமால் கசாகி (Jamal Khashoggi) துருக்கியில் அமைந்துள்ள சவூதித் தூதரகத்துக்கு சென்ற பொழுது, தூதரகத்தினுள் வைத்து கொல்லப்பட்டார். இவர் ஒரு ஊடகவியலாளர் என்பது குறிப்பிடத்தக்கது. உலகில் பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். எவரையும் உலகம் கண்டு கொள்வதில்லை. ஆனால் ஜமால் கசாகியின் கொலையானது உலகை அதிரவைத்துள்ளது. இதற்கு பல காரணங்கள் உள்ளன.

சம்பவம் நடைபெற்ற இடம் துருக்கி. துருக்கி அரசை மீறி இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. ஒரு நாட்டில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் அந்த நாட்டின் சட்டதிட்டங்களுக்கேற்பவே செயற்படவேண்டும். சவூதி இதனை கட்டுடைத்துள்ளது. இக் கொலையின் பின்னரான ஆய்வுகள் இதில் சவூதியின புதிய இளவரசர் முகமட் பின் சல்மனின் நேரடி தலையீடு இருப்பது தெரியவந்துள்ளது.

சவூதிக்கு உலகின் பல நாடுகள் ஆயுதங்களை விற்பனை செய்கின்றன. கனடா, அமெரிக்கா, தென் ஆபிரிக்கா, சீனா, பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி, ஜோர்ஜியா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்து சவூதி ஆயுதங்களை கொள்வனவு செய்கின்றது. இதில் 61 வீதமான ஆயுதங்கள் அமெரிக்காவிலிருந்தும், 23 வீதமான ஆயுதங்கள் இங்கிலாந்தில் இருந்தும் வாங்கப்படுகின்றன. ஆனாலும் கனடா உட்பட பல நாடுகள், தங்களது நாட்டின் இறமைக்கு பாதிப்பு வருமளவிற்கு சவூதி செயல்படுவதாக குற்றஞ்சாட்டியுள்ளது. கனடிய பிரசை ஒருவருக்கு எதிரான சவூதியின் மனித உரிமை மீறல்களை கனடா கண்டித்திருந்தது. இதனை எதிர்த்து சவூதி, கனடாவில் கல்வி கற்கும் சவூதி மாணவர்களை உடனடியாக வேறு உலக பல்கலைக் கழகங்களுக்குச் செல்லுமாறு பணித்திருந்தது. இதனைத் தொடர்ந்து வேறு சில வணிக முரண்பாடுகளும் கனடாவுக்கும் சவூதிக்குமிடையில் ஏற்பட்டன. இன்றும் அந்த முறுகல் நிலை தொடர்கின்றது. இந்த மனித உரிமை மீறலை, அமெரிக்கா கண்டும், காணாமல் இருந்தது. பிரிட்டன், பிண்ணனியில் சவூதியை கண்டித்து பேச்சுவார்த்தைகளுக்குச் செல்லுமாறு கூறியிருந்தது.

அமெரிக்கா 2018 ஒக்ரோபர் வரையிலான காலப்பகுதியில் 10.8 பில்லியன் டொலர்கள் பொருட்களை சவூதி அரேபியாவிற்கு ஏற்றுமதி செய்துள்ளது. அதே சமயம் எண்ணெய் உட்பட்ட பல பொருட்களை இறக்குமதியும் செய்கின்றது. பெரும்பாலான ஆண்டுகளில் சவூதி அரேபியாவிற்கு அமெரிக்கா இறக்குமதியை விட ஏற்றுமதியே அதிகமாகவிருக்கும். இந் நிலையில் சவூதி அரேபியாவின் திட்டமிட்ட ஊடகவியலாளர் ஜமால் கசாகியின் கொலையை அமெரிக்கா கண்டிக்கவில்லை. சி.ஐ.ஏ இது மொகமட் பின் சல்மானின் நேரடி தலையீட்டின் மூலமே இக் கொலை நடைபெற்றது என்று கூறிய பின்னரும், டொனால்ட் ரம்ப் May be he did, May be he didn't எனக் கூறினார். ஏன் அமெரிக்கா அரசு, சவூதியை கண்டிக்கத் தவறுகின்றது. முதலாவது காரணம் சவூதியுடனான வணிக உறவு, இரண்டாவது மத்திய கிழக்கில் சவூதி அரேபியா மிக ஆளுமையும், பண பலமும் பொருந்திய, ஒரு செல்வாக்கான நாடு, மூன்றாவது ஜனநாயகமற்ற நாடு. எனவே தேர்தல்கள் மூலம், கொள்கைகள் மாற்றமேற்படாது, நான்காவது தீவிர சுனி முஸ்லீம் நாடு, மக்கள் எழுச்சியை கட்டுப்படுத்தும் வல்லமை கொண்டது. ஐந்தாவது மத்திய கிழக்கில் பல நாடுகளில் புதிய தீவிரவாத இயக்கங்களை சவூதி தோற்றுவித்துள்ளது. இந்த அமைப்புகளுக்கு அமெரிக்கா, சவூதி அரேபியாவின் ஊடாக ஆயுதங்களை விற்பனை செய்கின்றது.

உலகெங்கும் ஜனநாயக மீறல்களுக்காக குரல் கொடுக்கும் அமெரிக்கா சவூதி அரேபியாவையிட்டு கவலை கொள்ளவில்லை. அங்கு இராஜ குடும்பத்தின் தொடர்ச்சியான ஆட்சியே அமெரிக்காவின் தேவையாகவும் உள்ளது. 9/11ன் பின்னர் சவூதி அரச குடும்பத்தினர் தனி விமானத்தில் சவூதிக்கு அனுப்பப்பட்டனர். 9/11ன் தாக்குதலின் குற்றவாளிகள் என அடையாளங் காணப்பட்ட 19 பேரில், 15 பேர் சவூதி பிரசைகள்; ஒசமா பின் லாடனின் வளர்ச்சியில் கணிசமான பங்கு சவூதி அரேபியாவிற்குமுண்டு. குளோபல் ரிசேர்ச் நியுஸ்ன் பிரகாரம் 2001ல் அதாவது 9/11 நடைபெற்றபோது உலகில் 60,000 ஜிகாடியினர் இருந்தனர். இன்று 70 நாடுகளில் 240,000 ஜிகாடியினர் உள்ளனர். இந்த தொகை அதிகரிப்புக்கு சுனி முஸ்லீம் நாடான சவூதி அரேபியா பிரதான காரணமாகும்.

வோசிங்டன் போஸ்ட்ன் செய்தி ஆய்வு ஒன்றில், மத்திய கிழக்கில் சுதந்திரமாக இயங்கி வந்த பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதனை சவூதி அரேபியாவே செய்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. Tewfik Mishlawi பாலஸ்தீனியர். இவர் நடு



நிலைமையான ஊடகவியலாளர். இவர் 2012ல் கொல்லப்பட்டார். An Nahar பத்திரிகையின் பத்தி எழுத்தாளர் Samir Kassir . லெபனானை பிறப்பிடமாகக் கொண்டவர். 2005ல் படு கொலை செய்யப்பட்டார். May Chidiac மற்றொரு லெபனிய தொலைக் காட்சி நிருபர். 2005ல் காரினுள் குண்டு வைக்கப்பட்டு, உடல் உறுப்புக்களை (இடது கால்,கை) இழந்துள்ளார். Gebran Tueni, An Nahar பத்திரிகை ஆசிரியர். லெபனான் பாராளுமன்ற உறுப்பினர். டிசம்பர் 2005ல் கார்க் குண்டால் கொல்லப்பட்டார். இவர் கொல்லப்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு, இவரது தந்தையாரும், சிறந்த ஊடகவியலாளருமான Ghassan Tueni பின்வருமாறு எழுதியிருந்தார்.

எங்களுக்கு, உண்மைச் செய்தியகமானது ஜனநாயகமனதும், சுதந்திரமானதுமாகும். இங்கு மக்கள் கருத்துக்களை, அபிப்பிராயங்களை சுதந்திரமாக முன்வைக்கும் பொது ஸ்தலமாகும். இது நல்ல பயனளிக்கக் கூடிய மாற்றத்துக்கான கருவியாகும். **"For us, a real press is democratic and free. It is a forum where public opinion can express itself. It is an effective tool for change."**

அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை என்பது தார்மீகமானதல்ல. சுய நலமானது. இது டொனால்ட் ரம்ப்பினால் மட்டும் தீர்மானிக்கப் பட்டதல்ல. முன்னரும் இதே நிலைதான் இருந்தது. ஆனாலும் இடைக் காலத் தேர்தல் மூலம் ஒரு சபையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த டெமோகிரட்டிக் கட்சியினர் இந் நிலையை மாற்றக் கூடியவர்கள். இம் முறை அதிகளவு பெண்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். எனவே தீர்க்கமான முடிவு ஒன்றிற்கு அமெரிக்க அரசு தள்ளப்படலாம்.

சவூதி அரேபியா, அமெரிக்காவிடம் 80 பில்லியன் டொலர்கள் பெறுமதியான அணு ஆயுத திட்டம் ஒன்றை வாங்குவதற்கு அல்லது அமெரிக்கா, சவூதியில் அமைத்துக் கொடுப்பதற்கு கேட்டுள்ளது. இது ரம்ப்பிற்கு ஒரு பெரிய லாபமான விடயம். ஆனால் டெமோகிரட்டிக் கட்சியினர் முதலில் கசாகியின் கொலைக்கான தீர்வின் பின்னரே, இதனைப் பற்றி சிந்திக்கலாம் எனக் கூறுகின்றனர். எனினும், சவூதியின் இந்த அணு ஆயுத திட்டத்தை எப்படியும், அமெரிக்கா செயற்படுத்தவே முயலும். பக்கத்தில் ஈரான் அணு ஆயுத உற்பத்திச் சாலைகளுடன் உள்ளதாக நீண்ட காலமாக அமெரிக்கா குற்றஞ் சாட்டி வருகின்றது. ஈரானில் உண்டோ, இல்லையோ, அமெரிக்காவிற்கு சவூதி ஒரு பொன் முட்டையிடும் கோழி.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் அதிகளவு அட்டூழியங்களும், மனித உரிமை மீறல்களும் சவூதி அரேபியாவால், யமனுடான போரில் செயப்பட்டுள்ளது. ஜமால் கசாகியின் கொலை, சவூதியின் தொடர்ச்சியான மனித உரிமை மீறல்களைப் பற்றி அமெரிக்கா மவுனம் சாதிப்பதற்கு, சவூதி தொடர்ச்சியாக ஆயுதங்களையும், இராணுவ ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டிருக்கும். ஏற்கனவே 110 பில்லியன் டொலர்களுக்கான ஆயுத விற்பனை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. செப்ரம்பர் 30க்கு முன்னர் முழமையான ஆயுதங்களையும் சவூதி வாங்க வேண்டும். இரண்டு நாட்களின் பின்னர் ஒக்ரோபர் இரண்டு கசாகி கொல்லப்பட்டுள்ளார்.

ஜமால் கசாகி அமெரிக்க வோசிங்டன் போஸ்ட் உட்பட்ட பத்திரிகைகளில் எழுதி வந்தார். அற்லான்றிக் உட்பட்ட பத்திரிகை ஆசிரியர்களின் நெருக்கமான நண்பர். அமெரிக்க ஊடகங்களின் தலையீடும், அமெரிக்க வெளியுறவுக் கொள்கையை ஆய்வு செய்யும் கொங்கிரசின் குழுவும், டொனால்ட் ரம்ப்பை ஒரு தீர்மான முடிவை எடுக்குமாறு வலியுறுத்துகின்றது. இது சவூதி அரேபியாவிற்கு எதிராக இருக்கும் பட்சத்தில், அது சவூதி— அமெரிக்க உறவில் மாற்றத்தை ஏற்படுத்தும். ஆனால் டொனால்ட் ரம்ப் ஆட்சியிலிருக்கும் வரை அது சவூதிக்கு எதிராக அமையாது. அமெரிக்கா கண்துடைப்புக்கு கண்டிக்கும். அமெரிக்கா ஒரு பொழுதும், சவூதி அரேபியாவிற்கு எதிராக செயற்படாது, செயற்படவும் இல்லை.

**ரதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஹிட்லர் அலெக்ஸ்சான்டர்

# Alexander Gauland

ஹிட்லர் பிறந்த மண்ணிலிருந்தே புதிதாக ஒரு ஹிட்லர் தோன்றியுள்ளார். கிழக்கு ஜேர்மனியில் 1941ல் பிறந்த இவர், 1959ல் மேற்கு ஜேர்மனிக்கு புலம் பெயர்ந்து, அங்கு உயர் கல்வி கற்றார். அரசியல் விஞ் ஞானத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். பிரான்க்போர்ற் மேயர் அலுவலகத்தில் பிரதம அதிகாரியாக பத்து வருடங்கள் கடமையாற்றினார். பின்னர் மேற்கு ஜேர்மனி அரசில், பிரதம அதிகாரியாக கடமையாற்றியுள்ளார். 1991—2006 காலப் பகுதியில் ஜேர்மனியிலிருந்து வெளிவரும் Märkische Allgemeine பத்திரிகையின் ஆசிரியராக இருந்துள்ளார்.

இவர் தனது அரசியல் தளத்தை, தற்போதைய ஜேர்மன் அதிபர் அன்கெலா மெர்க்கலின் கட்சியான Märkische Allgemeine ல் கட்சியிலிருந்து ஆரம்பித்தார். அதன் உறுப்பினராக இருந்துள்ளார். இக் கட்சி ஒரு மத்திய வலது சாரிக் கட்சி. இதனை ஒரு தீவிர வலது சாரிக் கட்சியாக மாற்றும் முயற்சியில் பேர்ளின் சேர்க்கில் என்ற குழு முயற்சித்தது. இக் குழுவில் இணைந்து பணிபுரிந்துள்ளார். (Berliner Kreis ("Berlin circle")) அமெரிக்காவில் இயங்கும் ரீ பார்ட்டி போன்றது பேர்லின் சேர்க்கிள். 2010ல் அன்கெலா மெர்க்கல் முதலில் கிறீசுக்கு எந்த வித பண உதவியும் ஜேர்மனி வழங்காது என தெரிவித்திருந்தார். பின்னர் சில மணி நேரங்களிலேயே தனது கூற்றை மாற்றி, கிறீசுக்கு நிதியுதவி வழங்குவதாக ஐரோப்பிய பாரளுமன்றத்திடம் தெரிவித்திருந்தார். அன்கெலா மெர்க்கலின் இந்த நடவடிக்கை, ஜேர்மனியின் பழமைவாதிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து கிறிஸ்ரியன் டெமோகிரடிற் கட்சிக்கு மாற்றீடாக ஒரு கட்சி ஒன்று அமைக்கப்பட வேண்டும் என பழமைவாதிகள் தீர்மானித்தனர். அதன் விளைவு Konrad Adam, Bernd Lucke, Alexander Gauland ஆகியோர் இணைந்து மாற்று ஜேர்மனிக் கட்சியை ஆரம்பித்தனர். இக் கட்சி ஜேர்மன் மொழியில் Alternative für Deutschland vd miof என அழைக்கப்படும் (AFD). 2013 சித்திரையில் ஆரம்பிக்கப்பட்ட இக் கட்சி, 2013 புரட்டாதியில் நடைபெற்ற தேர்தலில் 5வீத வாக்குகளையே பெற்றிருந்தனர். 2017 பொதுத் தேர்தலில் 94 ஆசனங்களைக் கைப்பற்றினர். மொத்தம் 598 ஆசனங்களைக் கொண்ட ஜேர்மன் பாராளுமன்றத்தில் அதிபர் அன்கெலா மெர்க்கலின் கட்சி 246 ஆசனங்களையே பெற்றது. 2013 தேர்தலை விட 65 ஆசனங்கள் குறைவாக பெற்றது. இரண்டாம் இடத்தை மார்ட்டின் சுல்ஸ்ன் சோசியல் டெமோகிரடிட் கட்சி பெற்றது. மூன்றாம் இடத்தையே மாற்று ஜேர்மனிக் கட்சியால் பெறமுடிந்தது. பிறீ டெமோகிரடிட் கட்சி (FDP), இடது சாரிக்கட்சி, பசுமைக் கட்சி ஆகிய கட்சிகள் முறையே 10.7, 9.2, 8.9 வீத வாக்குகளைப் பெற்றனர். ஜேர்மன் பாராளுமன்றம் ஒரு தொங்கு பொறி பாராளுமன்றமாகியது. இக் கட்சிகளுள் மாற்று ஜேர்மனிக் கட்சியே இளமையானதும், புதியதுமாகும். எனவே இக் கட்சியின் வெற்றியானது ஜேர்மன் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை வெளிப்படுத்துகின்றது.

மாற்று ஜேர்மன் கட்சியை பல பெயர்களில் விபரிக்கின்றார்கள். அல்லது விமர்சிக்கின்றார்கள். ஜேர்மன் தேசியவாதிகள், (German nationalist) வலது ஜனரஞ்சக அணி, (right-wing populist), Eurosceptic, (ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எதிரானவர்கள்)என்ற பெயர்கள் இவர்களுக்கு சூட்டப்பட்டுள்ளன. இக் கட்சியினஙர் தீவிர வலது சாரி குழுவான பெகடா ((Pegida) (Patriotic Europeans Against the Islamisation of the Occiden)) வுடன் இணைந்து செயற்படுகின்றனர். பெகடா ஒரு தீவிர முஸ்லீம் எதிர்ப்பு அணி— தேசிய ஜேர்மன் அணி. அத்துடன் தீவிர வலது சாரி அணி. செனபோபியா (வெளிநாட்டவருக்கு எதிரான), ஐடென்ரிரெரியன் ( identitarian movement – வெள்ளை இனவாத அமைப்பு) , நியோ நாசி அமைப்புக்களுடனும் இணைந்து செயற்படுகின்றது.

மாற்றுஜேர்மனிக்கட்சியின்இணைத் தலைவரான அலெக்ஸ்சான்டர் கவ்லன்ட், கட்சியின் கொள்கைகளை





பிரச்சாரப்படுத்துவதில் வல்லவர். இக் கட்சியானது டொனால்ட் ரம்ப்ன் ஒற்றை அமெரிக்கா அல்லது அமெரிக்கா மட்டும், அமெரிக்கா அமெரிக்கருக்குரியது என்ற கொள்கையை கடைப்பிடிக்கின்றார்கள். ஜேர்மன், ஜேர்மனி மக்களுக்கு மட்டுமானது என்பது இக் கட்சியின் கொள்கை. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றை நாணயத்தை இக் கட்சி நிராகரிக்கின்றது. ஜேர்மனிக்குள் வரும் அகதிகளையும் இக் கட்சி நிராகரிக்கின்றது. குறிப்பாக முஸ்லீம் அகதிகள் வருகை நிறுத்தப்பட வேண்டும் என்பது இக் கட்சியின் தீவிர கொள்கையாகவுள்ளது.

அலெக்ஸ்சான்டர் கவ்லன்ட் பல மேடைகளிலும், செவ்விகளிலும் கூறிய கருத்துக்கள் ஊடகங்களில் சர்ச்சைகளை உருவாக்கியுள்ளன. அதே சமயம் இது இவருக்கு ஜேர்மன் மக்கள் மத்தியில் பெருத்த வரவேற்பையும் பெற்றுக் கொடுத்துள்ளது. யுரோ 2016 உதைபந்தாட்டப் போட்டியின் போது ஜேர்மனி அணியில் விளையாடிய ஜெரோமி பொட்டிங் (Jérôme Boateng) மேற்கு ஜேர்மனியில் பிறந்தவர். இவரது தாயார் ஒரு ஜேர்மனியர். தந்தையார் கானா நாட்டிலிருந்து ஜேர்மனிக்கு புலம் பெயர்ந்தவர். இவரைப் பற்றி அலெக்ஸ்சான்டர் கவ்லன்ட் "எனது வீட்டிற்கு அருகில் இவரைப் போன்ற ஒருவர் இருப்பதனை நான் விரும்பமாட்டேன்" எனக் கூறினார். இது பின்னர் பல சர்ச்சைகளை ஏற்படுத்தி, இறுதியில் மன்னிப்புக் கேட்டார். ஆனால் கருத்து நிலையில் இவர் மாறவில்லை.

டொனால்ட் ரம்ப், முஸ்லீம் மக்கள் அதிகம் வாழும் எட்டு நாட்டு பிரசைகள் அமெரிக்காவினுள் நுழைவதைக் கட்டுப்படுத்தினார். அதே போன்ற ஒன்றை ஜேர்மனியும் சட்டமாக்க வேண்டும் என பல தடவைகள் கவ்லன்ட் தெரிவித்துள்ளார். "not everyone who holds a German passport is German," – ஜேர்மன் கடவுச் சீட்டு வைத்திருப்பவர்கள் ஒவ்வொருவரும் ஜேர்மனியர்கள் அல்ல என்ற கவ்லன்ட்ன் பேச்சும் ஊடகங்களால் பிரபல்யப்படுத்தப்பட்டது. அடிப்படையில் இது ஒரு இனவாதக் கருத்து. குறிப்பாக ஜேர்மனியில் உள்ள குடிவரவாளர்களுக்கு எதிரானது இக் கருத்து.

Frankfurter Allgemeine Zeitung என்ற ஜேர்மன் நாளேட்டில், அலெக்ஸ்சான்டர் கவ்லன்ட் எழுதிய ஒரு பத்தி, ஹிட்லரின் கருத்துக்களை ஒத்தது என பல அரசியல் விஞ்ஞானிகள், விமர்சகர்கள் கருதுகின்றனர். 1933 கார்த்திகை மாதம், பேர்லினில் ஹிட்லர் clique – தன்னலக் குழு என்ற பதத்தை விபரித்தார். "அவர்கள் இங்குள்ளார்கள். நாளை எங்கும் இருப்பார்கள் அவர்கள் பிறந்த இடத்தில், வளர்ந்த இடத்தில் அவர்களுக்கான இடமில்லை. இன்று பேர்லினில் உள்ளார்கள், நாளை புறுசெல்ஸ்லில் இருப்பார்கள். மறு நாள் பரிசில் இருப்பார்கள், பின்னர் வியன்னா, லண்டன் என பரவுவார்கள். அங்கு அவர்கள் நிரந்தரமாக தங்குவார்கள் அவர்கள் தங்கள் வீட்டை எங்கும் அமைப்பார்கள்". இப் பேச்சு அன்று யூத இனத்தவர்களை நோக்கியே ஹிட்லரால் பேசப்பட்டது.

இன்று அதே ஒத்த கருத்தை அலெக்ஸ்சான்டர் கவ்லன்ட் எழுதியுள்ளார். clique – தன்னலக் குழுக்கு பதிலாக globalised class சர்வதேச வகுப்பினர் என்ற பதத்தை பாவித்துள்ளார். "இவர்கள் பிரதான நிறுவனங்களில் அங்கம் வகிக்கின்றார்கள். ஊடகங்கள், கல்வி நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள், என்.ஜி.ஓக்கள், அரசியில் கட்சிகள் என அனைத்திலும் உள்ளார்கள். அவர்கள் குறிப்பாக மிகப் பெரிய நகரங்களில் வாழ்கின்றார்கள். ஆங்கிலம் நன்றாக பேசுவார்கள். அவர்கள் பேர்லினிலிருந்து சிங்கப்பூருக்கோ, லண்டனுக்கோ வேலை நிமித்தம் செல்லும் போது அங்கும் நல்ல வசதி வாய்ப்புக்களுடன் வாழ்வார்கள். அவர்கள் தங்களுக்குள்ளேயே விருந்தோம்பல்களை, கேளிக்கைகளை நடத்துவார்கள்". culturally colourful - என்ற பதத்தையும் இவர் தனது கட்டுரையில் மேற்கூறியவாறு விபரித்துள்ளார். ஹிட்லர் யூத இனத்தை குறிவைத்து பேசினார். கவ்லன்ட் குடிவரவாளர்களை குறிப்பாக முஸ்லீம் குடிவரவாளர்களை குறிவைத்து எழுதியுள்ளார்.

மாற்று ஜேர்மனிக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் "நான் வீதியில் நிற்கும் பொழுது, ஒருவரைப் பார்த்து அவர் ஜேர்மனியர் என்று என்னால் கூற முடியாமல் உள்ளது" "When I'm on the street, I can't tell if someone is a German citizen just by looking at them" இது அடிப்படையில் இக் கட்சி குடிவரவாளர்களை எவ்வாறு பார்க்கின்றது என்பதையே சுட்டிக் காட்டுகின்றது. அலெக்ஸ்சான்டர் கவ்லன்ட் 2017 தேர்தலின் போது இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரின் இராணுவம் செயலாற்றிய முறை பாராட்டுக்குரியது எனத் தெரிவித்துள்ளார். அத்துடன் ஜேர்மன் சரித்திரத்தில் ஹிட்லரின் செயற்பாடு முக்கியமானது எனவும் தெரிவித்துள்ளார்.

Hitler and the Nazis are just a speck of bird poop in more than 1,000 years of successful German history, only those who acknowledge the part have the power to shape the future.

– Alexander Gauland

வளர்ந்து வரும் நாடுகளில் மேற்கால் தோற்றுவிக்கப்பட்ட இன வேற்றுமை அரசியல் திட்டங்களால், தேசிய இனப் போராட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. அதன் விளைவாக பல இலட்சம் மக்கள் மேற்கை நோக்கி புலம் பெயர்கின்றனர். ஜேர்மனியிலும், ஐரோப்பா, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா என பரந்து இவர்கள் புலம் பெயர்ந்துள்ளனர். ஜேர்மனி, இத்தாலி, சுவீடன் என தோன்றியுள்ள புதிய ஜனரஞ்சக குடிவரவாளர்கள் எதிர்ப்பு வலது அணிக் கட்சியினர், இனத் துவேசத்தை பரப்பி வருகின்றனர். அதன் விளைவு குடிவரவாளர்கள் மேல் தாக்குதல்கள் நடைபெறலாம். தொழில்நுட்ப வளர்ச்சியால் வேலை இல்லாமல் போகும் பொழுது கூட, குடிவரவாளர்களே குறிவைக்கப்படுவார்கள். பல ஐரோப்பிய நாடுகளில் சிறுபான்மை அரசுகளே ஆட்சியில் இருப்பதனால், இவ்வாறான இனவாதக் கட்சிகள் தங்கள் கொள்கைகளை அரசின் மீது திணிக்கின்றன. இது மிகவும் ஆபத்தானது. அலெக்ஸ்சான்டர் கவ்லன்ட் போன்றோரின் வளர்ச்சி என்பது தமிழருக்கும் ஆபத்தானது. அவரது மாற்று ஜேர்மனிக் கட்சியில் தேர்தலுக்கு நின்று "தமிழா;, தமிழருக்கு வாக்களியுங்கள்"எனக் கேட்டால், தயவு செய்து வாக்களிக்காதீர்கள். நீங்கள், உங்கள் அழிவையே தீர்மானிக்கின்றீர்கள்.

சுமிநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுமாறுகிறாரா ஜஸ்ரின் ரூடோ?

சிரித்த முகத்துடன், கவர்ச்சியான இளம் தலைவராக, இளையவர்கள் விரும்பிப் படம் எடுத்துக்கொள்ளும் ஒருவராக, ஒரு 'மாடல்' தோற்றத்துடன் அனைத்து இளையவர்களையும் வைத்த கண் வாங்காமல் பார்க்க வைக்கும் ஜாம்பவானாக, கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ உலக அரங்கின் 'ரப்லொய்ட்ஸ்' வகையிலான ஊடகப் பரப்பில் பரபரப்பாகப் பேசப்பட்ட ஓரிரு வருடங்கள், கனடாவிற்கு ஒரு சாதகமான வெளித்தோற்றத்தை உருவாக்கியிருந்தாலும், உள்நாட்டு வெளிநாட்டு அரசியல், வர்த்தகம், உறவுகள், தொடர்புகள், சாணக்கியமான காய் நகர்த்தல்கள், ராஜதந்திர நகர்வுகள் போன்ற, ஒரு பொருண்மியப் பலமுள்ள கனடிய நாட்டின் தலைவருக்கான பல்வேறு தகைமைகள் விடயத்தில், ஜஸ்ரின் ரூடோ மிகப்பெரிய அளவில் கோட்டை விட்டுவிட்டார் என்பதையே மைய ஊடக ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவின் பிந்திய சில தடுமாறல்களாக, பின்வரும் விடயங்கள் சுட்டிக் காட்டப் படுகின்றன.

1. இவ்வருடம் கனடிய தின நிகழ்வில் கலந்துகொண்ட பிரதமர், தனது பிரதான உரையில், கனடாவின் மாகாணங்களைப் பெயர்சொல்லி வாழ்த்தினார். அவர் வழங்கிய மாகாணங்களின் பட்டியலில் அல்பேட்டாவைத் தவறவிட்டார். கனடாவின் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவல்ல எண்ணைவள உற்பத்தியின் பிறப்பிடமான அல்பேட்டா மாகாணத்தை பிரதமர் எப்படித் தவறவிட்டார் என்பதற்கு இன்றுவரை காரணம் கூறப்படவில்லை.
2. வெளிப்படைத்தன்மை கொண்ட ஒரு அரசாங்கத்தை அமைக்கப்போவதாக தேர்தல் வாக்குறுதி வழங்கிய பிரதமர், ஒரு கனடியப் பிரஜையின் தனிப்பட்ட தகவல்கள் எதையாவது அரசிடமிருந்து பெறுவதாக இருந்தால், அதற்கான வாய்ப்புக்களை மேலும் இறுக்கமடையச்செய்து, அரசிடமிருந்து தனிப்பட்ட தகவல்கள் பெறும் தனிநபர் உரிமையை மேலும் மழுங்கடித்தார்.
3. பிரதமர் தன் குடும்பத்துடன் பஹமாஸ் நாட்டுக்கு உல்லாசப்பயணம்மேற்கொண்டார். தனது குடும்பத்தின் தனிப்பட்ட விடுமுறைப் பயணத்திற்கு, அரசின் 215,000 டொலர்களைச் செலவிட்டார். அதாவது மக்களின் வரிப்பணத்தில் உல்லாசப்பயணம் செய்த பிரதமர் என்ற குற்றச்சாட்டிற்கு ஆளானார்.
4. அதிகரித்த போதைப்பொருள் பாவனையால், ஒரு நாளுக்கு சராசரி 16 கனடியர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறார்கள் என்ற கணிப்பு வெளியானது. மிகவும் அதிர்ச்சியான இந்தத் தகவல், கனடியப் பிரதமரை அதிர்ச்சிக்குள்ளாக்கவில்லை. போதைப்பொருள் விற்பனையை சட்டபூர்வமாக்கி, இளையவர்கள் கையில் போதைப்பொருள் இலகுவில் கிடைக்க மேலதிக வாய்ப்புக்களை உருவாக்கினார் பிரதமர்.
5. சுற்றுச்சூழல் மாசுபடுவதை குறைக்கப் பாடுபடவிருப்பதாக தேர்தல் வாக்குறுதி வழங்கிய ஜஸ்ரின் ரூடோ, நிலக்கரி உற்பத்தி, நிலக்கரி மூலமான எண்ணை உற்பத்தி போன்றவற்றில் மாற்றங்களை உருவாக்கப்போவதாக உறுதியளித்தார். 2025ம் ஆண்டுவரை, நிலக்கரி உற்பத்தி விடயத்தில் எந்த மாற்றத்தையும் உருவாக்கப் போவதில்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது.
6. சுற்றுச்சூழல் தூய்மையைப் பேண இரவு பகலாகப் பாடுபடப்போவதாக வாக்குறுதி வழங்கிய பிரதமர், 'ட்ரான்ஸ் மவுன்டன்பைப்லைன்' விடயத்தில், அதை நிராகரிக்கப்போவதாக முன்னர் வழங்கிய வாக்குறுதியிலிருந்து வெளியேறி, அதை ஏற்றுக்கொள்ளப்போவதாக அதிர்ச்சி அறிவித்தல் விடுத்தார்.
7. ஒருபால் திருமணத்தை முழுமையாக ஆதரிப்பதாக கனடிய மக்களுக்கு வாக்குறுதி வழங்கிய பிரதமர், ஒரு பக்கத்தில் இந்த விடயம் தொடர்பாக தன்னை மக்கள் தோழன் போன்று காட்டிக்கொண்டாலும், அவர் அறிவித்த புதிய சட்டங்கள் சில, இதற்கு எதிர்மாறாக அமைந்தன. ஒரு ஆணுடன் இன்னுமொரு ஆண் உறவு வைத்துக்கொண்டால், அவர்கள் குருதி நன்கொடை வழங்குவது தடைசெய்யப்படுவதாக சட்டம் வரைந்த பிரதமர், குருதி நன்கொடை வழங்குவதாக இருந்தால், ஒரு வருடத்திற்காவது உறவு கொள்ளாமல் இருக்கவேண்டுமென்று அறிவித்து, ஒருபால் திருமணம் செய்துகொண்டோரை அதிருப்திக்கு உள்ளாக்கினார்.
8. கனடாவில் குழந்தை பெறும் பெற்றோர், குழந்தையைக் கவனிக்க போதிய காலம் ஓய்வு வழங்கப்படுவதில்லை என்று குற்றம் சுமத்திய பிரதமர், தனது தேர்தல் வாக்குறுதியாக, தான் பிரதமரானால் பெற்றோருக்கு 18 மாதங்களை வழங்கும் திட்டத்தை அறிவித்தார். அடுத்த தேர்தலும் வருகிறது, இந்த வாக்குறுதி காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது.
9. கனடாவின் கடன்நிலுவை மேலும் மோசமடைந்துள்ளது. 2016—17 காலப்பகுதியில் கடன் பற்றாக்குறையை 9.9 பில்லியனாகக் குறைப்பதாக வாக்குறுதி வழங்கிய பிரதமர், 23 பில்லியனாக உயர அனுமதித்து, கனடாவை கடன் சுமைக்குள் தள்ளினார். அது 28.5 பில்லியனாக மேலும் உயர்வடையும் என இப்போது தகவல்கள் வெளியாகின்றன.
10. தனது தேர்தல் பிரச்சாரத்தின்போது, கனடிய தேர்தல் முறைமை மிகவும் குறைபாடுடையது என்று குற்றம் சுமத்திய ஜஸ்ரின் ரூடோ, தான் பிரதமரானால் அதை முழுமையாக மாற்றப்போவதாக வாக்குறுதி வழங்கினார். எனினும், தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர், தேர்தல் முறைமையில் செய்யக்கூடிய எந்த மாற்றமும், லிபரல் கட்சியின் தேர்தல் வெற்றியைப் பாதிக்கலாம் என்று கண்டறியப்பட்டதால், இருக்கின்ற தேர்தல் முறைமை சரியானதே என்று புதிய தகவல் கூறினார் பிரதமர்.
11. சிறீலங்காவின் மனித உரிமை மீறல் விடயத்தில், தமிழர்களின் வாக்குகளைப் பெறும் நோக்குடன், சிறீலங்காவில் குற்றம் புரிந்திருக்கக்கூடியதாக நம்பப்படும் நபர்களுக்கு பயணத்தடையும் ஏனைய பல்வேறு நிபந்தனைகளும் விதிக்கவுள்ளதாக தனது தேர்தல் பிரச்சாரத்தின்போது வாக்குறுதி வழங்கிய ஜஸ்ரின் ரூடோ, தமிழர் வாக்குகளை உறுதிசெய்வதற்காக, தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இந்த உறுதிமொழியை இணைத்துக்கொண்டார். எனினும் தேர்தல் முடிவடைந்த பின்னர் இந்த உறுதிமொழிகளைக் காற்றில் பறக்கவிட்ட பிரதமர், இதுவரை சிறீலங்கா விடயத்தில் பாராமுகமாகவே இருக்கிறார். எந்த நடவடிக்கையும் எடுப்பதாக இல்லை.
12. சட்டரீதியாக அகதி உரிமை கோருவோரை வரவேற்கும் கனடாவின் விதிகளைத் தாண்டி, சட்டத்திற்குப் புறம்பாக களவாக எல்லை கடக்கும் அகதிகளை உற்சாகப்படுத்தும் விதத்தில் கருத்துக்களைக் கூறி, கனடிய சட்டதிட்டங்களைக் காற்றில் பறக்கவிட்டார்.
13. அமெரிக்கா—மெக்சிக்கோவுடனான 'நஃப்டா' வர்த்தக ஒப்பந்த விடயத்தில், அளவுக்கதிகமான விட்டுக்கொடுப்புக்களை அனுமதித்ததால், கனடிய ஏற்றுமதிச் சந்தை பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டது. இரும்பு மற்றும் அலுமினிய ஏற்றுமதி விடயத்தில் மிக மோசமாக அமெரிக்க வரிவிதிப்பை அனுமதித்ததால், உற்பத்தியாளர்கள் கடும் பாதிப்பை எதிர்கொண்டனர்.



விரைவில் வரவிருக்கும் கனடிய பொதுத்தேர்தல், ஜஸ்ரின் ரூடோவுக்கு மிகப்பெரும் சவாலாக அமையுமென்று மைய ஊடகங்கள் ஆரூடம் கூறுகின்றன.

**குயின்ரஸ் துரைசிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1st Annual Royal LePage Ignite Christmas Gala Night



# தாயகத்தில் கடந்த 10 வருடங்களாக தமது சேவையை ஆற்றிவரும் அன்பு நெறி நிறுவனம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32,000 டொலர்களை வழங்கிய சொர்ணாவின் "இசையரங்கம் "

# முற்றத்து மல்லிகை மணம் பரப்பியது














உலகப் பிரசித்தி பெற்ற ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் தமிழுக்கான ஓர் இருக்கை அமைப்பதற்கான ஒப்பந்தம் செய்தபோது ஜூன் 25ம் திகதி அதற்கான அங்குரார்ப்பண் கூட்டம் நடந்தது. அதில் பலர் தங்களால் இயன்ற நிதிப் பங்களிப்பை செய்தார்கள். எங்கள் கவிஞர்களின் வரிகளுக்கு எங்கள் கலைஞர்கள் மெட்டமைக்க எங்கள் பாடகர்கள் பாடுவதற்கு களம் அமைக்கும் இசையரங்கம் தமிழ் இருக்கைக்கு 30,000 டொலர்களை ஓர் இசை நிகழ்ச்சி மூலம் சேர்த்து தருவேன் என உறுதியளித்தது. அதுவும் எந்த சினிமாப் பாடல்களையும் இசைக்காது முற்று முழுதாக கனடிய தமிழர்களால் உருவாக்கப்பட்ட பாடல்களை மட்டும் பாடுவதாக முடிவெடுத்து நிகழ்வுக்கு 'முற்றத்து மல்லிகை' என பெயர் சூட்டப்பபட்டது.

டிசம்பர் 1ம் திதி மக்டொனால்ட் கல்லூரி கலையரங்கிலே குறிப்பிட்டபடி சரியாக 6.00 மணிக்கு நிகழ்வு அமைதி வணக்கத்தோடு ஆரம்பித்தது. நிகழ்வில் 32,000 டொலர்கள் ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் சார்பாக வந்திருந்த ஜோஜற் சினாற்றியிடம் கையளிக்கப்பட்டது. அந்த மேடையில் பலர் தங்கள் பங்களிப்பை நெரடியாக ஜோஜற'றிடம் மேடையில் வந்து கொடுத்தார்கள். மொத்தமாக அந்த இசை நிகழ்வின்போது ஒரு இலட்சம் டொலர்கள் ரொறன்ரோ தமிழ் இருக்கைக்கு சேர்ந்தது.

நிகழ்விலே 18 பாடல்கள் 20 பாடகர்களால் பாடப்பட்டது. அத்தனை பாடல்களும் முத்தாக இருந்தது. அதிலே மிக கவனிக்க வேண்டியது. யார் யாரெல்லாம் சிறந்த பாடகர்களென நாம் நினைத்தோமோ அத்தனை பேரும் அந்த மேடையில் எமது பாடல்களை பாடினார்கள். பாடிய பாடகர்களும் பின்னணி இசைவழங்கியவர்களும் மிகவும் பிரமாதமாக இசைத்தார்கள். இப்படியெல்லாம் பாடல்களும் பாடக்கூடியவர்களும் எம்மிடையே இருக்கும்போது ஏன் நாம் வேற்று பாடல்களை மேடைகளில் பாடவேண்டும் என எண்ணினேன். அதே கருத்தை இசையரங்கம் சொர்ணலிங்கமும் முன் வைத்தது வியப்பை தந்தது. நிகழ்ச்சியில் நன்றியுரை ஆற்ற வந்த சொர்ணலிங்கம் இசையைப் பற்றியும் தமிழ் இசையின் பெருமைபற்றியும் கனடாவிலே மிகவும் திறமையான இசைக் கலைஞர்களும் பாடகர்களும் இருப்பதாகவும் பல தரமான பாடல்கள் இசைத்தட்டாக வெளியிடப்பட்டிருப்பதாகவும் கூறினார். அனால் 200க்கு மேற்பட்ட பாடல்கள் கனடாவில் உருவாக்கப்பட்டிருப்பது பலருக்கு தெரியாது என்றார். அந்தப் பாடல்கள் வானொலிகளிலும் இசைக்கப்படுவதில்லை. மேடைகளிலும் பாடப்படுவதில்லை என்றும் தனிய இசையரங்க மேடையில் மட்டுமே இசைக்கப் படுவதாகவும்கூறி சில வேண்டு கோள்களை விடுத்தார்.

1. *வானொலிகள் சராசரியாக 6 பாடல்களை மணித்தியாலம் ஒன்றுக்கு இசைக்கிறது. அதில் இரண்டு பாடல்கள் எம்மவர் பாடல்களாக இருக்க வேண்டும் என வானொலி உரிமையாளர்களிடம் கேட்டுக்கொண்டார்.*
2. *எந்த இசை நிழ்வை செய்தாலும் அதில் 25 வீதம் கனடியப் பாடல்கள் சேர்க்கபடுவதை உறுதி செய்ய வேண்டும் என விழா அமைப்பாளர்களிடம் கேட்டுக் கொண்டார்.*
3. *மேடையில் பாடும் பாடகர்கள் பலர் கனடிய பாடல்களை பாடியிருக்கிறார்கள். அவர்கள் இனிமேல் காலங்களில் குறைந்தது ஒரு பாடலாவது தனது பாடலைப் பாடவேண்டும் என கேட்டுக் கொண்டார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாக்க இன்றே திட்டமிடுங்கள்?

Super Visa
100% Refund if
Visa Denied




போதுமான பாதுகாப்பே குடும்பத்தில்
நிறைவான நிம்மதியைத் தரும்.

உங்களிடம் உள்ள காப்புறுதி உங்களுக்கு எவ்வாறான
பாதுகாப்பைத் தருகிறது என்று அறிய வேண்டுமா?
இலவச ஆலோசனைக்கு என்னை அழையுங்கள்.

உங்களுக்கு விரும்பிய காப்புறுதி
நிறுவனத்தில் காப்புறுதி செய்யலாம்

**திலீபன் இராமநாதன்** BBM (Hons)
**(Thileepan Ramanathan)** Dir : (647) 381-8445
ஆயுள் காப்புறுதி முகவர் Email: itsthil@yahoo.ca

ஆயுள் காப்புறுதி விலைவிபரங்கள்

| வயது | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காப்புறுதி தொகை | காப்புறுதி வருடங்கள் | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200 000 | 10 | 15 | 11 | 15 | 12 | 16 | 14 | 19 | 18 | 26 | 21 | 34 | 26 | 62 | 45 | 99 | 71 | 167 | 111 | 294 | 204 |
| 500 000 | 10 | 28 | 18 | 28 | 19 | 29 | 23 | 36 | 8 | 51 | 37 | 76 | 54 | 143 | 99 | 232 | 163 | 405 | 270 | 705 | 493 |
| 200 000 | 20 | 17 | 14 | 18 | 15 | 20 | 16 | 26 | 21 | 40 | 29 | 63 | 43 | 116 | 79 | 204 | 137 | 309 | 208 | 481 | 316 |
| 500 000 | 20 | 34 | 23 | 34 | 24 | 37 | 28 | 50 | 38 | 80 | 54 | 136 | 83 | 268 | 178 | 482 | 324 | 734 | 500 | 1139 | 761 |
| 100 000 | ஆயுள்வரை | 49 | 44 | 58 | 52 | 69 | 61 | 81 | 69 | 103 | 86 | 122 | 107 | 164 | 128 | 208 | 168 | 269 | 229 | 360 | 308 |
| 250 000 | ஆயுள்வரை | 95 | 83 | 116 | 102 | 142 | 126 | 178 | 149 | 234 | 196 | 280 | 239 | 370 | 303 | 476 | 393 | 643 | 541 | 878 | 744 |

Non medical- Term & Permanent Products

| வயது | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காப்புறுதி தொகை | காப்புறுதி வருடங்கள் | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 150 000 | 10 | 46 | 61 | 66 | 53 | 92 | 72 | 166 | 121 | 292 | 197 | 586 | 369 |
| 100 000 | 10 | 33 | 30 | 46 | 38 | 64 | 51 | 113 | 83 | 197 | 134 | 393 | 248 |
| 50 000 | 10 | 20 | 20 | 33 | 23 | 36 | 29 | 60 | 46 | 102 | 71 | 200 | 128 |
| 150 000 | 20 | 56 | 46 | 92 | 67 | 167 | 104 | 243 | 164 | 398 | 257 | 679 | 442 |
| 100 000 | 20 | 40 | 33 | 64 | 67 | 101 | 72 | 165 | 112 | 268 | 178 | 452 | 297 |
| 50 000 | 20 | 24 | 20 | 36 | 27 | 56 | 40 | 86 | 60 | 138 | 91 | 230 | 162 |
| 20 000 | ஆயுள்வரை | 45 | 37 | 49 | 41 | 61 | 52 | 80 | 66 | 111 | 86 | 157 | 117 |
| 30 000 | ஆயுள்வரை | 64 | 53 | 71 | 59 | 89 | 75 | 117 | 96 | 164 | 126 | 232 | 178 |
| 40 000 | ஆயுள்வரை | 84 | 69 | 93 | 76 | 117 | 98 | 154 | 126 | 217 | 167 | 306 | 229 |
| 50 000 | ஆயுள்வரை | 104 | 85 | 114 | 94 | 144 | 121 | 191 | 156 | 270 | 207 | 386 | 285 |
| 75 000 | ஆயுள்வரை | 153 | 126 | 169 | 139 | 214 | 178 | 283 | 231 | 402 | 308 | 573 | 425 |
| 100 000 | ஆயுள்வரை | 202 | 166 | 223 | 183 | 283 | 236 | 376 | 306 | 534 | 409 | 763 | 566 |



Call me for your free consultation.

Life 100
INSURANCE & INVESTMENTS INC.

"Price are based on current rates and it may change time to time. condition may apply"

# கடன்தொல்லை?

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத பில்களைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்ச்னைகளுக்கான
இலவச ஆலோசனைகளுக்கு

**V. SRI**
Certified Insolvency Counsellor

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மஞ்சள் அங்கிப் போராட்டம்

Vest என்பதற்கு 'அதிகாரங் கொடு', 'உடைமை வழங்கு' போன்ற கருத்துக்களும் உண்டு. பிரான்சில் தற்சமயம் நடைபெறும் மக்கள் எழுச்சியை yellow vest போராட்டம் என குறிப்பிடுகின்றார்கள். பிரென்ச்சில் gilets jaunes <https://www.theguardian.com/world/2018/dec/03/who-are-the-gilets-jaunes-and-what-do-they-want> என அழைக்கப்படுகின்றது. மே 17,2017ல் பிரென்ச் அதிபராக இமானுவேல் மக்றோன் அதிபராக ஏற்ற பின்னர் பல மாற்றங்கள் பிரான்சில் ஏற்பட்டன. அதன் விளைவாக பிரென்ச் மக்கள் பல இன்னல்களைச் சந்தித்தார்கள். மக்கள் தங்களது எல்லைகளை மீறச் செய்யுமளவிற்கு, பிரென்ச் அரசு நடந்து வருகின்றது. கடந்த நான்கு வார இறுதி நாட்களில், பிரென்ச் மக்கள் தங்களது எதிர்ப்பை போராட்ட வடிவில் தெரிவிக்கின்றார்கள்.

மிக முக்கிய அரசு நிறுவனங்களில் அதிகமானோரை வேலைக்குச் சேர்க்கவும். (வைத்தியசாலைகள், பாடசாலைகள்) 5 மில்லியன் புதிய மக்களுக்கான வீடுகள் கட்டப்பட வேண்டும். வங்கிகளை கட்டுப்படுத்து.

2. அரசியல் — அரசியலமைப்புத் திட்டம் மீள எழுதப்பட வேண்டும். மக்களால், மக்களுக்காக (by the people and for the interests of the people ' ) ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற வேண்டும். தனியார்மயப்படுத்தலை நிறுத்து, தனியார்மயப்படுத்த அரச நிறுவனங்களை மீளப் பெறு. கல்வி, போக்குவரத்து, நீதித் துறைகளை மீளாய்வு செய். ஊடக கட்டுப்பாடுகளை நிறுத்து. ஊடகங்களை சுதந்திரமாக இயங்கச் செய்

3. சுகாதாரம்— சுற்றுச் சூழல் — சுகாதார சீர் திருத்தங்களைச் செய், அத்தியாவசிய பொருட்களுக்கு அதிகளவு விலையை மக்கள் கொடுக்க வேண்டியுள்ளது. எரிபொருட்களின் விலை உச்சத்தை அடைந்துள்ளது. டீசலின் விலை கடந்த 12 மாதங்களில் 23 வீதத்தால் அதிகரித்துள்ளது. 6.5 சதம் டீசலுக்கும், 2.9 வீதம் பெற்றோலுக்கும் வரி அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது. அசைந்து கொடுக்காத பிரென்ச் அதிபர், போராட்டவாதிகளை சந்திக்க விரும்புகின்றார். 2019 முடிவு வரை வரி அதிகரிப்பை நிறுத்தவதாக உறுதியளித்துள்ளார். இவை போராட்டத்தை நிறுத்த வேண்டும் என்ற நோக்குடன் கொடுக்கப்படும் வாக்குறிதிகள்.

ஆமெரிக்க மக்கள் தலைவர் டொனால்ட் ரம்ப், பாரிஸ் சுற்றுச் சூழல் ஒப்பந்தம் முறையற்றது, செயலற்றது. அதுவே பிரென்ச் போராட்டத்துக்கு

கடந்த பத்து வருடங்களில் பல போராட்டங்கள் பொருளாதாரத்தையும், அரசியலையும் குறிவைத்து நடாத்தப்பட்டன. கெய்ரோவில், இஸ்ரன்புல்லில் நடைபெற்ற மக்கள் போராட்டங்கள், அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. அதே சமயம் Occupy Wall Street (OWS) போராட்டம் செப்ரம்பர் 17, 2011ல் தொடங்கியது. இவ்வாறான ஒரு போரட்டத்துக்கான அறை கூவலை, கனடாவின் வன்கூவர் நகரிலிருந்து வெளியாகும், Adbusters <https://en.wikipedia.org/wiki/Adbusters> பத்திரிகையே கோரியிருந்தது. இப் போராட்டம் பல நகரங்களில் நடைபெற்றது. ரொரன்ரோ உட்பட. பின்னர் அது தானாகவே நின்று விட்டது. அல்லது நிறுத்தப்பட்டுவிட்டது. மத்திய கிழக்கில் தோன்றிய மக்கள் போராட்டம் இங்கும் வரும் என்று தெரிந்தே, இதனை திட்டமிட்டு சிலர் உருவாக்கி,அழித்ததாகவும் கருத்துக்கள் உள்ளன. ஆனால் இன்று நடைபெறும் பிரென்ச் மஞ்சள் ஆடை போராட்டம் போன்றதல்ல, வோல் ஸ்ரீட் போரட்டங்கள். மத்திய கிழக்கில் தோன்றிய போராட்டங்களும், அமெரிக்காவில் தோன்றிய போராட்டங்களும் தொடர உலக ஒழுங்கமைப்பாளர்கள் அனுமதிக்கவில்லை.

நவ தாரளவாதத்தின் விளைவாலும், வெகுஜனமயப்பத்துவதற்காக மக்கள் மத்தியில் விதைக்கப்பட்ட இனவாதம், நிறவாதம் போன்றனவற்றாலும், வெகுஜனவியலால் தோன்றிய மக்கள் நலன் கருதா ரம்ப் போன்ற தலைவர்களும் மேலும் மக்களை ஒடுக்குவார்கள். விளைவு மக்கள் போராட்டமாகவேயிருக்கும். இன்று பிரான்சில் நடைபெறும் போராட்டங்கள், பல ஐரோப்பிய நாடுகளில் ஆரம்பமாகிவிட்டது. பல




- 17 நவம்பர்: 282இ000 எதிர்ப்பாளர்கள் — ஒருவர் இறப்பு 409 பேர் காயம் — 73 பேர் கைது
- 24 நவம்பர்: 166இ000 எதிர்ப்பாளர்கள் — 84 பேர் காயம் — 307 பேர் கைது
- 1 டிசம்பர் 136இ000 எதிர்ப்பாளர்கள் — 263 பேர் காயம் — 630 பேர் கைது
- 8 டிசம்பர் 136இ000 எதிர்ப்பாளர்கள் — 118 பேர் காயம் — 1220 பேர் கைது

பிரென்ச் மக்கள் நான்கு முக்கிய விடயங்களை முன்வைத்து போராடுகின்றார்கள்.

1. பொருளாதாரம்—வேலை வாய்ப்பு — வரி வீதம் மற்றும் வரி விதிப்பு முறைகள் மீளாய்வுக்குட்படுத்த வேண்டும். ஒருவரின் வருமானத்துக்கு 25 வீதத்துக்கு அதிகமாக வசூலிக்கப்படக் கூடாது. ஆகக் குறைந்த வேதனத்தை 40 வீதமாக அதிகரிக்க வேண்டும். ஓய்வூதியம் அதிகரிக்கப்படவேண்டும். பிளாஸ்ரிக் போத்தல்களை நிறுத்து, மருந்து நிறுவனங்களின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்து

4. ஊலகரசியல் — நேட்டோவிலிருந்து வெளியேறு, உலக நாடுகளுடன் சண்டையிடுவதை நிறுத்து, குடிவரவிற்கு பாதுகாப்புக் கொடு, பிரென்ச் ஆதிக்கத்திலுள்ள ஆபிரிக்க நாடுகளிலிருந்து வெளியேறு, சர்வதேச சட்டங்களுக்கு மரியாதை கொடு

பிரென்ச் மக்கள் போராட்டம், வழமையான இடது சாரி போராட்டமல்ல. இப் போராட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுடன், மத்திய வர்க்க மக்களும் இணைந்துள்ளனர். பெருமளவு மத்திய வர்க்கத்தினரே இப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். மத்திய வர்க்கத்தினரே அதிகமாக வேலை இழந்தோர். இந்தப் போராட்டத்தால் உணவகங்கள், மற்றும் சில்லறை வியாபார நிலையங்கள் போன்றவற்றின் வருமானம் குறைந்துள்ளது. காரணம் எனத் தெரிவிக்கின்றார். அவரது கூற்றின் முழு வடிவம் இது

Donald J. Trump தனது ட்விட்டில்...

The Paris Agreement isn't working out so well for Paris. Protests and riots all over France. People do not want to pay large sums of money, much to third world countries (that are questionably run), in order to maybe protect the environment. Chanting "We Want Trump!" Love France.

கடந்த காலங்களில் பல போரட்டங்கள் நடைபெற்றுள்ளன. குறிப்பாக பிரான்சில் சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்பு 1229ம் ஆண்டு பல்கலைக் கழக போராட்டங்கள் நடைபெற்றன. பல மாணவர்கள் இறந்துள்ளனர். 1789ல் பிரென்ச் புரட்சி நடைபெற்றது. நவீன காலங்களில் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு 1968ல் மாணவர் மக்கள் போரட்டங்கள் நடைபெற்றன. சுமார் 10மில்லியன் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர். சுமார் எட்டு லட்சம் மக்கள் பாரிசை நோக்கி பேரணியில் சென்றனர்.

நாடுகளுக்கு இது தொடரலாம். மக்கள் தற்காலிக வெற்றியைப் பெறலாம். பாரிஸ் நகரில் பல சுலோகங்கள், பணக்காரர்களுக்கு எதிராக எழுதப்பட்டுள்ளது. பிரென்ச் அதிபர் இராஜினாமாச் செய்ய வேண்டும் என எழுதப்பட்டள்ளது. பொதுவாகவே தற்காலிக மாற்றங்கள் என்பன, போராட்டத்தின் தொடர்ச்சியை நிறுத்துவதற்காக ஏற்படுத்தப்படுபவை. அமைப்பு மாறாத பட்சத்தில் தற்காலிக மாற்றங்கள் போலியானவை. இன்றைய நிலையில் உலகில் மக்கள் நலன் கருதாத ஆட்சியாளர்களே உள்ளனர். அவர்கள் தங்களை மாற்றிக் கொள்ளமாட்டார்கள். அமைப்பு மாற்றமென்பது நீண்ட மக்கள் போராட்டத்தின் பின்னரே சாத்தியம். நம்பிக்கையுடன் காத்திருப்போம். பிரென்ச் மக்கள் போராட்டம் வெற்றி பெற வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

**விதயன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் முன் இரண்டு தேர்வுகளே உள்ளன!

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரனது மாவீரர் நாள் செய்தி

உரிமைகளுக்காக விட்டுக் கொடுப்பின்றிப் போராடி, எமக்கான சுதந்திர தாயகத்தை அமைத்தல், அல்லது சிங்கள இனவாதத்துக்குப் பயந்தோ அல்லது பணிந்தோ எமது அடிப்படைகளை இழப்பது.

இலங்கைத்தீவின் இன்றைய அரசியல் யதார்த்தத்தில் தமிழீழ மக்களுக்கு முன்னால் இரண்டு தெரிவுகள்தான் உள்ளன என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விஉருத்திரகுமாரன் தனது மாவீரர் நாள் செய்தியில் தெரிவித்துள்ளார்.

1) உரிமைகளுக்காக விட்டுக் கொடுப்பின்றிப் போராடி, எமக்கான சுதந்திர தாயகத்தை அமைத்து வாழ்தல் ஒரு தெரிவு. இத்தெரிவில் வெற்றியடைவதற்கான நடைமுறைச் சாத்தியம் குறைவு என்று ஐயம் கொள்வோர் பலருண்டு.

2) மற்றைய தெரிவு சிங்கள இனவாதத்துக்குப் பயந்தோ அல்லது பணிந்தோ எமது அடிப்படைகள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக இழந்து, இறுதியில் சிங்களப் பெருந் தேசியத்துக்குள் காலப்போக்கில் கரைந்து போவது.

முதலாவது தெரிவில் நாம் வெல்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. ஒடுக்குமுறையை எதிர்த்துநிற்கும் எதிர்ப்பு உணர்வினை தணியாமல் காத்து எமது போராட்டத்தைச் செவ்வனே பேணிக் கொள்ளும்வரை நாம் தோல்வியடைந்தவர்களாகப் போய்விட மாட்டோம். சரியானதொரு சந்தர்ப்பத்தில் வெற்றிக்கான வாய்ப்பும் போராட்டத்தைத் தளராது தொடரும்போது மட்டுமே கிடைக்கும்.

இரண்டாவது தெரிவு தமிழ் மக்களுக்கு மிகவும் அவமானகரமான தோல்வியையே தேடித் தரும். எம்மால் எதுவும் முடியாது என்று சரணாகதியடையும் நிலைக்கு இட்டுச் செல்லும். சிங்கள மேலாதிக்கத்தை இயல்பாக ஏற்றுக் கொண்டு அடிபணிந்து வாழும் இழிநிலைக்கு எம்மை இட்டுச் செல்லும். இந் நிலை ஏற்படின் தமிழ் மக்கள் இலங்கைத்தீவில் நிரந்தரமாகத் தோல்வியடைந்த மக்களாக மாறிவிடுவார்கள்.' என குறித்துரைத்த பிரதமர் வி.உருத்திரகுமாரன் இந்த இழிநிலை தமிழ் மக்களுக்கு ஏற்படாது காக்கும் காவல் தெய்வங்களாக எமது மாவீரர்கள் இருப்பார்கள் என்பது எமக்கு நம்பிக்கை தரும் விடயமாக இருக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்களது மாவீரர் நாள் செய்தியானது, இந்தோ—பசுபிக் பூகோள அரசியல் சதுரங்கத்தில் இலங்கைத்தீவை மையப்படுத்திய வல்லரசுகளின் நகர்வுகள், அதனால் ஏற்பட்டுள்ள தென்னிலங்கை அரசியல் நிலைவரங்கள், தமிழர் தரப்பு எடுக்க வேண்டிய நிலைப்பாடுகள் என சமகாலவிடயத்தினை முன்னிறுத்தி மாவீரர்களை நினைவேந்தி அமைந்துள்ளது.



'சிறிலங்கா அரசையும், சிங்கள பெரும்பான்மைக் கட்சிகளையும், அனைத்துலகச் சமூகத்தையும் ஈழத் தமிழ் மக்களின் நலன்களின் அடிப்படையில் கையாளக்கூடிய தலைமைத்துவத்தைத் தாயகத்தில் ஏற்படுத்துவது அவசியம் என்பதனைத் தற்போதய நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

இது குறித்து தாயக மக்கள் சிந்தித்துக் கவனம் செலுத்த வேண்டும் என்றே நாம் கருதுகின்றோம்.

தந்போதய நெருக்கடி நிலை சிறிலங்காவின் அரச கட்டமைப்புக்குள் தமிழ் மக்களின் தேசியப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்பதனை மீண்டும் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறது.

இந்த உண்மையினை தாயகத் தமிழர் தலைமை அனைத்துலக சமூகத்துக்குத் தெளிவாக அறிவிக்க வேண்டும். 'எடுப்பார் கைப்பிள்ளை' அரசியலுக்குத் தமிழர் தரப்பு முழுக்குப் போட வேண்டும்.' எனவும் மாவீரர் நாள் செய்தியில் பிரதமர் விஉருத்திரகுமாரன் இடித்துரைத்துள்ளார்.

முழுமையான மாவீரர் நாள் செய்தி:

மாவீரரது கனவுகளை நனவாக்க உழைப்பதாயின் இன்று தோன்றியுள்ள சூழலில் விட்டுக் கொடுப்பின்றிப் போராடி சுதந்திர தாயகத்தை அமைத்து வாழ்தல் மட்டுமே எமக்கான ஒரேயொரு தெரிவு!

இன்று தேசிய மாவீரர் நாள்!

எம் தேசப்புதல்வர்களின் திருநாள்!

தமிழீழத் தாயகத்தின் மூச்சுக்காற்றெங்கும் நிறைந்திருக்கும் எம் விடுதலை நாயகர்களின் பெருநாள்.

தமிழீழ மக்களின் விடுதலைக்காய் வீரச்செருக்கோடு களமாடி மண்ணில் விதையாய் வீழ்ந்த எம் வீர மறவர்களை எம் மக்கள் தமது இதயக்கோவிலில் இருத்திப் பூசிக்கும் நன்னாள்.

தமிழீழ தேசத்தின் தேசிய எழுச்சியையும், சுதந்திர வேட்கையினையும் உலகறியச் செய்து தமிழர் தேசத்தின் மனச்சாட்சியாய் ஆழ வேரோடியிருக்கும் புனித நாயகர்களின் நினைவு நாள்.

மாவீரர்களது ஈகத்தால் எம் மண் சிவந்திருக்கிறது. அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்த்து நிற்க ஈழத்தாய்தன் வயிற்றிலிருந்து கிளர்த்தெழுந்து எம் மண்ணுக்காய் உயிர் ஈந்தவர்களின் அக்கினிமூச்சினால் எமது தாயகம் தகித்துக் கொண்டிருக்கிறது.

இறைமையும் சுதந்திரமும் கொண்ட தமிழீழத் தனியரசு ஒன்றே தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வாக இருக்க முடியும் என்பதில் பற்றுறுதி கொண்டு எமது மாவீரர்கள் களமாடினர்.

தமிழீழ மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக, சிங்களத்தின் இன அழிப்புக்கு உள்ளாகாது வாழ்வதற்கான வாய்ப்பினைத் தமிழீழத் தனியரசினை அமைப்பதன் மூலமே அடையலாம் என்ற தொலைநோக்குடன் மாவீரர்கள் களமாடினர்.

சாதிகள் அகற்றப்பட்ட, ஆண்—பெண் சமத்துவம் நிறுவப்பட்ட, சமூக ஏற்றத்தாழ்வுகள் விலக்கப்பட்ட, இயற்கைச்சூழற் பாதுகாப்பில் அக்கறை கொண்ட, சமூக நீதி நிலவுகின்ற சமூகமொன்றைப்படைக்கும் உன்னத இலட்சியத்துடன் மாவீரர்கள் களமாடினர்.

தமிழீழ மக்களின் இறைமையைப் பாதுகாக்கப் போரிட்ட எம் மாவீரர்களின் உன்னதமான போராட்டம் எமது தேசத்துக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கிறது.

மாவீரர்கள் விட்டுச் சென்ற வழித் தடங்கள் நாம் சென்றடைய வேண்டிய இலக்கை எமக்கு வெளிப்படுத்தி நிற்கின்றன.

மாவீரர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு வணக்கம் செய்யும் இன்றைய நாளில் அவர்களுக்குத் தலைவணங்கி அவர்களின் கனவுகளை எம்முள்ளே உள்வாங்கி உறுதி எடுத்துக் கொள்வோம்.

அன்பான மக்களே!

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இனஅழிப்பின் ஊடாக தமிழீழத் தேசத்தை ஆக்கிரமித்துக் கொண்ட பின்னர் மாவீரர் நினைவை எம் மக்கள் மத்தியிலிருந்து அழித்து விடுவதற்குச் சிங்களம் பகீரத முயற்சி எடுத்து வந்தமையினை நாம் அறிவோம். சிங்களம் மட்டுமல்ல அனைத்துலகசமூகத்தின் ஒரு பகுதியினரும் இம் முயற்சியில் இறங்கியிருந்தனர்.

மாவீரர் நினைவை, மாவீரரது வகிபாகத்தை அழித்தல் என்பதற்கான திட்டம் மூன்று பரிமாணங்களைக் கொண்ட வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. மாவீரர்களின் நினைவாக அமைக்கப்பட்டிருந்த மாவீரர் துயிலும் இல்லங்கள், மாவீரர் நினைவுத்தூபிகள் போன்ற மாவீரர்களின் பௌதிக நினைவுத் தடங்களை அழித்து. காலப்போக்கில் மாவீரர்களை மக்களது நினைவிலிருந்து அகற்றுதல் என்பது இத்திட்டத்தின் ஒரு பரிமாணம்.

மாவீரர்களது இலட்சியக் கனவான இறைமையும் சுதந்திரமும் கொண்ட தமிழீழத்தனியரசை அமைத்தல் என்ற சுதந்திரக் கனவைத் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து அழித்தல் என்பது இத் திட்டத்தின் இரண்டாவது பரிமாணம்.

மாவீரர்களுக்கான சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்ற அங்கீகாரத்தை மறுத்து, அவர்களைப் பயங்கரவாதிகளாக வர்ணித்து, தமிழர் தம் அடுத்தடுத்த தலைமுறையினர் மத்தியில் மாவீரர் நினைவை அகற்றுதல் மூன்றாவது பரிமாணம்.

மாவீரர் துயிலும் இல்லங்களை, மாவீரர் நினைவுச் சின்னங்களை அழிப்பது மூலம் மாவீரர் நினைவுகளைத் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து அழித்து விடும் முயற்சியினைத் தமிழீழ மக்கள் தோற்கடித்திருக்கிறார்கள்.

தாயகத்திலும் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் மாவீரர் நாளை மக்கள் எழுச்சியுடன் கொண்டாடி வருகிறார்கள்.

அடுத்த இரண்டு பரிமாணங்களையும் எதிர்கொள்ளவென நாம் அரசியற்தளத்தில் போராடியாக வேண்டும்.

தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வாக சுதந்திரத் தமிழீழத் தனியரசே அமைய முடியும் என்பதனை நாம் உறுதியாக நிலைநிறுத்தியாக வேண்டும்.

மாவீரர்களுக்கு நாம் செய்யும் கொள்கை நிலைப்பட்ட,செயல்பூர்வமான வணக்கமாக இது அமையும்.

இலங்கைத்தீவின் இனமுரண்பாடு சிறிலங்கா அரசகட்டமைப்புக்குள் தீர்க்கப்படமுடியாத அளவுக்குத் தர்க்கரீதியான வளர்ச்சிக்கட்டத்தை அடைந்து விட்டது.

இதனால் சிறிலங்கா அரச கட்டமைப்புக்குள் தமிழரது தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண எடுக்கப்படும் முயற்சிகள் எவையும் வெற்றியளிக்கப் போவதில்லை. இதையேதான் 1987 ஆம் ஆண்டு தேசியத் தலவர் அவர்கள் தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண எடுக்கப்படும் எந்த ஒரு முயற்சியையும் சிங்கள இனவாதப்பூதம் விழுங்கி விடும் எனச் சுட்டிக்காட்டியிருந்தார்.

மேலும், சிங்களம் தமிழ் மக்களின் தனித்துவத்தையும், அடையாளத்தையும்;, தாயகத்தையும் நிராகரித்து அவர்களைச் 'சிறிலங்கர்' என்ற ஒற்றை அடையாளத்துக்குள் அடைக்கும் முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறது.

தமிழ் மக்களாகிய நாமோ நாம் ஒரு தனித்துவமான தேசத்தவர் என்ற அங்கீகாரத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கிறோம்.

சிறிலங்காவின் ஜனநாயகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைப்பு சிங்கள இனநாயகமாக மாறி இறுக்கமடைந்த பின்னர் தமிழின அழிப்பு நடிவடிக்கையினூடாகத் தமது இலக்கினை அடைந்து கொள்ள சிங்களம் முயல்கிறது. சிறிலங்காவின் அரச கட்டமைப்பைத் துணையாகக் கொண்டு இம் முயற்சியினைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதனை நாம் முறியடிப்பதற்காகவே இறைமையும் சுதந்திரமும் கொண்ட தமிழீழத் தனியரசு ஒன்றை அமைப்பதற்கான எமது போராட்டத்தைத் தீவிரமாகத் தொடர்ந்தாக வேண்டும்.

தாயகத்தின் தற்போதய சூழலில் மக்கள் தமது அரசியற் பெருவிருப்பினை சுதந்திரமாக வெளிப்படுத்த முடியாதவாறு தடைகள் சில உள்ளன. இருந்த போதும் தமிழர் தேசம், பாரம்பரிய தாயகம் போன்றவற்றுக்கான அங்கீகாரத்தை வலியுறுத்தியும் தமிழின அழிப்புக்கு எதிராகவும் அரசியல் ரீதியாகப் போராட முடியும். இ;ப் போராட்டம் மாவீரரது கனவுகளால் கட்டியமைப்பட்ட அடிப்படைகளைப் பாதுகாத்துப் பலப்படுத்தும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினைப் பயங்கரவாத அமைப்பாக முத்திரை குத்தி வைத்திருக்கும் நோக்கின் பின்னால்; மாவீரர்களுக்கான 'சுதந்திரப் போராட்ட வீரர்கள்' என்ற அங்கீகாரத்தினை நிராகரிக்கும் எண்ணமும் இணைந்திருக்கிறது. விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியற்பரிமாணத்தை நசுக்கி விடும் எண்ணமும் இத் தடையோடு இணைந்திருக்கிறது.

இதனை எதிர் கொள்ளவென விடுதலைப்புலிகள் அமைப்பின்மேல் விதிக்கப்பட்டுள்ள தடையினை அகற்றுவதற்கான அரசியற் செயற்பாடுகளை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஆரம்பித்திருக்கிறது.

இதற்கான முதற்கட்டச் செயற்பாட்டினை நாம் பிரித்தானியாவில் ஆரம்பித்துள்ளோம். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கு விதிக்கப்பட்டுள்ள தடையினை அகற்றுமாறு நாம் பிரித்தானியாவின் உள்துறை அமைச்சின் முன் மனுவொன்றினை இன்று தாக்கல் செய்துள்ளோம். இது தொடர்பான அரசியற் செயற்பாட்டையும், சட்டரீதியான செயற்பாட்டையும் நாம் தொடர்ந்து மேற்கொள்ளவுள்ளோம். இது போன்று விடுதலைப்புலிகள் அமைப்பு மீதான தடை அகற்றும் முயற்சிகள் ஏனைய நாடுகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

மாவீறிரர்களுக்கு நாம் செய்யும் செயல்பூர்வமான வணக்கமாக எமது இச் செயற்பாடு அமையும் என்பது எமது நம்பிக்கை.

அன்பானவர்களே!

உலகெங்கும் மக்கள் குழுமங்கள் எல்லாம் அரசுகள் என்ற முறைமைக்குள் வாழ்ந்து கொண்டிருப்;பதனை நாம் அறிவோம். மக்கள் வாழும் நாடுகள் எல்லாம் அரசுகளால் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. அரசுகள் தமக்கிடையே ஒரு கழகம் போல இயங்கிக் கொள்கின்றன.

அரசுகள் தமக்கிடையே உடன்பாடுகளையும் முரண்பாடுகளையும் கொண்டவையாக இயங்குகின்றன. இவ் உடன்பாடுகளையும் முரண்பாடுகளையும் தீர்மானிக்கும் தலைமைக் காரணியாக அந்தந்த அரசுகளின் நலன்களே அமைகின்றன.

அரசுகளின் நலன் என்ற அச்சில் சுழலும் இன்றைய உலக ஒழுங்கின்கீழ்தான் நாமும் மாவீரர் கனவுகளை நனவாக்கும் எமது செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டிய நிலையுள்ளது.

தமது நலன்களை அடைந்து கொள்ள முயலும் வல்லரசுகளின் பந்தாட்டக்களமாக இலங்கைத்தீவு தற்போது மாறியிருக்கிறது. இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகள் இலங்கைத் தீவினைத் தத்தமது நலன்களின் அடிப்படையில் தமது கட்டுப்பாட்டினுள் வைத்துக் கொள்ள முயல்கின்றன.

இதில் இலங்கைத்தீவில் சீனாவின் விரிவாதிக்கத்தைத் தடுப்பதற்கென இந்தியா, அமெரிக்கா இரண்டுக்குமிடையில்; அவர்களது நலன் சார்ந்த ஓர் உடன்பாடு உள்ளது.

2015 ஆம் ஆண்டில் சிறிலங்காவில் ஏற்படுத்தப்பட்ட ஆட்சிமாற்றம் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளினால் கச்சிதமாக வடிவமைக்கப் பட்ட திட்டத்தின் பாற்பட்டுத்தான் நடந்தேறியது. இலங்கைத்தீவில் சீனாவின் விரிவாதிக்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை எனவும் அதனை விபரிக்கலாம்.

இவ் ஆட்சிமாற்றத்துக்கு பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவு கிடைத்திருக்கவில்லை. இந் நிலை ஏற்படுத்திய தொடர்ச்சியான அழுத்தங்களின் விளைவாக சிறிலங்காவின் அரசகட்டமைப்புக்குள் தற்போது குழப்பமும் நெருக்கடியும் ஏற்பட்டுள்ளன.

இந்த நெருக்கடியினை ஒரு பொதுத் தேர்தல் ஊடாக முடிவுக்கு கொண்டுவரும் முயற்சிகள் நடைபெறுவதனையும் எம்மால் உணர முடிகிறது.

இந்தநெருக்கடி எமக்குஎவ்வகையிலும் ஆச்சரியத்துக்குரியதாக இருக்கவில்லை. உள்நாட்டு நிலைமைகளை முற்றாகப் புறந்தள்ளி வெளிநாட்டுச் சக்திகள் தமது நகர்வுகளைச் செய்தல் எவ்வகையிலும் இலகுவானதல்ல என்பதனையும் தற்போதய நெருக்கடிநிலை சுட்டிக் காட்டுகிறது.

இந்த நெருக்கடியிலிருந்து சிறிலங்கா தன்னை மீட்பித்துக் கொள்ளும். தமக்குள் முரண்பட்டுக் கொண்டாலும் தமிழர்களின் உரிமைகள் விடயத்தில் இரண்டு சிங்களக் கட்சிகளும் இனவாதம் என்ற ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாகவே உள்ளன. இது பல்வேறு காலகட்டங்களில் தெட்டத் தெளிவாக வெளிப்பட்டிருக்கின்றதும்

"சிறிலங்கா அரசையும், அனைத்துலகச் சமூகத்தையும், ஈழத் தமிழ் மக்களின் நலன்களின் அடிப்படையில் கையாளக்கூடிய தலைமைத்துவத்தைத் தாயகத்தில் ஏற்படுத்துவது அவசியம் என்பதனைத் தற்போதய நிகழ்வுகள் உணர்த்துகின்றன."

_ பிரதமர் வி.உருத்திரகுமாரன்



நாம் பட்டறிந்த பாடம்தான்.

உண்மை அவ்வாறிருக்க 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சிமாற்ற முயற்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமை நிபந்தனையற்ற ஆதரவினை வழங்கியிருந்தது. இனவாதம் வெளிக்கிளம்பி விடும் என்ற காரணம் கூறி தமிழர்களின் உரிமைகள் சார்ந்த விடயத்திலும் அடிப்படைகளை கைவிட்டுச் செல்லும் வகையில்தான் மக்களால் தேர்வு செய்யப்பட்ட தமிழர் தலைமை செயற்பட்டிருக்கிறது. இவர்களது செயற்பாடுகள் மக்களுக்கு நம்பிக்கை தருவதாக அமைந்திருக்கவில்லை.

சிறிலங்கா அரசையும், சிங்கள பெரும்பான்மைக் கட்சிகளையும், அனைத்துலகச் சமூகத்தையும் ஈழத் தமிழ் மக்களின் நலன்களின் அடிப்படையில் கையாளக்கூடிய தலைமைத்துவத்தைத் தாயகத்தில் ஏற்படுத்துவது அவசியம் என்பதனைத் தற்போதய நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

இது குறித்து தாயக மக்கள் சிந்தித்துக் கவனம் செலுத்த வேண்டும் என்றே நாம் கருதுகின்றோம்.

தந்போதய நெருக்கடி நிலை சிறிலங்காவின் அரச கட்டமைப்புக்குள் தமிழ் மக்களின் தேசியப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்பதனை மீண்டும் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறது.

இந்த உண்மையினை தாயகத் தமிழர் தலைமை அனைத்துலக சமூகத்துக்குத் தெளிவாக அறிவிக்க வேண்டும். 'எடுப்பார் கைப்பிள்ளை' அரசியலுக்குத் தமிழர் தரப்பு முழுக்குப் போட வேண்டும்.

சிறிலங்காவில் ஏற்பட்ட நெருக்கடி நிலை தோற்றுவித்துள்ள சூழலைத் தமிழ் மக்கள் உள்நாட்டிலும் அனைத்துலக அரங்கிலும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தக்கூடிய நிலைமைகள் உள்ளன.

சிங்களத் தேசியவாதத்திடம் தமிழர் எதிர்ப்பு மட்டுமல்ல, இந்திய எதிர்ப்பு, மேற்குலக எதிர்ப்பு போன்றவையும் ஆழமாக வேரோடியுள்ளன. இக் குழப்பநிலை சிங்களத் தேசியவாதிகளிடம் மேற்குலக எதிர்ப்பையும் இந்திய எதிர்ப்பையும் வலுப்படுத்தும் நிலைமைகள் உள்ளன. இதேவேளை, சிங்களத் தேசியவாதிகள் சீனாவுடன் நெருக்கமான தொடர்பைப் பேண விரும்புவார்கள்.

இந் நிலை தமிழர் தரப்புக்குத் தரக்கூடிய வாய்ப்புகளை நாம் நழுவவிடாது பயன்படுத்த வேண்டும்.

தாயகத்தில் ஒரு வலுவான தலைமையினை தமிழ் மக்கள் அமைத்துக் கொள்வது, சிங்களத்தின் இனஅழிப்புக்கு அனைத்துலக நீதிகோரும் பொறிமுறையினை வலுப்படுத்துவது, தமிழ் நாட்டிலும் இந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் இலங்கைத்தீவு தொடர்பாக இந்தியக் கொள்கையில் ஏற்பட வேண்டிய மாற்றம் குறித்த கருத்துருவாக்கத்தை மேற்கொள்வது, அனைத்துலக சிவில் சமூக அமைப்புகளுடன் நெருக்கமாகத் தொடர்புகளை ஏற்படுத்திச் செயற்படு;வது போன்றவை குறிப்பிடக்கூடிய சில அவசிய செயற்பாடுகளாகும்.

அன்பான மக்களே!

அரசியல் யதார்த்தத்தை நன்கு ஆராய்ந்து பார்ப்பின் தமிழீழ மக்களுக்கு முன்னால் இரண்டு தெரிவுகள்தான் உள்ளன என்பது தெளிவாகும்.

உரிமைகளுக்காக விட்டுக் கொடுப்பின்றிப் போராடி, எமக்கான சுதந்திர தாயகத்தை அமைத்து வாழ்தல் ஒரு தெரிவு. இத் தெரிவில் வெற்றியடைவதற்கான நடைமுறைச் சாத்தியம் குறைவு என்று ஐயம் கொள்வோர் பலருண்டு.

மற்றைய தெரிவு சிங்கள இனவாதத்துக்குப் பயந்தோ அல்லது பணிந்தோ எமது அடிப்படைகள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக இழந்து, இறுதியில் சிங்களப் பெருந் தேசியத்துக்குள் காலப்போக்கில் கரைந்து போவது.

முதலாவது தெரிவில் நாம் வெல்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. ஒடுக்குமுறையை எதிர்த்துநிற்கும் எதிர்ப்பு உணர்வினை தணியாமல் காத்து எமது போராட்டத்தைச் செவ்வனே பேணிக் கொள்ளும்வரை நாம் தோல்வியடைந்தவர்களாகப் போய்விட மாட்டோம். சரியானதொரு சந்தர்ப்பத்தில் வெற்றிக்கான வாய்ப்பும் போராட்டத்தைத் தளராது தொடரும்போது மட்டுமே கிடைக்கும்.

இரண்டாவது தெரிவு தமிழ் மக்களுக்கு மிகவும் அவமானகரமான தோல்வியையே தேடித் தரும். எம்மால் எதுவும் முடியாது என்று சரணாகதியடையும் நிலைக்கு இட்டுச் செல்லும். சிங்கள மேலாதிக்கத்தை இயல்பாக ஏற்றுக் கொண்டு அடிபணிந்து வாழும் இழிநிலைக்கு எம்மை இட்டுச் செல்லும். இந் நிலை ஏற்படின் தமிழ் மக்கள் இலங்கைத்தீவில் நிரந்தரமாகத் தோல்வியடைந்த மக்களாக மாறிவிடுவார்கள்.

இந்த இழிநிலை தமிழ் மக்களுக்கு ஏற்படாது காக்கும் காவல் தெய்வங்களாக எமது மாவீரர்கள் இருப்பார்கள் என்பது எமக்கு நம்பிக்கை தரும் விடயமாக இருக்கிறது.

தமிழ் மக்கள் ஒவ்வாருவரினதும் மனச்சாட்சியைத் தட்டியெழுப்பியவாறு மாவீரர்கள் எம்மை வழிநடாத்துவார்கள். தமிழ் மக்களின் போராட்டம் வழிதவறிப் போகாதவாறு எமக்கான காப்பரணாக மாவீரர்கள் இருப்பார்கள்.

மாவீரர்களுக்கு நாம் செய்யும் வணக்கம் இவர்களது கனவுகளை நனவாக்க உழைப்பதாகத்தான் இருக்க முடியும் என்ற உணர்வுடனும் உறுதியுடனும் செயற்படுவோமாக!

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.


இவ்வாறு தனது மாவீரர் நாள் செய்தியில் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு தொடர்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின்

# நிலைப்பாடு என்ன?





தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் விமர்சிக்கப்பட்டுவரும் நிலையில், திரு. விக்னேஸ்வரன் அவர்கள் "தமிழ் மக்கள் கூட்டணி" என்கிற புதிய கட்சி ஒன்றை தொடங்கியுள்ளார். அவருடன் அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து பயணிக்கவேண்டும் என்கிற கோரிக்கை பலராலும் முன் வைக்கப்படுகிறது. இந்நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள், தங்கள் கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் ஊடகம் ஒன்றிடம் அண்மையில் தெளிவுபடுத்தியிருந்தார். அவரின் நேர்காணல் சுருக்கமாக இங்கு தரப்படுகிறது.

**உங்கள் கட்சி இதுவரை மக்களுக்கு செய்த உதவிகள் என்ன?**

புலம் பெயர் தமிழ் மக்களின் பங்களிப்போடு பாதிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் கிட்டத் தட்ட 1000 பேருக்கு உதவி, சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் பண உதவி

**உங்கள் அரசியல் செயற்பாடுகள் அனைத்து பகுதிகளுக்கும் பரவலாக்கப் பட்டுள்ளதா ?**

ஆம், அடுத்த தேர்தலில் அதனை உணரலாம்.

**புதிய கட்சிகளின் உருவாக்கம் ஏன் ?**

முன்னணி புதிய கட்சி கிடையாது. ஆனால் கூட்டமைப்பின் கொள்கைகளுடன் முரண்படும் தரப்புக்கள் ஒன்றாக செயற்படலாம். புதிய கட்சிகள் தேவையில்லை.

**திரு. விக்னேஸ்வரன் அவர்கள் அனைவருடனும் சேர்ந்து பயணிக்க விரும்பும் போது, உங்கள் பதில் என்ன?**

ஒரு நாட்டில் இரு தேசங்கள் என்று விக்னேஸ்வரன் ஐயா பேசிய காலத்திலிருந்து அவரின் தலைமையை ஏற்று, அவரோடு சேர்ந்து பயணிக்கவே விரும்பினோம். இன்று, தமிழர் தேசிய அரசியலுக்கு ஒரு திருப்பு முனையைக் கொடுக்கக்கூடிய அளவுக்கு சாதகமாக நிலைமை உருவாகியுள்ளது. விக்னேஸ்வரன் ஐயா, எங்களுடன் இணைந்து கொள்ள அழுத்தங்களை மக்கள் கொடுக்க, தயவுடன் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு முழு ஒத்துழைப்பையும் நான் கொடுக்கிறேன்.

அவர்மீது நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டபோது, மக்கள் எதிர்ப்பை திரட்டி அதனை முறையடித்தோம்.

இதற்கு முன்பு, முன்னைய உள்ளூராட்சி தேர்தலில் ஆனந்த சங்கரியின் உதயசூரியனின் கீழ் போட்டிபோட முடியாது என்று தமிழ் மக்கள் பேரவையின் பெரும்பாலான உறுப்பினர்கள் தீர்மானித்திருந்த அடிப்படையில் - முன்னணியும், EPRLFஉம் இணைந்து - பொதுச்சின்னம் (மகர யாழ்), பொதுப்பெயரின் கீழ், EPRLFக்கு சமபங்கும், தலைமைத்துவமும் வழங்கப்பட்டு, முக்கிய பிரமுகர்களின் அத்தாட்சியுடன் எழுத்துவடிவில் MOU ஒன்று தயாரிக்கப்பட்டு பேசப்பட்டது.

2001 இல் கூட்டமைப்போடு 4 கட்சிகள் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்து கொண்டன. இதனை மீறி - தமிழ் தேசம், அதன் இறைமையை அங்கீகரிக்காத 13ம் திருத்த சட்டத்தை தீர்வாக ஏற்றுக்கொள்ள, எம்மைத் தவிர மற்றைய 3 கட்சிகளும் முடிவெடுத்தன. நாம் எதிர்ப்பு தெரிவித்தபோது, சம்பந்தர் எதுவும் செய்யமுடியாது, விலகும்படி கூறினார்.

அடிப்படைக் கொள்கைகளில் மாற்றம் செய்யும் போது, அனைத்து தரப்பினரும் இணங்கவேண்டும் என்று அப்போது குறிப்பிடப் படவில்லை. அதனால், எதுவும் செய்யமுடியாது விலகினோம். அதே பிழையை மீண்டும் செய்யாமல் இந்தமுறை அதனை குறிப்பிட்டு தயாரிக்கப்பட்ட விளிஹியை எடுத்துக்கொண்டு, புதுடெல்லி சென்று திரும்பி வந்த பின்பு, சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் - உங்களுடன் கூட்டுக்கு வரமுடியாது. வருவதாயின், உதய சூரியனுக்கு கீழ் தான் வரமுடியும் என்று கூறியிருந்தார்.

கடந்தகால அனுபவங்களின்படி, எமது இலக்கை அடைய பிழையான தரப்பை சேர்க்கமுடியாது. முக்கியமான கட்டங்களில் முடிவுகள் எடுக்கும் சந்தர்ப்பங்களில் குழப்பங்களை ஏற்படுத்தி இலக்கை அடையமுடியாத நிலைதான் உருவாகும். ஆகவே, விக்னேஸ்வரன் ஐயா எம்மோடு சேர்ந்து பயணிக்க வேண்டும்.

**இதில் தமிழ் மக்கள் பேரவையின் முடிவு அப்போது என்னவாக இருந்தது?**

தேர்தல் அரசியலில் ஈடுபடாமல் மக்கள் இயக்கமாகவே செயற்பட வேண்டும் என்கிற விக்னேஸ்வரன் ஐயாவின் முடிவினடிப்படையில், அவர்கள் இதில் தலையிடவில்லை.

**மக்கள் நலனுக்காக கூட்டமைப்பை விமர்சிக்கும் அனைவரும் ஏன் ஒன்றிணைத்து செயற்படக்கூடாது ?**

விக்னேஸ்வரன் ஐயா கூட்டமைப்பை விமர்சித்தார். அவரின் விமர்சனம் சரியாக இருந்த காரணத்தால் அவரோடு சேர்ந்து பயணிக்கவே விரும்பினோம். நாங்கள் ஐங்கரநேசனையோ. அனந்தி சசிதரன். அருந்தவபாலன் போன்றவர்களையோ இணைப்பதில் எந்த மறுப்பும் சொன்னதில்லை. ணிறிஸிலிதி, கூட்டமைப்பை விமர்சித்த போதும், கொள்கைக்கு அமைவாக அவர்களும் செயற்படவில்லை.

நாம் EPRLF அமைப்பை சேர்க்கக்கூடாது என்று கூறுவதற்கான காரணம்:

கூட்டமைப்பு கொள்கை ரீதியாக மாறாக செயற்படுகிறது. அரசைக் கண்மூடிக்கொண்டு ஆதரிக்கிறது. உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க ணிறிஞிறி, ஷிலிதிறி, ஹிழிறி போன்ற கட்சிகளுடன் கூட்டுசேர்ந்துள்ளது. (இதனை அந்த நேரத்தில் விக்னேஸ்வரன் ஐயா கண்டித்திருந்தார்.) இவை தான் பிரதானமான குற்றச்சாட்டுக்கள்.

ணிறிஸிலிதி வவுனியாவில் தவிசாளர் பதவியைப் பெற அதனையே செய்தது. இரண்டும் ரணிலுக்கு எதிராக கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிக்க ஆதரவு தெரிவித்தன. அத்துடன் கூட்டமைப்பே செய்யாத வகையில் தாமைரை மொட்டின் ஆதரவுடன் தவிசாளர் பதவிக்கும் EPRLF போட்டியிட்டிருந்தது.

கூட்டமைப்பை தோற்கடிக்கும் எண்ணம் எங்களுக்கு எப்போதும் இருந்ததில்லை. கொள்கை ரீதியாக தமிழ் தேசியத்தை அழிக்கும் விதத்தில் செயற்படுவதனாலேயே மாற்றுத்தலைமை தேவை என்கிற நிலை ஏற்படுகிறது. ஆகவே அதே பிழையை விடும் அமைப்புகளோடு ஒன்றிணைவதில் அர்த்தம் இல்லை.

கூட்டமைப்பை தோற்கடிக்க இன்னுமொரு கூட்டை தயவுசெய்து உருவாக்க வேண்டாம்.

கொள்கைரீதியாக ஒரு தரப்பு பிழை விடுகிறதென்றால், அந்த கொள்கையை முன்னெடுக்கக்கூடிய நேர்மையாக, உறுதியாக இருக்கக்கூடிய தரப்பைத் தான் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**ஆனால், கூட்டமைப்பு, விக்னேஸ்வரன், முன்னணி என்று பிரிந்து நிற்பது தமிழர் தரப்பை பலமிழக்கச் செய்துவிடுமல்லவா?**

விக்னேஸ்வரன் ஐயாவுடன் கூட்டுசேர்வதில் எமக்கு எந்த பிரச்னையும் இல்லை. ஆனால் சுரேஷ் அணியா? நாங்களா? என்று வரும்போது, ஏன் விக்னேஸ்வரன் ஐயா, சுரேஷ் அணியைத் தெரிவு செய்யவேண்டும் ?

2010 இல் இருந்து நாம் கூட்டமைப்பு பற்றியும், சர்வதேசம் தொடர்பிலும் கூறிவந்த எதுவும் பிழைக்கவில்லை. அவரின் பதவியைக் காப்பாற்ற மக்களை அணி திரட்டி போராடியிருந்தோம். இருந்தும், ஏன் எங்களை விடுத்து, கொள்கையை கைவிட்டு செயற்படும் EPRLFவுடன் கூட்டுச்சேர விரும்புகிறார்? ஏன் இதனை மக்களும், ஊடகங்களும் விக்னேஸ்வரன் அவர்களிடம் கேட்கக் கூடாது ?

இன்றைய தென்னிலங்கை அரசியலில் ரணிலுக்கு கூட்டமைப்பின் 14 உறுப்பினர்களின் ஆதரவுடனேயே பெரும்பான்மையைக் காட்ட முடிகிறது. ஆதரவு வழங்குவதாயின், மக்களுக்கு நீங்கள் செய்து காட்டவேண்டும் என்று கூறாமல், கண்ணை மூடிக் கொண்டு நிபந்தனையற்ற ஆதரவை கூட்டமைப்பு வழங்குகிறது.

பூகோள அரசியல் பற்றி பேசும் நாங்கள், மேற்கு நாடுகளுடனும் இந்தியாவுடனும் பேரம் பேசக்கூடிய ஒரு தரப்பாக இருக்கவேண்டும். அதற்கு கொள்கையில் உறுதியாக இருப்பது முக்கியம்.

ஆரம்பத்தில் 40 வருட அரசியல் அனுபவங்கொண்ட சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள், ஆனந்த சங்கரியுடன் கூட்டு சேர்வதால் தாம் தோல்வியடைவோம் என்று உறுதியாக தெரிந்தும் போட்டியிட்டார். இந்தியாவின் ஆணையை அவரால் மீறமுடியவில்லை.

இன்று விக்னேஸ்வரன் ஐயா உடல்நலத்துடன் இருக்கும் போது உருவாக்கும் கூட்டு அவர் அரசியலில் இருந்து ஒதுங்கிய பின்பு, பிழையான ஒரு கூட்டாக மாற இயலாது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற இன்னுமொரு கூட்டமைப்பை உருவாக்க நாம் துணைபோக தயாரில்லை.

**தேர்தலில் வாக்குகள் பிளவுபடுவதை தவிர்க்க ஒரு தேர்தல் கூட்டைத் தன்னும் ஏற்படுத்த முடியாதா ?**

விக்னேஸ்வரன் ஐயாவுடன் நாங்கள் இணைந்து போட்டியிட்டால் ஒற்றுமையை விரும்பும் மக்கள் எம்மை நிச்சயம் ஆதரித்து தனிப்பெரும் தரப்பாக நாம் வருவோம் என்பதில் எந்த மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை. கூட்டு சேராமல் இருந்தால் இழப்பு எமக்குத் தான். ஆனால், தேர்தலுக்கு பின்பு, நிச்சயம் பிரச்சனை வரும். கூட்டு உடையும். அதனால், எந்த பிரயோசனமும் இருக்கப் போவதில்லை.

**தர்சினி உதயராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிராமிய உடுக்கு பாடல் கலாபூசணம் சிவலிங்கம் மறைவு**

# முள்ளிவாய்க்காலில் தப்பிவந்த உடுக்கு ஒலியிழந்தது;



கலா பூசணம் என்ற வார்த்தை ஆழமான கனதியான சொல்லாக எனக்குப் பட்டதே சிவலிங் கண்ணாவிற்கு அது கொடுக்கப்பட்ட பின்னால்தான் .

சிவலிங்கண்ணா என்றால் சிலம்படி, சிந்துநடைக் கூத்து, நாடகத்துறை, உடுக்கு,போர்த்தேங்காய் உடைத்தல், கரக ஆட்டம்,நாட்டார் பாடல் எனப் பல்வேறு கிராமியக் கலைத்துறைகளில் தனது முத்திரையைப் பதித்துக் கொண்ட கலாபூஷனம் சிவலிங்ம்

உடுக்கு

சிலம்பம்

பட்டம் ( காத்தாடி )

இளையவர்கள், குழந்தைகள்

வாழ்க்கை என்று அழகாக வந்து விழும் சொல்லணிகள் . வெயில் காலிக்கத் துவங்கும் நேரத்தில் இருந்து முன்னிரவு முழுவதும் கந்தவன வீதியில் சிவலிங்கண்ணாவின் கணீரென்ற குரலும் கம்புகள் மோதிக்கொள்ளும் ஓசையும் நாள் தவறாமல் கேட்ட காலம் ஒன்றுண்டு . பார்ப்பவர்களுக்கு அவரது பருமனான உடல் கண்ணுக்கு தெரியும் ஆனால் உடல் ஒன்று இருப்பதாகவே அவர் நடந்துகொள்ள மாட்டார் . உடான் பாய்ந்து நாலு வீட்டு சலாம் அடித்து ஒரு கையை நிலத்தில் ஊண்டி மறுகையில் கம்பை வீசியபடி ஊண்டிய கையிற்குள்ளாலும் இரு கால்களுக்குள்ளாலும் கம்பை வீசி தொடர்ந்த படை வீச்சோடு சிலம்பம் நீட்டி நிற்கும் அழகு அலாதியானது . ஆரம்ப நிலையில் சிலம்பம் கற்பவர்களில் இருந்து நன்றாக தேர்ந்தவர்கள் வரை ஒரே நேரத்தில் கற்றுக் கொடுப்பார். சுழன்று சுழன்று எல்லோரையும் கவனிப்பார். ஓரிடத்தில் இருந்ததை பார்க்க முடியாது . வீச்சை திருத்துவார் கால் அடிமானத்தை திருத்துவார் . எந்த நேரத்திலும் தகாத வார்த்தைகளால் யாரையும் பேச மாட்டார் . சலியாமல் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொடுப்பார் . காலை வேளைகளில் கந்தவனக் கோவில் வாசலில் அமர்ந்திருந்து தேவாரம் திருவாசகம் திருப்புகழ் மற்றும் பக்திப்பாடல்களை பாடுவார். அம்மன் கோவில் திருவிழாக் காலங்களில் உடுக்கோடு அம்மன் பாடல்கள் மிடுக்கோடு ஒலிக்கும் அவர் குரலில் பட்டக் காலங்களில் சுற்று வட்டாரத்தில் உள்ள சிறுவர் சிறுமியர்களுக்கு விதம் விதமான பட்டங்கள் செய்து கொடுப்பார். வாழ்க்கையை அழகான அன்போடும் ஈடுபாட்டொடும் கொண்டாடிய மாமனிதர்.

கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக அவரால் உருவாக்கப்பட்ட, அவரது கலைப் பரம்பரை ஒன்று வல்வெட்டித்துறை, பொலிகண்டி, பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில்இன்றும் மறைந்து போகாது நாட்டார் கலைகளைப் பாதுகாத்துவருகின்றது என்றால் அது அமரர் சிவலிங்கம் அவர்களின் அர்ப்பணிபபு மிக்க கலைச் சேவையினாலேயே என்பதை நினைக்கும் பொழுது எங்கள் நெஞ்சம் பெருமிதம் கொள்கின்றது.

பொலிகண்டி மண் பெற்றெடுத்த ஒரு மாபெரும் கலைஞனாகத் திகழ்ந்த கலாபூசணம் சிவலிங்கம் அவர்களின் இழப்பு ஈழத் தமிழர்களுக்கு மட்டுமல் லாது உலகத் தமிழச் சமூகத்திற்கே ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பலீகும்.

சூசை என்கிற கடலாண்ட தளபதியின் அண்ணன் என்பது கூடுதல் பெருமை . சூசை அவர்கள் தனது தந்தையை சிறு வயதிலேயே இழந்தவர். சூசை அவர்களுக்கு அண்ணனும் சிவலிங்கண்ணாதான் அப்பாவும் சிவலிங்கண்ணாதான். உலகறிந்த ஒரு தளபதியை உருவாக்கும் அவ்வளவு மனித வளங்களும் சிவலிங்கண்ணாவில்கொட்டிக்கிடந்தது என்பதுதான் உண்மை. இப்படி ஒரு அண்ணனுக்குத்தான் அப்படி ஒரு தளபதி தம்பியாக இருக்கமுடியும் .

எப்பவாவது கடற்கரை மணலில் அமர்ந்து சிவலிங்கண்ணாவை பாடும்படி கேட்டால் கங்கை அணிந்தவா என்று தொகையறாவில் தொடங்கி தில்லை அம்பல நடராஜா செழுமை நாதனே பரமேசா என்று பாடத் தொடங்குவார் .

இந்த பாடலை எப்போது கேட்டாலும், பாடலை பாடி சௌந்தரராஜனோ பாடலுக்கு நடித்த ஜெமினி கணேசனோ நினைவுக்கு வரமாட்டார்கள், சிவலிங்கண்ணாதான் வந்து நிற்பார் .

முள்ளிவாய்க்காலுக்குள் தப்பி உயிரோடு உடுக்கையும் கொண்டு வந்ததாக கூறினாராம்

அந்த உடுக்கை இன்னும் இருக்கிறது. நீங்கள் வீசிய சிலம்பம் உலகமெல்லாம் பரவிக் கிடக்கிறது. உங்கள் வித்தைகளும் உங்கள் நினைவுகளும் என்றென்றும் வாழும்



வல்வை முத்துமாரி அம்மன் வாசல் அடி உடுக்கை பாடல் இக்காணொளியை 2010 ஏப்ரல் மாதம் இகுருவியால் எடுக்கப்பட்டது

www.biztha.com/video/sivalingam

கதி செல்லகுமார்

## கனேடிய தமிழ் வர்த்தக சமேளன கிறிஸ்மஸ் நத்தார் ஒன்றுகூடல்
















## வீடு விற்பனை துறையில் அதிஉயர் விருதினை பெரும் ராஜ் நடராஜா




Remax Excel நிறுவனத்தின் இந்த ஆண்டுக்கான வீடு விற்பனை முகவர்களுக்கான விருதுவிழாவில் , தொடர்ந்தும் அத்துறையில் விருதுகளை பெற்றுவரும் ராஜ் நடராஜா அவர்கள் இந்த ஆண்டும் தனது விருதினை பெற்றுக்கொண்டார் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congres Tamoul Canadien

*"Voice of Tamil Canadians"*

# கனேடிய தமிழர் பேரவையின் தமிழர்களுக்கு எதிரான வழக்குகள்!

மனிதாபிமான உதவி கோரி கனேடிய தமிழர் பேரவையை நாடிய பெண் ஒருவர் அங்கு பணியாற்றிய ஒருவரால் பாதிக்கப்பட்டுள்ளதான குற்றச்சாட்டு விடயம் எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. 2015ம் ஆண்டு இந்த விடயம் எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட போது இது தொடர்பில் எனக்கு வழங்கப்பட்ட பாதிக்கப்பட்டதாக கூறப்பட்டவரின் ஆதாரங்களை ஆராய்ந்து பாரத்ததோடு பாதிக்ப்பட்டவரின் கருத்துக்களையும் கேட்டறிந்தேன்.இந்த விடயத்தின் பாராதூரமான தன்மையினையும் இதனால் ஏற்படக் கூடிய விளைவுகளையும் கருத்தில் கொண்டு இந்த விடயம் குறித்த அந்த அமைப்பின் நிர்வாகத்துக்கு கொண்டுபோகுமாறு கேட்டிருந்தேன் .

பாதிக்கப்பட்ட பெண் தரப்பினர் அவருக்கு இடம்பெற்றது போன்ற சம்பவங்கள் இனியும் தொடரக் கூடாது என்றும் அதனை தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு என்றும் கூறியிருந்தார்.

இந்த விடயம் குறித்த விடயங்கள் கனேடிய தமிழர் பேரவை அன்றைய தலைவர் ராஜ் தவராஜசிங்கம் அவர்களுக்கு அனுப்பிவைக்க ஆவானசெய்தேன்.. ஆனாலும் 2015 ம் ஆண்டு இதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த விடயத்தில் நேரடியாக தம்மை ஈடுபடத்த தீர்மானித்தனர்.

முதல் கட்டமாக கனேடியத் தமிழர் பேரவையுடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டுள்ள சமூகத்தின் மதிப்பு மிக்க பாராளமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் உதவியை அவர்கள் நாடினார்கள் .

அவர் மூலமாக கனேடியத் தமிழர் பேரவையை தொடர்பு கொண்டு இந்த விடயம் குறித்து ஆராயுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் இது குறித்து நடவடிக்கை எடுப்பதாகவும் குறித்த ஊழியர் தற்போது பணியில் இல்லை, என்றும் ஹரி ஆனந்தசங்கரிக்கு கனேடியத் தமிழர் பேரவையின் தலைவர் மின்னஞ் சல் மூலம் உறுதிப்படுத்தியிருந்தார். மேலும் அதற்குரிய சுயாதீன விசாரணை செய்யக்கூடிய நிறுவனங்களின் பெயர்களை சிபாரிசு செய்யுமாறும் கேட்டிருந்தார்.

அவர் பணியில் இல்லை என்று அவர்கள் அறிவித்தமையின் பின்னரும் குறித்த ஊழியர் கனேடியத் தமிழர் பேரவையின் சார்பில் செயல்பட்டமை ஆதாரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் தாம் ஏமாற்றப்பட்ட தாகவும் தமது கோரிக்கைகளை கனேடியத் தமிழர் பேரவை உதாசீனம் செய்துள்ளதாகவும் கருதிய அந்த

மூலம் ஒரு விதமான பயத்தை ஏற்படுத்தினார்கள். சட்ட நடவடிக்கை தொடர்பான எச்சரிக்கையினை பகிரங்கமாக தமது முகநூலிலும் வெளிப்படுத்தியிருந்தார்கள்

அதனை தொடர்ந்து இந்த முறைப்பாட்டை பதிவேற்றிய இளைஞர் மீதம் அந்த அமைப்பு Legal Notice அனுப்பியிருந்தமை இங்கு குறிப்பிடப்பட வேண்டியது அவசியமாகின்றது.

இதனை அடுத்து தமிழ்வின் தொலைக்காட்சி நிலையம் என்னை அணுகி இந்த விடயம் குறித்த நேர்காணல் ஒன்றை பெற்றிருந்தது.

அந்த நேர்காணலின் போது கடந்த காலங்களில் இடம்பெற்ற முக்கியமான சில விடயங்களையும் இந்த அமைப்பின் செயல்பாடுகளில் அதிருப்தி நிலை தோன்றியதன் காரணத்தையும் நான் அந்நேர்காணலில் பதிவு செய்துள்ளேன்.

மிக முக்கியமாக பொது அமைப்பாக தமிழர்களுக்கான அமைப்பாக தன்னை அடையாளப்படுத்தி வரும்

இது விடயமாக சட்டநடவடிக்கை எடுத்தஉடனேயே இயக்குனர் டாண்டன் துரைராஜவிடம் இது தேவையற்றது, இதை பேசி தீர்த்துக்கொள்ளலாம் என்று அவருக்கு நெருக்கமானவர்களுக்கு தெரியப் படுத்தியிருந்தேன். இது விடயமாக பேசியபோது "இப்படியான வழக்குகளுக்காக அமெரிக்காவில் இரு வைத்தியர்கள் இரண்டு இலட்சம் டொலர்களை தமக்கு தருவதாகவும், கோட்டில் சந்திப்போம் என்றும், பேசி தீர்ப்பதற்க்கான வழியை வழமையான அவரது கடும் போக்கு பாணியில் மறுத்துவிட்டார்.

இந்த அமைப்பு தனிமனிதரால் கட்டுப்படுத்தப்படுவதும் அவருடைய விருப்பத்திற்கு அமைவாக தன்னிச்சை யான முடிவுகளை எடுப்பதும் ஆரோக்கியமற்றது என்பதை தமிழ்வின் தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியில் தெளிவுபடுத்தியிருந்தேன்.

கனேடியத் தமிழர் பேரவையின் இயக்குனராக செயல்படும் திரு. டான்டன் துரைராஜா என்பவர் எடுக்கும் தன்னிச்சையான முடிவுகள்







அந்தக் காலப் பகுதியில் பல்வேறு தனி நபர்களுக்கும் இந்த விடயம் குறித்து தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அவர்களும் கனேடியத் தமிழர் பேரவையை தொடர்பு கொண்டு விளக்கம் கோரிய போது அதற்கான சரியான பதிலை கனேடியத் தமிழர் பேரவை வழங்கவில்லை. மாறாக இந்த விடயங்களை தெரியப்படுத்துபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர். இதற்கான ஆதாரங்களும் தற்போது சிலரால் பகிரப்பட்டுள்ளன.

கனேடியத் தமிழர் பேரவை கனடாவில் வாழும் தமிழ் மக்களுக்கும் கனேடிய அரசுகள் மற்றும் பொது அமைப்புகளுக்கும் இடையிலான உறவுப் பாலமாக விளங்கி வரும் ஒரு முக்கியமான அமைப்பு.

அந்த அமைப்பு மக்களினதும் அரசாங்கங்களினதும் நம்பிக்கையினை இழக்கும் நிலை ஏற்படக் கூடாது என்பதற்காக நாம் இந்த விடயத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கு தயங்கினோம்.

ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் எம்மைப் போன்ற பல்வேறு ஊடக நிறுவனங்களையும் சமூக ஆர்வலர்களின் உதவியினையும் தொடர்ச்சியாக நாடிக் கொண்டிருந்தனர்.

அந்த பெண்ணின் தொடர் முயற்சிகளின் பலனாக சமூக ஆர்வலரான இளைஞர்கள் சிலர் இளைஞர்கள் இந்த விடயத்தை change.org என்ற தன்னார்வ தொண்டு நிறுவன இணையத் தளத்தின் ஊடாக பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இந்த முறைப்பாடு பகிரங்கப்படுத்தப் பட்டதை அடுத்து இந்த அமைப்பின் செயல்பாடுகள் மீது அதிருப்தி கொண்ட பலர் தமது ஆதரவை இந்த முறைப்பாட்டிற்காக வெளிப்படுத்தி வருகின்றமை சுட்டிக்காட்டத் தக்கது.

எனினும் இந்த விடயம் பகிரங்கப் படுத்தப்பட்டதை ஏற்றுக் கொள்ள முடியாத கனேடியத் தமிழர் பேரவை, இதனை பகிர்கின்றவர்களுக்கு எதிராக, அவதூறு சட்டம் என்றால் என்ன என்று பொதுமக்களுக்கு விளக்குவதன்

கனேடியத் தமிழர் பேரவை தனது ஊழியர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றசாட்டை விசாரணை செய்யத் தவறியமையும் சுயாதீனமான முறையில் விசாரணையினை நடத்தி உண்மை நிலையினை வெளிப்படுத்து மாறு கோரியவர்களுக்கு எதிராக legal notice அனுப்ப தீர்மானித்தமையும் எனக்கு கடும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

மக்களுக்கான அமைப்பு தமிழ் மக்கள் பெயரால் கனேடிய அரசாங்கங் களிடம் இருந்து நிதி உதவிகளை பெற்று வரும் அமைப்பு அதே தமிழர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முயல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றே நான் கருதுகின்றேன்.

கனேடியத் தமிழர் பேரவை என்ற மிக முக்கியமான அமைப்பின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கி வருவதாக நான் கருதுகின்றேன். 10 வருடங்களுக்கு மேலாக ஒருவர் தொடர்ச்சியாக ஒரு அமைப்பை நிர்வகிக்கும்போது ஏற்படும் பாரதூர விளைவுகளையும் சமூகமாக நாங்கள் எதிர்வு கொள்ளவேண்டியிருக்கின்றது.

ஏற்கனவே கனடாவில் வழமையாக நடத்தப்பட்டு வரும் மாவீரர் தினத்திற்கு மாற்றாக மற்றுமொரு மாவீரர் தின நிகழ்வை நடத்த வேண்டும் என்று அவர் மேற்கொண்ட முயற்சிகள் குறித்தும் அது எவ்வாறான தாக்கங்களை எமது சமூகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தியது என்பது குறித்தும் எனது நேரடியான அனுபவங்களையும் நான் வெளிப்படுத்தியிருக்கின்றேன். மாவீரர்களின் பெயரால் தமிழ் சமூகத்தை கூறுபோடும் இந்த முயற்சி இறுதியில் தோல்வியடைந்தமையை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். இது தொடர்பாக தற்போது சர்ச்சையை உருவாக்கியிருக்கும் முன்னாள் பேச்சாளர் தனது சொந்த வார்த்தையால் டான்டன் துரைராஜவும், முன்னாள் தலைவர் ராஜ் தவரட்ணசிங்கமும், நிர்வாக சபையின் கருத்துக்கு எதிராக, அவர்களது ஆதரவு இல்லாமல் 2 வது மாவீரர் நாளை நடத்தியிருந்தார்கள். இதற்கு அவர் தனது எதிர்ப்பையும் தெரிவித்திருந்தார் .

மேலும் கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்திற்கு பதிலாக மற்றுமொரு வர்த்தக சம்மேளனத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று அவர் முனைப்புகளை மேற்கொண்டதையும் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்த முயற்சி வெற்றியளிக்காத நிலையில் மாற்று உபாயங்களையும் இவர் பல தடவை முன்னெடுத்தார்.

அதன் தொடர்ச்சியாக அமைச்சர் மங்கள சமரவீரவின் விசேட அழைப்பின் பேரில் இலங்கைக்கு கனேடியத் தமிழர் பேரவை விஜயம் மேற்கொண்டபோது கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளனம், கனேடிய தமிழ் மருத்துவ அமைப்பு பிரதிநிதிகள் சிலரையும் துணைக்கு அழைத்துச் சென்று அங்கு சந்திப்புகளை இவர்கள் மெற்கொண்டிருந்தமை சுட்டிக்காட்டபட வேண்டியது. இது வர்த்தக சம்மேளனத்திற்கும் அந்த விஜயத்தை மேற்கொண்ட அதன் பிரதிநிதிகளுக்கும் பல்வேறு சங்கடங்களை ஏற்படுத்தியிருந்தமையும் நினைவு கூரத்தக்கது.

தனது தலைமையின் கீழ் கனேடிய தமிழர் சமூகத்தை கொண்டு வர வேண்டும் என்று அவர் பேரவாக் கொண்டு செயல்படுவதன் காரணமாகவே இன்று இவ்வாறான இக்கட்டான நிலை கனேடியத் தமிழர் பேரவைக்கு ஏற்பட்டுள்ளதாகவே கருதப்படுகின்றது.

அவருடனான எனது அனுபவங்களை மட்டுமே நான் வெளிப்படுத்தியிருந்தேன் .அந்த நேர்காணலுக்கு சமூக நலன் விரும்பிகள் பலரும் ஆதரவை தந்திருந்தார்கள்

தனி மனிதர்களோடு பேசித் தீர்க்கப் படவேண்டிய பிரச்சினை களை சட்டத் தரணிகள் ஊடாக அணுகி இந்த பிரச்சினையை பூதகரமாக்கியமைக்கான முழுமையான பொறுப்பினையும் கனேடியத் தமிழர் பேரவை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

வெளிக்கொணர்ந்தவருக்கு எதிராக Legal Notice அனுப்பிய பின்னர் இந்த விவாதங்களை தோற்றுவித்த விடயம் குறித்து தனியார் புலனாய்வு அமைப்பின் விசாரணைகள் ஆரம்பித்துள்ளதாக கனேடியத் தமிழர் பேரவை தற்போது அறிவித்துள்ளது

ஆனால் அந்த விசாரணை எவ்வாறு நடைபெறுகின்றது என்பது மிகப் பெரிய கேள்வியாக மாறியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சமூக பரப்பில் உரையாடியவர்களுக்கும் , வெளியில் கொண்டுவந்தவர்களுக்கும் சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று பயமுறுத்தியதன் பின்னர், எப்படி பாதிக்கப்படடவர்களோ அல்லது அவர்கள் தரப்பினரோ வெளியில் வருவார்கள்?

விசாரணை நடத்தப்படுவதான அறிவித்தல் வெளியிடப்பட்ட சில நாட்களில் தமது அமைப்பின் மீது அவதூறு பரப்புகின்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான நிதி சேர் கூட்டத்தை அழைக்கப்பட்ட ஆதரவாளர்களுடன் இந்த அமைப்பு நடத்துகின்றது.

இவற்றின் மூலமாக அந்த அமைப்பு தமிழ் சமூகத்திற்கு எவ்வாறான செய்தியினை சொல்ல விரும்புகின்றது.

இந்த அமைப்பில் ஜனநாயகத் தன்மையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே எமது அடிப்படையான கோரிக்கை. இந்த அமைப்பை அழிவுப் பாதையில் இருந்து மீட்டு எடுத்து ஜனநாயக வழியில் தெளிவான சிந்தனையும் மக்கள் நல நோக்கங்களும் கொண்ட இயக்குனர்கள் வழிநடத்தும் நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். இந்த அமைப்பு தனக்கான பொறுப்புக் கூறல்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான தனக்கு எதிராக குரல் கொடுப்பவர்களின் குரல் வளைகளை நசுக்கும் வகையிலான சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதை நிறுத்த வேண்டும். தம்மீதான விமர்சனங்களை உரிய வகையில் எதிர் கொள்வதும் குற்றச்சாட்டுக்களை பக்கச்சார்பற்ற வகையில் சுயாதீனமாக விசாரணை செய்வதும் அவசியம் என்றே நாம் கருதுகின்றோம்.

ஒரு புறம் சுயாதீனமான விசாரணைகள் ஆரம்பித்துக்கொண்டு மறுபுறம் அக் குற்றச்சாட்டை கொண்டுவந்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைக்கு நிதி சேர்ப்பதும் தீர்வாகுமா?

எனவே தான் சமூகத்தில் அக்கறை கொண்டவர்கள் இந்த அமைப்பு தொடர்ந்தும் எமது சமூகத்திற்கும் தாயக மக்களுக்கும் காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டும் என்று விரும்புகின்றவர்களும் இந்த அமைப்பினை நேர்வழிக்கு கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும் என்பதே எனது பேரவா.

எமது சமூகம் இன்று எதிர் நோக்கியுள்ள சாவல் மிக்க சூழலை எதிர் கொள்வதற்கும் காத்திரமான பங்களிப்பை வழங்குவதற்கும் உதவிகளை வழங்ககப் கூடிய கனேடிய தமிழர் பேரவையை காப்பாற்ற அனைவரும் ஒன்று திரள வேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

**நவஜீவன் அனந்தராஜ்**



தமிழ் விண் தொலைக்காட்சியில் திரு பிரசாந்த் அவர்கள் என்னிடம் செவ்வி கண்ட காணொளியின் முழுவடிவம்
www.biztha.com/video/defamation


DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?
We offer Total Debt FREE SOLUTIONS



Elankeeran .T
Certified Insolvency Counsellor
By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.
  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

Head Office:
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

Branch Office:
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடவும் முடியாது. ஒளியவும் முடியாது

## சந்தி சிரிக்க பெயர் வரும்



மார்கழிஎன்றால்பண்டிகைக்காலம். வேலைத்தளங்களில். வீடுகளில். நண்பர்களிடையே. உற்றார் உறவினர் என கூடிக் கழிக்கும் காலம் தான். பல ஒன்றுகூடல்கள் எங்கும் அரங்கேறும். அங்கங்கு உற்சாக பானங்களும் துள்ளி விளையாடும்... பின்னர் மதிமயங்கிய வேளையில் வாகனங்களின் ஓட்டுனர் இருக்கையில் இருப்பது. ஓட்டுபவர்களுக்கு மட்டுமல்ல. அவ்வாகனத்தில் பயணிப்பவர்களுக்கு மட்டுமல்ல. வீதிகளில் பயணிப்போர் அனைவருக்குமே ஆபத்தானது தான்.

இவ்வாறு மதுபோதையில் வாகனம் ஓட்டுபவர்களால். பல சிறுவர்கள். இளையவர்கள் மட்டுமல்ல. பல குடும்பங்கள் வாழ்கையை இழக்கும் துயரம் தொடர்கதையாகிறது... பொலிசாரும் பொறுத்துப் பார்த்தனர். தற்போது பொங்கியெழ ஆரம்பித்துவிட்டனர். இவ்வாறு அளவுக்கு அதிகமாக குடித்துவிட்டு வாகனம் ஓட்டுபவர்களை தண்டிப்பது மட்டுமன்றி. அவர்கள் பெயர்களை வெளிப்படையாக வெளியிடவும் ஆரம்பித்துள்ளனர்.

பிக்றிங். ஏஜாக்ஸ். ஒசாவா நகரங்கள் உள்ளடக்கிய டேகம் பிராந்தியப் பொலிசார். இதனை கடந்த 10 வருடங்களாக கடைப்பிடித்து வருகின்றனர். ஓக்வில். பேர்லிங்டன். மில்டன் மற்றும் கோல்டன் கில்ஸ் நகரங்கள் அடங்கிய கோல்டன் பிராந்தியம், கடந்த ஒரு வருடமாக இதனைச் செய்து வருகிறது.

தற்போது மார்க்கம், றிச்மன்ட்கில், வோன், ஸ்ரோவில், அரோரா அடங்கிய யோர்க் பிராந்தியமும் இவ்வாரத்தில் இருந்து ஆரம்பித்துள்ளது. கடந்த வார இறுதியில், இவ்வாறு தண்டிக்கப்பட்ட 16 வாகன ஓட்டிகளின் பெயரை, அது முதற்தடவையாக வெளியிட்டுள்ளது.

அதில் மூவர் தமிழர்கள். இருவர் 30 வயதிற்கு குறைந்தவர்கள், ஒருவர் பெண். மார்கழி இப்போது தான் ஆரம்பித்துள்ளது. பண்டிகை களைகட்ட இன்னும் நாட்கள் இருக்கிறது. இப்போதே மண்டையில் ஆழமாக ஏற்றிவிடுங்கள், மது அருந்தினால் வாகனம் ஓட்டுவதில்லை என்று. இல்லையேல் நீங்கள் சொல்லவேண்டாம் ஊருக்கே தெரிந்துவிடும்... பின்னர் ஓடவும் முடியாது ஒளியவும் முடியாது.

நன்றி: நேரு

வீடு வாங்க விற்க வாங்க

CONSUMER CHOICE AWARD 2016 GTA EAST

RE/MAX COMMUNITY
Realty Inc , Brokerage



Esan Kulasegaram
Sales Representative
416.833.9999

off. 416.287.2222 | fax 416.282.4488
203 - 1265 Morningside Ave Toronto, ON



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Atom Egoyan

## உலக சினிமாவின் தவிர்க்க முடியாத ஆளுமை



நாங்கள் என்றைக்குதே
கவனிக்கத் தவறிய இடம் வீடு
நிறைய திருத்தங்கள் தேவை
அங்கு ஒவ்வொரு வருடமும்
வெவ்வேறு மனிதர்கள்
ஓட்டைகளை அடைத்து விட்டு
தங்களது தூசுக்களை
நிரவிச் செல்வர்

Robert N. Watson - Winter in the summer house

அற்றம் எகோயன் ஒரு முழுமையான படைப்பாளி அல்ல, வர்த்தக சினிமாவின் கண்களுக்கு இவர் இவ்வாறே தெரிகின்றார். அற்றம் எகோயன் ஒரு கலைத்துவமிக்க சுய விமர்சகர்.

கனடிய திரைப்படங்கள் என்றவுடன் பல விமர்சகர்கள் மத்தியில் உடன் நினைவுக்கு வரும் பெயர் அற்றம் எகோயன். இவரது பெயரின் முதல் பகுதி அணுகுண்டை மையமாகக் கொண்டது. எகிப்தின் முதலாவது அணுகுண்டு பரிசோதனை முயற்சியின் நினைவாக சூட்டப்பட்டது. இவரது பெற்றோர் எகிப்திய—ஆமேனியா. எகிப்தில் இருந்து இவர்களது குடும்பம் பிரிட்டிஸ் கொலம்பியாவிற்கு குடிபெயர்ந்தது. பின்னர் ரொரன்ரோ பல்கலைக் கழகத்தில் தனது பட்டப்படிப்பை மேற்கொண்டார். படிக்கும் காலங்களில் சாமுவேல் பெக்கெற் ஹரோல்ட் பின்ரர் போன்றோரது படைப்புக்களில் ஆர்வமேற்பட்டு தனது தேடலை வளர்த்துக் கொண்டார். சாமுவேல் பெக்கெட் பற்றி பல விரிவுரைகளையும் நிகழ்த்தியுள்ளார். ரொரன்ரோ பல்கலைக் கழகத்தில் ஒரு விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார். (2006 க்குப் பின்னர்)

எங்களைப் போன்று ஒரு குடியேறியாக சிறிய வயதில் கனடாவில் குடியேறியவர். இவர் சந்தித்த துயரங்களை எங்களில் பலர் ; சந்தித்துள்ளோம். இவரது மூதாதையரும் எமது இனத்தைப் போல் படு மோசமான அழிவுகளை படுகொலைகளை சந்தித்துள்ளனர். "ஆர்மேனியா எனது கற்பனையானதல்ல. ஆனால் அநேகமாக புலம் பெயர் ஆர்மேனியர்களுக்கு அவர்களுடைய பூர்விகமான சொந்த நாட்டுடன் தொடர்புபடுத்தி அடையாளப்படுத்துகின்ற செயற்பாடொன்று மிகவும் தீவிரமாகப் புனரமைக்கப்பட்டுவிட்டது"(2) எனக் கூறியுள்ளார்.

இவர் ஆரம்பத்தில் ஆமேனிய கலாச்சாரத்தில் ஈடுபாடுகாட்டாதவர். பின்னர் தீவிரம் காட்டினார். தன்னை ஒரு ஆமேனியராக அடையாளப்படுத்துவதில் முன்னின்றார். ஒருவர் தன்னை ஒரு ஆர்மேனியராக அடையாளம் கண்டுகொள்வதில் வெட்கப்பட ஏதுமில்லை என்றும் அப்படி இன்னொரு அடையாளத்தையும் கொண்டிருப்பதில் மகிழ்வடைந்தார். இவரது துணைவியார் ஆர்சினே கன்ஜின் (Arsinee Khanjian) எகோயனின் பெரும்பாலான படங்களில் நடித்துள்ளார். இவரது முதலாவது படம் தயாரிக்கும் பொழுது ஒரு நடிகையாக சந்தித்தார். ஆதன் பின்னர் வாழ்க்கையிலும் இணைந்து கொண்டனர். திருமணத்தின் பின் இவர் மேலும் ஆமேனியராக தமது அடையாளத்தை தீவிரப்படுத்தினார்.

"என்னுடைய வரலாற்றுடனும் கலாச்சாரத்துடனும் பிணைந்த ஒரு கலைஞரைச் சந்தித்தேன். இது எனக்கு எப்பொழுதுமே, ஒரு வேளை நினைவில் மனதில் என் கனவாகவே இருந்தது" என்று எகோயன் தெரிவிக்கின்றார்.

ஆர்சினே அரசியலில் முதுமானிப் பட்டம் பெற்றவர். நாடகவியலும் படித்தவர். இறுக்கமான கட்டுக்கோப்பான ஆமேனிய சமூகத்திலிருந்து வெளிப்பட்ட இவர், தனது கணவனின் படங்களில் பாலியல் காட்சிகளில் இயல்பாக நடித்துள்ளார். பாலியல் விடயங்களை அற்றம் வெளிப்படுத்துகின்ற விதத்தில் நான் எப்போதும் அசௌகரியமாக உணர்ந்து கொண்டதில்லை. ஒரு வேளை அது எனது ரகசியக் கற்பனைகளை நிறைவு செய்கின்ற ஒன்றாகவும் இருக்கக்கூடும். மூன்றாவதாக அவரது திரைப்பட மொழி அலாதியானது.

In an interview published in Cineaste magazine, Egoyan says:

"I find cinema is a great medium to explore ideas of loss, because of the nature of how an image affects us and how we relate to our own memory and especially how memory has changed with the advent of motion pictures with their ability to record the experience. Our relationship as filmmakers to those issues has changed radically over the past fifteen or twenty years. And people in our society have the instruments available to document and archive their own history. In my earlier films, I was exploring this in quite a literal way. But the ways in which our ability-and our need-to remember have been transmogrified comes very much into the spirit of this film as well."[22]

முள்ளிவாய்க்காலை நினைவுபடுத்தும் Ararat

ஒட்டமன் இராச்சியத்தில் 1299 ல் இருந்து கார்த்திகை 1,1922 வரை நீண்டிருந்த சாம்ராஜ்யம். இதனை துருக்கி சாம்ராஜ்யம் எனவும் அழைப்பார்கள். இந்த சாம்ராஜ்யத்தின் முக்கிய மதம் சுனிமுஸ்லீம். 1500 களில் பாக்தாத், கெய்ரோ, ஜெருசலேம் வரை பரந்திருந்தது இந்த சாம்ராஜ்யம். இந்த சாம்ராஜ்யத்தில் பல்வேறு இனக் குழுக்களும் வாழ்ந்தனர். ஆர்மேனியர் இந்த இனக் குழுக்களுள் ஒரு குழு. ஒட்டமன் சாம்ராஜ்யத்தின் விரிவில் உள்ளடக்கபட்ட பல பிரதேசங்களுள் ஆமேனியாவும் ஒன்று. 15ம் நூற்றாண்டில் ஆமேனியா இந்த சாம்ராஜ்யத்தில் உள்ளடக்கப்பட்டது அல்லது ஆக்கிரமிக்கப்பட்டது எனலாம். ஆமேனியர் பெரும்பாலானோர் கிறிஸ்தவர்கள். இரண்டந்தர பிரசைகளாக நடாத்தப்பட்டார்கள். 1894—1896 க்குமிடைப்பட்ட பகுதியில் சுமார் மூன்று லட்சம் ஆமேனியர்கள் கொல்லப்பட்டனர். 1909ல் மீண்டும் சுமார் 15,000 பேர் கொல்லப்பட்டனர். Young Turk Party மத்திய குழுவால் 1916ல் திட்டமிடப்பட்டு ஆமேனியர் கொல்லப்பட்டனர். சித்திரை 24,1916ல் ஆமேனிய புத்திஜீவிகள் சுத்திவளைக்கப்பட்டு கொல்லப்பட்னர். மிகுதியாக இருந்த ஆமேனியர் வன்னியில் உள்ள முகாம்கள் போன்ற முகாம்களில் அடைக்கப்பட்டனர். அதை விட சுமார் இரண்டு லட்சம் ஆமேனியர் சிரியாவிற்கும், கிறீஸ்க்கும் அனுப்பப்பட்டனர். இது நடைபெற்ற காலம் முதலாவது மகாயுத்தம் நடைபெற்ற காலமாகும். ஆயிரக் கணக்கானோர் வீதிகளில் வெட்டி எறியப்பட்டனர். பலர் பசியால் இறந்தனர். இந்த படுகொலைகள் 1923 வரை நீடித்தது. இந்தப் பகுதியில வேலை பார்த்த அமெரிக்க அதிகாரிகள் இந்த படுகொலைகளை வெளி உலகிற்கு உணர்த்தினர். புல ஆங்கில பத்திரிகைள் முக்கிய செய்தியாகவெளியிட்டனர். இந்த படுகொலைகளை கண்டித்த துருக்கியர் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த படுகொலைகளின் பிரதானமான நகரமாக வான் என்ற நகரம் திகழ்ந்தது. அமெரிக்க தலைமை வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய Dr.Clarence D.Ussher தலைமை இராணுவ அதிகாரியுடன் தொடா;பு கொண்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தும் தோல்வியில் முடிவடைந்து விட்டது. இவர்பின்னால் தனது நூலான Ehyhd An American Physician in Turkey என்ற நூலில் இக் கொலைகள் பற்றி விரிவாக எழுதியுள்ளார்.

முதலாம் உலக யுத்தத்தின் போது ஒட்டமன் சாம்ராஜ்யத்தின் ஆமேனியா பகுதியை ருசியா கைப்பிடித்தது. இது சோவியத் யூனியனின் தொடர்ச்சி வரை நீடித்தது. இதன் பின்னர் சுதந்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமேனிய குடியரசு தோன்றியது.

மூன்றாவது சந்ததியைச் சேர்ந்த கனடிய இயக்குனரான Neubahf ஆமேனியர்கள் மீதான துருக்கியரின் இன அழிப்பு படுகொலைகளை திரைப்படமாக்கியுள்ளார். Ararat என்ற இப்படம் கான்ஸின் முக்கிய படங்களுள் ஒன்றாக 2002ல் திரையிடப்பட்டது. சர்வதேசரீதயாக பெரும் அதிர்வை இப்படம் ஏற்படுத்தியது. ஊடக வலிமைக்கு இப்படம் ஒரு சான்றாகும். இன்று வரை துருக்கி இக் கொலைகளை மறுத்து வருகின்றது. இவ் வகையில் இப்படம் துருக்கி மீதான விமர்சனங்களை மீண்டும் சந்திக்கு கொண்டுவந்தது.

இயக்குனர் இப்படத்தை எடுத்துள்ள விதம் முக்கியமானது. நேரடியாக படு கொலைகளை எடுக்காமல், படுகொலைகளை பற்றி எடுக்கும் படமொன்றுக்குள் ஓர் படமாகவே இப் படம் எடுக்கப்பட்டுள்ளது.

Ararat இது ஒரு மலையின் பெயர். தெற்கு ஆமேனியாவில் அமைந்துள்ளது இந்த மலை.ஆமேனியரின் சரித்திரம், பண்பாடு, அடையாளம், மதம் போன்றவை கி.முனபிலிருந்தே இந்தப் பகுதிகளில் தோன்றிவிட்டன.

Filmmaker Edward Sorayan ஆமேனியா படுகொலைகளைப் பற்றிய படமொன்றை உண்மைச் சம்பவங்களை மையமாகக் கொண்டு தயாரிக்கின்றார். படுகொலைகள் நடைபெற்ற காலத்தில் வாழ்ந்த ஓவியர் Arshile Gorky என்ற ஓவியரைப் பற்றி ஆய்வு செய்ய ஒரு சரித்திர ஆய்வாளரை நியமிக்கின்றார். இவர் ரொரண்ரோவில் சரித்திர விரிவுரைகளை இந்த ஓவியர் பற்றி நிகழ்த்துகின்றார். இந்த ஓவியரின் "ஓவியரும் தாயும்" என்ற ஓவியம் பிரபல்யமானது. ஆமேனியா படுகொலைகளின் போது இறந்த தாயை நினைத்து ஓவியர் வரைந்தது. 1948ல் ஓவியர் தற்கொலை செய்கின்றார்.

இந்த ஓவியரின் முன்னால் மனைவி அனி ஒரு சரித்திர ஆய்வாளர். அனியின் குடும்பத்தில் பல குழப்பங்கள். அனியின் மகன் ரபிதனது அரைச் சகோதரி சிலியாவை காதலிக்கின்றார். அனியின் இரண்டாவது கணவனும் சிலியாவின் தந்தையும் இறந்தமைக்கு அனியே காரணம் என சிலியா குற்றஞ் சாட்டுகின்றாள். அனியின் முதல் கணவனும் (ரபியின் தந்தை) துருக்கிய சர்வதேச அதிகாரி ஒருவரை கொலை செய்ய முயற்சிக்கும் பொழுது இறந்து விடுகின்றார்.

அனியின் மகன் ரபி படு கொலைகளை பற்றிய சில பதிவுகளை எடுப்பதற்கு துருக்கி செல்கின்றார். இது Sorayan எடுக்கும் படத்திற்கு மேலும் உதவும் என நினைக்கின்றார். இவர் ரொரண்ரோ திரும்பும் வழியில் ரொரண்ரோ விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்படுகின்றார். சுங்க அதிகாரி கேள்விகளால் துளைத்தெடுக்கின்றார். விடியோ பிரதிகளுக்குள் என்ன இருக்கின்றது என்பதை விமான நிலையத்திலேயே ரபியின் படம் பிடிக்கும் கருவியில் போட்டு பார்க்கின்றார். படுகொலைகள் திரையில் விரிகின்றன.

சுங்க அதிகாரயின் குடும்பத்தில் புதிய பிரச்சினைகள். அவரது மகன்




ஒருபாலியலாளார். இதனை ஏற்று கொள்ள முடியாதுள்ளார். இந்த அதிகாரி.

இத் திரைப்படம் கான்ஸ்ல் திரையிட முன்னரே துருக்கிய அரசு, இப் படத்திற்கு எதிராக பிரச்சாரங்களை முடுக்கிவிட்டன. இப் படத்தில் இயக்குனரால் முன் வைக்கப்படும் ஹிட்லரின் வசனம் இது "Who remembers the extermination of the Armenians". இயக்குனர் இப் படத்தை ஒரு புதிய தேடலுக்கான ஆரம்பமாக தொடங்கியுள்ளார். சரித்திரங்கள் தொடர்ந்து கேள்விகளை எழுப்பிக் கொண்டே இருக்கும். இதனால் தானோ தெரியாது கான்ஸில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்துக் கூறிய துருக்கிய பத்திரிகையாளர் கூறிய கருத்து இது" இப்பொழுது இல்லாத துருக்கியர் செய்ததாக செய்யப்படும் பிரச்சாரம். உண்மை நிலை தெரிய எவரும் இல்லை". இதனால் வன்னியிலும் அனைவரும் கொலை செய்யப்பட்டார்களோ?

படம் பல நிலைகளில் பதிவாகியுள்ளது. அனி தற்கொலை செய்து கொண்ட கவிஞரின் வாழ்க்கை வரலாறை எழுத முயற்சிக்கின்றார். சரோயன் படு கொலைகள் பற்றிய படமொன்றை எடுக்க முயற்சிக்கின்றார். ரபி உண்மை வரலாற்றை பதிவாக்க துருக்கி செல்கின்றார். சிலியா தனது தந்தையின் மரணத்தின் உண்மையை கண்டறிய முயற்சிக்கின்றார். சுங்க அதிகாரி மறந்த சரித்திரத்தின் தொடக்கமெதற்கு என ஆட்சேபிக்கின்றார். இவை அனைத்தும் ஒரு தளத்தை நோக்கி நகருகின்றன. ஆமேனிய படு கொலைகளை மீள மக்கள் முன் விசாரணைக்குட்படுத்தல், துருக்கிய அரசு மீதான விமர்சனங்களை மீள தொடங்கல் இவையே இயக்குனரின் நோக்கம்.

இயக்குனர் தனது நோக்கம் பற்றி பின்வருமாறு கூறுகின்றார்.

"Did the Turks say sorry?"

Since the Turks have never admitted that the massacres and forced deportations amounted to genocide — they acknowledge only that many died on each side in World War I — Egoyan didn't know what to say. "I realized that by telling him the answer, the trauma of denial that I had been raised with would be transferred to him," says Egoyan. "I understood that I wanted to talk about how this trauma lives on today."

http://www.time.com/time/magazine/



article/0,9171,901030428-444961,00.html

"That is the determining issue of why I made the film. It wasn't to ascertain the fact of the genocide.....I think that we have to able to find a way to stop talking about this as a film of the American genocide. It is a film about living with the offers of the denial of that event into the present"

இப் படம் இவரது வேதனையை பூர்த்தி செய்துள்ளது. நேற்று இன்று நாளை என வெவ்வேறு காலப் பகுதியில் ஏற்பட்ட மாற்றங்களையும் இப் படம் பதிவு செய்துள்ளளது. ஆர்மேனிய படுகொலைகள் எடுக்கப்பட்ட விதம் கண்கலங்க வைக்கின்றது. வண்டிலின் மேற்பகுதியல் ஒரு பெண்ணை துருக்கிய இராணுவம் பாலியல் வல்லுறவுக்குட்படுத்துகின்றது. வண்டியின் கீழ் பகுதியில் தொங்கும் தாயின் கைகளை பிடித்த வண்ணம் ஒரு சிறுமி. ஒரு மாதுளம் பழத்தை உடைத்து ஒவ்வொரு முத்தை ஒவ்வொரு நாளும் உண்டு பசியாறும் தாய் என படம் திட்டமிட்ட படுகொலைகளயும் துயரங்களையும் அப்பட்டமாக பதிவு செய்துள்ளது.

Calender

இவரது படங்களில் சிறந்த படம் இது எனலாம். மிகக் குறைந்த செலவில் எடுக்கப்பட்ட படம். ஆமேனியாவிற்கு கணவனும் மனைவியும் தேவாலாயங்களைப் படம் எடுப்பதற்கும் ஆய்வு செய்வதற்கும் செல்கின்றனர். இவர்களுக்கு வழிகாட்டியுமாக ஒரு காரோட்டி. இறுதியில் காரோட்டியை மனைவி காதலித்து ஆமேனியாவில் தங்கிவிடுகின்றார்.

கனடா வரும் கணவன் ஒவ்வொரு நாளும் இரவு உணவுக்கு பெண்களை அழைக்கின்றார். இவர்கள் சாப்பிடத் தொடங்க ஒரு தொலைபேசி எடுக்க வேண்டும் என இப் பெண்கள் போவார்கள். வேற்று மொழியில் பேசிக் கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு பெண்ணும் இதையே செய்வார்.

இப் படம் மூன்று பிரதான பாத்திரங்களை கொண்டுள்ளது. கணவன் இவர் ஆமேனிய அடியைக் கொண்டவர். மொழி பேசத் தெரியாது. இவரது மனைவிக்கு மொழி பேசத் தெரியும். இவர் கனடாவில் உள்ளார். காரோட்டி உள்ளூர் பிரசை. இப் படத்தில் கணவன் மனைவியாக எகோயனும் அவரது மனைவியுமே நடித்திருப்பார்கள். இயக்குனர் இதில் வரும் கணவனை ஒத்தவர். அதே போன்று அவரது மனைவி படத்தில் வரும் மனைவியைப் போன்றவர். அதாவது அவருக்கு ஆமேனிய மொழி பேசத் தெரியும்.

ஆமேனியாவில் எடுக்கப்பட்ட பகுதிகள் ஒரே பகுதிகள் போன்று தான் தோற்றமளிக்கும். தேவாலயங்கள், கோட்டை என்பளவே காட்டப்படும். ஆமேனியா மக்களை துருக்கியர் கொன்றொழித்த போது ஓரளவிற்கு தேவாலயங்களும் கோட்டையுமே காப்பாற்றியது. படத்தின் ஆரம்பத்தில் கணவனின் வீட்டில் ஒரு காலண்டர் தொங்கும். 12 மாத தாள்களிலும் தேவாலயப் படங்களே காணப்படும். இதை படம் பிடிக்கவே இவர்கள் ஆமேனியா சென்றார்கள்.

அற்றம் எகோயன் ஒரு சிறந்த கதை சொல்லி என்பதற்கு இப் படம் சிறந்த உதாரணம். மிகக் குறைந்த செலவில் சில இடங்களில் மீண்டும் மீண்டும் தோன்றும் ஒரே மாதிரியான படிமங்களில் இப் படத்தை படைத்துள்ளார். ஆமேனியாவில் எடுக்கப்பட்ட பெரும்பாலான காட்சிகளில் கணவனின் குரலையே கேட்கலாம். பல சமயங்களில் அதிகாரத் தன்மையுடன் வெளிப்படும். அதே கணவன் மனைவி பிரிந்த பின்னர் வீட்டுக்கு பெண்களை அழைத்து தனது துயரங்களை பகிரும் பொழுது ஒவ்வொரு பெண்ணும் தொலைபேசி எடுக்க வேண்டும் என்று செல்வாள். இவரது படங்களின் தனித் தன்மையே சில படிமங்களை மீண்டும் மீண்டும் படமாக்கி பாத்திரங்களிடையே உள்ள இடைவெளியை உணரச் செய்தல். இங்கும் ஒவ்வொரு பாத்திரமும் தங்களது வித்தியாசமான உலகில் சஞ்சரிக்கின்றார்கள். இறுதியில் இயக்குனர்—கணவன் "If you see her, say Hello" என்பதுடன் முடிவடைகின்றது. மனைவியன் முடிவு ஏற்றுக் கொள்ளக்கூடியது, வரவேற்கத்தக்கது என்பதை துயரமாகவும் அழகாகவும் வெளிப்படுத்தியுள்ளார்.


இப் படம் உங்களை ஒரு வித்தியாசமான கலைபூர்வமான உலகிற்கு இட்டுச் செல்லும். ஒரு சிறந்த abstract படமிது.

இப் படம் போன்று எமது சிதைக்கப்பட்ட தமிழினத்து நாட்காட்டியும், அவ்வழிவுகளிலிருந்து உருவாக்கலாம்.நாளைய சந்ததிக்கு, இது ஒரு வழிகாட்டுதலாக அமையலாம்.

ரதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாக் கோளை ஆராய மற்றுமோர் விண்கலம் தரையிறக்கம்



வானை அளப்போம் கடல் மீனை அளப்போம்...
சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்..."

என்று மகாகவி பாரதியார் பாடினார்.

பாரதியாரின் கனவை அமெரிக்க வானியலாளர்கள்தான் பேரளவு நினைவாக்கி வருகிறார்கள். இன்று விண்வெளி ஆராய்ச்சியில் அமெரிக்கா கொடி கட்டிப் பறக்கிறது.

விண்வெளி ஆராய்ச்சிக்குப் பொறுப்பான நாசா இந்த ஆண்டு (2018) தனது அறுபதாவது பிறந்த நாளைக் கொண்டாடியது.

அமெரிக்காவில் நாசா என்ற சொல் ஒரு வீட்டுச் சொல். அமெரிக்க நாட்டின் குடிமகன் ஒவ்வொருவரையும் பெருமிதம் அடைய வைக்கும் சொல்.

விண்வெளி ஆராய்ச்சியில் முன்னணியில் இருக்கும் நாசா அறுபதுகளில் இருந்து இன்றுவரை நிலா, செவ்வாய், சனிக் கோளின் ரித்ரான் (Titan) என ஞாயிறு குடும்பத்தில் இருக்கும் எல்லாக் கோள்களுக்கும் விண்கலங்களை அனுப்பியிருக்கிறது.

2030 ஆண்டளவில் அல்லது 2040 முற்பகுதியில் செவ்வாயில் மனிதர்களை இறக்க இருக்கிறது. இதற்கான செலவு $450 பில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இன்று நாசா எதற்கெல்லாம் பணம் செலவிட இருக்கிறது? மிகவும் ஆற்றல் வாய்ந்த (1) விண்வெளி விண்கலம் (2) யேம்ஸ் வெப் வான்வெளி (James Webb Space Telescope) தொலைநோக்கி.

1969 இல் அமெரிக்கா நிலாவுக்கு மனிதனை அனுப்பிய காலத்தில் தனது மொத்த வரவு — செலவு அறிக்கையில் 4.5 விழுக்காட்டை நாசாவுக்கு ஒதுக்கியிருந்தது. இப்போது அது 0.5 விழுக்காடாகக் குறைந்துவிட்டது.

இருந்தும் உலகில் வேறெந்த நாட்டையும் விட அமெரிக்கா விண்வெளி ஆராய்ச்சிக்குக் கோடிக்கணக்கான பணத்தைச் செலவழிக்கிறது. இந்த ஆண்டு (2018) மட்டும் நாசா $19.1 பில்லியன் (ஒரு பில்லியன் 100 கோடி) செலவழித்துள்ளது. அடுத்த ஆண்டுக்கு $21.546 பில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவை அடுத்து சீனா விண்வெளி ஆராய்ச்சிக்கு $6,111 மில்லியன், உருசியா $5,265 மில்லியன், யப்பான் $3,597 மில்லியன், பிரான்ஸ் $2,713 மில்லியன், ஜெர்மனி $1, 687 மில்லியன், இத்தாலி $1,223 மில்லியன், இந்தியா $1,159 மில்லியன், கனடா $474 மில்லியன், ஐக்கிய இராச்சியம் $367 மில்லியன் செலவழிக்கின்றன.

வியாழ கோள்

நாசா, ஒகஸ்ட் 05, 2011 அன்று வியாழகோளை ஆய்வு செய்ய புளோரிடா மாநிலத்தில் உள்ள கேப் கார்னிவல் விமானப்படை ஏவுதளத்தில் (CapeCanaveral Air Force Station) இருந்து 'யூனோ' என்ற ஆளில்லா விண்கலத்தை விண்ணில் ஏவியது. இதற்கான செலவு $110 கோடி. நன்கு திட்டமிட்டு 5 ஆண்டுகளுக்கு முன் ஏவப்பட்ட யூனோ விண்கலம் 170 கோடி மைல்கள் (270 கோடி கிமீ) பயணம் செய்து வெற்றிகரமாக வியாழ கோளின் சுற்றுவட்டப் பாதைக்குள் நுழைந்து அதனைச் சுற்றிவரத் தொடங்கியது. அது வியாழ கோளினது தோற்றம், பரிணாம வளர்ச்சி, காந்தவயல், தண்ணீர், வழிமண்டலம் போன்றவற்றை ஆய்வு செய்தது. இதிகாசங்களின்படி யூனோ உரோமர்களது தேவி ஆவாள். சனியின் மகளாவாள். வியாழனின் மனைவி ஆவாள்.

ஞாயிறிலிருந்து 5 வது இடத்தில் ஒள்ள வியாழன் (Jupiter) ஞாயிறு மண்டலத்திலேயே மிகப்பெரிய கோள் ஆகும். ஞாயிறு மண்டலத்தின் உட்கோள்களான புதன், வெள்ளி, புவி, செவ்வாய் ஆகிய பாறைக் கோள்களைப் போன்றில்லாது, புறக்கோள்களில் ஒன்றான வியாழன் ஞாயிறைப் போல் வாயுக்கள் திரண்ட கோளமாகும்.

சூடான பாறையும், திரவ உலோகம் சிறிதளவு உட்கரு கொண்டிருந்தாலும் மேல்தளத்தில் திரட்சியான திடப்பொருள் எதுவும் வியாழனில் இல்லாமை குறிப்பிடத்தக்கது.

பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்ள 24 மணி நேரமாகும் போது, மிகப்பெரிய வடிவம் கொண்ட வியாழன் 9 மணி 50 நிமிடத்தில், அதாவது வினாடிக்கு 8 மைல் வேகத்தில் வெகு விரைவாகத் தன்னைத்தானே சுற்றி விடுகிறது.

வியாழன் தனது சுற்றுப்பாதையில் சுமார் 484 மில்லியன் மைல் தொலைவில், ஞாயிறை 12 பூகோள ஆண்டுகளுக்கு ஒருமுறை சுற்றி வருகிறது. புவிக்கும் ஞாயிறுக்கும் இடையில் உள்ள தொலைவை விட இது ஐந்து மடங்கு கூடியது ஆகும். அதன் விட்டம் 88,846 மைல்களாகும். ஈர்ப்பு சக்தி புவியை விட இரண்டரை மடங்காகும்.

யூனோ அமெரிக்க நேரப்படி, 04—07—2016 இரவு 11.53 மணியளவில் வியாழனுக்குள் நுழைந்த சாதனையை நாசா வானியலாளர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

செவ்வாய்க் கோள்

வியாழ கோளை ஆராய்வதற்கு ஆளில்லாத விண்கலத்தை அனுப்பிய நாசா இரண்டு ஆண்டுகள் கழித்து 'இன்சையிட்' (InSight) என்ற விண்கலத்தை செவ்வாய்க் க கோள் நோக்கிக் கடந்த மே 05 ஆம் நாள் கலிபோனியாவில் உள்ள வன்டன்பேர்க் விமான தளத்தில் (Vandenberg Air Force Base in California May 5) இருந்து அனுப்பியது. அது ஏழுமாதம் கழித்துச் செவ்வாய்க் கோளில் தரை இறங்கியுள்ளது. தரையிறங்கிய இடம் Elysium Planitia என்று அழைக்கப்படுகிறது. இந்த விண்கலம் சுமார் 485 மில்லியன் கிமீ தூரத்தைக் கடந்து செவ்வாய்க் கோளின் சுற்றுவட்டப்பாதைக்குள் முதலில் பயணித்துப் பின்னர் அதன் வேகம் குறைக்கப்பட்டு வான்குடை மூலம் தரையிறங்கியது.

செவ்வாயின் விட்டம் புவியின் விட்டத்தின் அரைப்பங்கு அளவு கொண்டது. இதன் அடர்த்தி புவியைக் காட்டிலும் குறைவானது. செவ்வாய் புவியின் கனவளவின் 15% க்குச் சமமான கனவளவையும், புவியின் திணிவின் 11%க்குச் சமமான திணிவையும் கொண்டது. இதன் மேற்பரப்பின் பரப்பளவு, புவியின் உலர் நிலப்பகுதியின் பரப்பளவைக் காட்டிலும் சற்றே குறைவானது. செவ்வாய் புதன் கோளிலும் பெரியதும் திணிவு கூடியதும் ஆகும். ஆனால், புதன், செவ்வாயிலும் கூடிய அடர்த்தி கொண்டது. செவ்வாய் ஞாயிறில் இருந்து நான்காவது (புவி மூன்றாவது) இடத்தில் காணப்படுகிறது.

முதன் முதலில் வரலாற்றுக் குறிப்பில் பதிவு செய்யப்பட்ட காலம் கிமு 2 ஆம் நூற்றாண்டு. பதிவு செய்தவர்கள் எகிப்திய வானியல் அறிஞர்கள்.

செவ்வாய் ஞாயிறை ஒருமுறை சுற்றிவர எடுத்துக்கொள்ளும் காலம் 779.96 நாட்கள். தன்னைத்தானே சுற்ற எடுக்கும் காலம் 24 மணி 37 மணித்துளிகள். ஆகவே புவியைப் போலவே அங்கும் இரவு பகல் மாறிமாறி உண்டாகும். புவியின் நிலப்பகுதியும் (Land mass) செவ்வாய்க் கோளின் நிலப்பகுதியும் கிட்டத்தட்ட சமம் ஆகும். அதன் ஆரம் 3,390 கிமீ. ஞாயிறு குடும்பத்தில் இருக்கும் மலைகளிலேயே மிக உயரமான மலை செவ்வாய்க் கோளில்தான் உள்ளது. அதன் பெயர் ஒலம்பஸ் மோன்ஸ் (Olympus Mons), உயரம் 21 கிமீ. புவிக்கும் செவ்வாய்க் கோளுக்கும் இடையில் உள்ள தொலைவு 54.6 மில்லியன் கிமீ.

செவ்வாய் ஞாயிறு குடும்பத்தில் மாபெரும் தூசி புயல்களை உள்ளடக்கியது. உரோமானியர் அதன் சிவப்பு நிறம் காரணமாக தங்களது போர்க் கடவுளின் பெயரைச் சூட்டினார்கள்.

இதற்கு முன்னர் உள்நோக்கு உட்பட செவ்வாய்க் கோளை ஆராய நாசா ஏழு முறை வெற்றிகரமாக விண்கலங்களை இறக்கியுள்ளது. ஒருமுறை மட்டும் அது தோல்வியில் முடிந்தது. கியூரியோசிட்டி என்ற விண்கலத்தை Cape Canaveral என்ற இடத்தில் இருந்து நொவெம்பர் 26, 2011 இல் அனுப்பி வைத்தது. அந்த விண்கலம் ஒகஸ்ட் 6, 2012 இல் Aeolis Palus in Gale Crater என்ற இடத்தில் தரையிறங்கியது. எனவே செவ்வாயில் தரையிறக்கப்பட்ட உள்நோக்கு இரண்டாவது விண்கலமாகும். செவ்வாய்க் கோள் குறித்த ஆராய்ச்சியை நாசா அமைப்பு 1976 ஆம் ஆண்டு முதல் மேற்கொண்டு வருகிறது.

இந்த முறையும் நாசா வானியலாளர்கள் தூரநோக்கு வெற்றிகரமாகத் தரை இறங்கியதை அறிந்து ஒருவரையொருவர் கட்டிப்பிடித்து அக மகிழ்ந்தனர்.

விண்ணில் இருந்து தனது வேகத்தைக் குறைத்து வான்குடை வழியாக செவ்வாயின் தரையில் இறங்க 7 மணித்துளிகள் பிடித்தது. இந்த ஏழு மணித்துளி நேரத்தின் போது நாசா வானியலாளர்கள் பல்லைக்கடித்த வண்ணம் பதட்டத்தில் இருந்தனர்.

இந்த உள்நோக்கு விண்கலத்தை உருவாக்க ஏற்பட்ட செலவு $850 மில்லியன் ஆகும்.

செவ்வாய்க் கோளில் உண்டாகும் அதிர்வுகள், வெப்பப் பரிமாற்றங்கள் மற்றும் நிலப்பரப்பின் அமைப்பு போன்றவற்றை ஆராயும் பொருட்டு இந்த விண்வெளி ஓடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் உள்ளதா? என்பதற்கு விரைவில் விடை கிடைக்கும் என நாசா நம்புகிறது. உள்நோக்கு தனது 6அடி (1.6 மீட்டர்) நீளமுள்ள எந்திரக் கைகளால் செவ்வாய்த் தரையில் 16 அடி (5 மீட்டர்) ஆழமான குழியைத் தோண்டி அதனைப் பகுப்பாய்வு செய்ய இருக்கிறது.

தரையிறங்கிய சில மணித்துளிகளில் இன்சைட் விண்கலம் முதல் படத்தை நாசா கட்டுப்பாட்டு அறைக்க்கு அனுப்பி வைத்தது. ஞாயிறு வெப்பத்தில் இயங்கும் இந்த விண்கலம் முழுமையாகத் தொழிற்பட 3 —4 மாதங்கள் ஆகும். அது தனது ஆராய்சியை நொவெம்பர் 24, 2020 வரை நடத்த இருக்கிறது.

உள்நோக்கு செவ்வாயில் தரையிறங்கும் நேரத்தில் முதல் புகைப்படத்தை எடுத்தது. இந்தப் படம் அதன் கீழ் பகுதியில் இருக்கும் புகைப்படக் கருவி மூலம் எடுக்கப்பட்டது. செவ்வாயில் இன்சைட் இறங்கும் போது எப்படிப் புழுதி பறக்கும், எப்படிக் காற்று வீசும், மண் எப்படி நகர்ந்து செல்லும் என்பன இந்தப் புகைப்படம் மூலம் தெளிவாகியுள்ளது.

உள்நோக்கு விண்கலம் செவ்வாயில் தரையிறங்கியது பற்றிய செய்திகளை ஒரு சிலதமிழ்ஊடகங்களேவெளியிட்டுள்ளன. செய்தியின் பின்னணியில் ஆய்வரங்கம் நடத்துபவர்களும் இந்த தரையிறக்கம் பற்றி மூச்சே விடவில்லை. இதற்குத் தமிழர்களுக்கு அறிவியல் மனப்பான்மை இல்லாது இருப்பதே காரணமாகும். செவ்வாய்க் கோள் பற்றித் தெரிந்து வைத்திருப்பது சாதகத்தில் ஏழில் செவ்வாய் என்றால் பெண்ணுக்குத் தோசம், திருமணம் ஆகாது என்ற கண்டு பிடிப்பு மட்டுந்தான்.

தமிழர்களின் அறிவியல் பற்றிக் கேட்டால் 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் கரிகால் சோழன் கட்டிய கல்லணை, இராசராசன் கற்களே அரிதான காவிரி ஆற்றங்கரைகளில் 66 மீ உயரம், 15 தளங்கள் கொண்ட தஞ்சாவூர் பெரிய கோயில், கொல்காப்பியம், திருக்குறள், இவற்றைத்தான் எடுத்துக் காட்டுகிறார்கள்.

நக்கீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபை மீறிய ஒளி

# ரூடோ



கி.மு 411, ஒரு நாள் காலை புத்தர் உலகைக் காண ஊர்வலம் செல்கின்றார். சித்தார்த்தா புத்தராகின்றார். மீண்டும் ஒரு புத்தர் புரட்டாதி 13, 1960ல் உலகைக் காணும் நோக்குடன் தனது நண்பனுடன் சீனா சென்றார். அங்கு மட்டுமல்ல ஐரோப்பா முழுவதும் மோட்டார் சைக்கிளில் சுற்றினார். ஆபிரிக்காவின் புழுதி படந்த வீதிகளில் உலகைக் கண்டார். சன நெருக்கடி அதிகமான இந்திய புகையிரத வண்டிகளில் பயணம் செய்து இந்தியாவின் அழகையும் வறுமையையும் திறமையையும் கண்டார். இவரை யார் என்பது கூட பலருக்குத் தெரியாது. யாரோ ஒரு வெள்ளை இன இளைஞன். மக்களில் ஒருவனாக மக்கள் வாழ்க்கையின் பல பரிமாணங்களை நேரில் பார்த்தார். அவர் வேறு யாருமல்ல பின்னாற்களில் உலகின் மிக முக்கிய தலைவர்களில் ஒருவராக விளங்கிய பியரி எலியட் ரூடோ. கனடாவின் அந்தஸ்தை உலகளவில் உயர்த்தியவர். தெளிவான சிந்தனைவாதி. துணிச்சலானவர். உலகின் மிக முக்கிய தலைவர்களெல்லாம் இவரைக் கண்டு பயந்தனர். அண்டை நாடாகிய அமெரிக்காவின் அதிபர் நிக்சன் இவரை தூசன வார்த்தைகளால் திட்டியுள்ளார். அசைக்க முடியாது எனப் பெயர் பெற்ற அமெரிக்காவை ஒரு தடவையல்ல, பல தடவைகள் அசைத்துள்ளார். மேற்கு நாடுகள் இடது சாரி நாடுகளுக்கு எதிராக செயல்பட்டபோது துணிச்சலாக சோவியத் யூனியன், கியுபா, சீனா ஆகிய மூன்று இடது சாரி நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தார். அவரது பல்வேறு பரிமாணங்களை பார்ப்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

**ஆரம்ப வரலாறு**

ரூடோவின் மூதாதையர் 16ம் நுற்றாண்டில்(1641) பிரான்சிலிருந்து கியுபெக்கிற்கு குடிபெயர்ந்தனர். Etienne Truteau / Trudeau முதலில் கனடாவிற்கு குடிபெயர்ந்த கொள்ளு கொள்ளு தாத்தா. வீடுகள் கட்டுவது இவர்களது குடும்ப வணிகம். இவரது தாயார் கிரேஸ் எலியட் பிரென்ச்—ஸ்கொட்டிஸ் வழிவந்தவர். தந்தையார் பல்வேறு வணிக நிறுவனங்களை நடத்தி வந்தார். தந்தையார் சார்ல்ஸ் ரூடோவின் பெற்றோல் வியாபார நிலையங்களை மிகப் பெரிய இம்பீரியல் ஒயில் நிறுவனத்திற்கு விற்றார். செல்வந்தராக வாழ்ந்து வந்தனர். ரூடோ தனது ஆரம்ப, உயர் கல்வியை பிரபல கத்தோலிக்க தனியார் பாடசாலையான Collège Jean-de-Brébeuf பெற்றார். இக் காலகட்டத்தில் இவரது தந்தையார் இறந்துவிட்டார். இது ரூடோவின் குடும்பத்தை உணர்ச்சி பூர்வமாக பெரிதும் பாதித்தது. ரூடோ இறுதி வரை தனது தாயாருடனும் இளைய சகோதரன் சார்ல்ஸ் யூனியருடனும் சகோதரி சூசெட்டுடனும் மிக நெருக்கமாக இருந்தார். மொன்றியல் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். அதே சமயம் இராணுவ பயிற்சியும் பெற்றார். பின்னர் பொருளாதார அரசியலில் உயர் கல்வியை ஹவாட் பல்கலைக் கழகத்தில் கற்றார். அதன் பின்னர் 1947ல் பிரான்சிலும் பின்னர் சிறிது காலம் மிகப் பிரபல்ய லண்டன் ஸ்கூல் ஒப் எக்கனமிக்ஸிலும் உயர் கல்வி கற்றார். ஹவாட் இவரது சிந்தனையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. குறிப்பாக மார்க்சிய சிந்தனையை இவரது மனதில் விதைத்தது. தொடர்ந்து பிரான்ஸ் இதனை வளர்த்து விட்டது. லண்டன் ஸ்கூல் ஒப் எக்னமிக்ஸில் கலாநிதிப் பட்டத்துக்கான கல்வியை பிரபல்ய பொருளியல் நிபுணர் Harold Laski ன் கீழ் பயின்றார். ஹரோல்ட்டின் கெயின்சின் பொருளாதாரத்தை ஆய்வு செய்தார். இம் முறையானது பொருளதார வீழ்ச்சிக் காலங்களில் தேவைகளுக்கும் உற்பத்திக்குமான உறவை பரிசீலிப்பது. முதலாளித்துவ மட்டியல் கட்டுப்பாட்டுவாதத்தை ஆய்வு செய்யும் முறை எனவும் கூறலாம்.

**அரசியல் வரலாறு**

« The State has no place in the bedrooms of the nation »

இது ரூடோவின் மந்திரம். இதனை இவர் அமைத்த அரசில் தெளிவாகக் காணலாம்.

1949ல் கியுபெக்கில் அஸ்பெஸரஸ் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு வழங்கினார். 1949—1951 கால கட்டத்தில் கனடிய பிரதமர் லுயிஸ் சென் லோறன்ட்டின் பொருளாதார ஆலோசகராகவும் வேலை செய்தார். இது இவருக்கு பின்னாளில் அரசியலில் ஈடுபட உதவி செய்தது என தனது சுயசரிதையில் கூறியுள்ளார். ரூடோ கியுபெக் பல்கலைக்கழகமொன்றில் விரிவுரையாற்ற விரும்பினார். ஆனால் அப்போதைய கியுபெக் முதலமைச்சர் Maurice Duplessis ரூடோவை கறுப்புப் பட்டியலில் இட்டமையினால் இவரால் வேலை பெறமுடியாமல் போய்விட்டது. குயின்ஸ் பல்கலைக் கழகம் மூன்றுக்கு மேற்பட்ட தடவைகள் கல்வி கற்பிக்க சந்தா;ப்பம் வழங்கியும் ரூடோ நிராகரித்து விட்டார். அவரது விருப்பம் கியுபெக்கில் கல்வி கற்பிப்பதாகவேயிருந்தது. 1950களில் இவர் மொஸ்கோவிற்கு சென்ற காரணத்தைக் காட்டி அமெரிக்காவினுள் நுழையவும் தடைசெய்யப்பட்டது. ஆனால் பின்னர் இத்தடை விலக்கப்பட்டது. மொன்றியல் பல்கலைக் கழகத்தில் 1961—1965 காலப் பகுதியில் இணை சட்டப்பேராசிரியராக கடமையாற்றினார். ரூடோவிற்கு ஆரம்பத்திலிருந்தே என்.டி.பிக் கட்சியின் மூல அமைப்புக்களுடன் நெருக்கமான உறவு இருந்தது. 1960களில் சோசலிசக் கட்சிக்களை விமர்சித்தார். லிபரல் கட்சியுடன் இணையுமாறு கோரிக்கை விடுத்தார். 1961 ஆவணியில் என்.டி.பிக் கட்சி உதயமானது. அக் கட்சியில் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் கிடைத்தும் லிபரல் கட்சியையே தேர்ந்தெடுத்தார். என்.டி.பிக் கட்சிக்கு அரசமைக்கும் ஆதரவு கிடைக்காது எனக் கருதினார். லெஸ்ரா; பியா;சனின் நீண்ட தூர மிசைல்(CIM 10 Bomarc) மற்றும் அணு ஆயுதக் கொள்கைகளுக்கு ஆதரவான கருத்துக்கு கண்டனம் தெரிவித்தார். ஆனாலும் 1965ல் ரூடோ தனது நெருங்கிய நண்பர்கள் Gérard Pelletier, Jean Marchand ஆகியோருடன் இணைந்து லிபரல் கட்சியில் வேட்பாளராகமொன்றயில் நகர மவுன்ட் றோயல் தொகுதியில் போட்டியிட்டார். மூவரும் தேர்தலில் வெற்றி பெற்றனர். பியர்சனின் நிர்வாகத்தில் பாராளுமன்ற பிரதம செயலாளராக கடமையேற்றார். பின்னர் நீதியமைச்சராக பதவியேற்றார்.

1967ல் பியேர்சன் பிரதமர் பதவியிலிருந்து விலகுவதாக தெரிவித்தவுடன் லிபரல் கட்சியின் தலைவருக்கான போட்டி 1968 சித்திரை ஆறாம் நாள் நடைபெற்றது. ரூடோ முண்ணனி வேட்பாளராக இருந்த போதும் மிகக் கடுமையான போட்டியும் ரூடோ மீது கடுமையான விமர்சனங்களும் எழுந்தன. இறுதியாக நான்காவது சுற்றில் 50 வீதத்துக்கு மேலான வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார். இவருடன் நான்கு சுற்றிலும் இறுதிவரை போட்டியிட்டவர் பின்னாற்களில் ரூடோவின் இராஜினாமாவின் பின்னர் பிரதமாரக இருந்த ரேர்னர் ஆவார். ரூடோவுடன் போட்டியிட்ட முக்கிய வேட்பாளர்களுள் ஒருவர் முன்னால் கனடிய பிரதமர் போல் மாட்டினின் தந்தை மார்ட்டின் சீனியர். சித்திரை 20ல் பிரதமராக பதவியேற்றார். ஆனியில் தேர்தல்களை நடத்தினார். 264 தொகுதிகளுக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் 154 தொகுதிகளை லிபரல் கட்சி கைப்பற்றியது. 1972ல் நடைபெற்ற தேர்தலில் இரு தொகுதிகள் அதிகமாகப் பெற்று சிறுபான்மை அரசை அமைத்தார். என.டி.பி ஆதரவுடன் செயல்பட்ட இவ்வரசு மீண்டும் தேர்தலை 1974ல் சந்தித்தது. இம் முறை 141 தொகுதிகளில் வெற்றி பெற்று பெரும்பான்மை அரசையமைத்தது. 1979ல் நடைபெற்ற தேர்தலில் ஜோ கிளார்க் தலைமையிலான பழமைவாத கொன்சவேற்றிவ் கட்சி சிறுபான்மையரசை அமைத்தது. 1980 மாசியில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் லிபரல் 147 தொகுதிகளில் வெற்றி பெற்று மீண்டும் பெரும்பான்மையரசை அமைத்தது. 1979 தேர்தல் முடிந்த பின்னர் ரூடோ தனகு கட்சித் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்தார். புதிய தலைவர் தேர்தல் நடைபெற முன்னர் ஜோ கிளார்க் அரசு வீழ்ச்சியடைந்ததையடுத்து லிபரல் கட்சி ரூடோவை தொடர்ந்து தலைவராக இருக்குமாறு வற்புறுத்தியது. அதன் விளைவு 1980ல் லிபரல் மீண்டும் பெரும்பான்மை அரசு அமைத்தது.

**அரசும் மதமும்**

இன்று உலகின் அரசியல் நெருக்கடிகளுக்கு மதம் பிரதான காரணமாக உள்ளது. மத்திய கிழக்கு நாடுகள், இந்தியா, இஸ்ரேல் போன்ற பல நாடுகளில் மதம் அரசில் ஆட்சி செய்கின்றது. அமெரிக்கா போன்ற மேற்குலக புத்திஜீவி நாடுகளில் கூட மதம் சிறியளவிலாவது அரசில் ஆள்கின்றது. இதனை உணா;ந்த ரூடோ ஆரம்பத்திலிருந்தே மதம் அரசினுள் ஆட்சி செய்வதை மறுத்தார்.

"ரூடோ தேவாலயத்துக்கு செல்வார், ஒவ்வொரு நாளும் வழிபடுவார். ஆனால் தனது மத நம்பிக்கைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசு"க்குள் கொண்டு வரவில்லை. கத்தோலிக்க மத நம்பிக்கைகளுக்கு எதிரான பல செயல்களை செய்தார். ஒரு பாலியல் உறவை ஏற்றுக் கொண்டார். கருக்கலைப்பை ஏற்றுக் கொண்டார். இவற்றை மதக் கருத்துக்களாக சிறார்களுக்கு கற்பிப்பதனையும் கண்டித்தார்" என்கின்றார் முன்னால் லவால் பல்கலைக் கழக பேராசிரியா; மக்ஸ் நெமி. கத்தோலிக்க மத அரசியல் தலைவர்கள் ஜோன் கென்னடி, முன்னால் பிரென்ச் பிரதமர் சார்ல்ஸ் டி கலி போன்றோர் அரசுக்கும் மதத்துக்கும் இடையில் திண்டாடினார்கள். அரசியல், கல்வி, ஒழுக்கம் ஆகியவற்றில் மத சார்பு நீக்கம் என்பது பற்றி 60களில் உலகமே ஒரு குழப்பமான கருத்தையே கொண்டிருந்தது. 1960கள் வரை கியுபெக்கில் மத நிறுவனங்கள் ஆட்சியின் கருத்தை தீர்மானித்தன. குறிப்பாக கல்வி, சுகாதாரம், சமூக சேவைகள் போன்றவற்றை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தன. சுமார் 45 ஆயிரம் மத குருமார்கள், சகோதரிகள் இதனை நிர்வகித்தனர். ரூடோ இது பற்றி கனடியன் ஜேர்னல் ஒவ் எக்கனமிக் அன்ட் பொலிற்றக்கல் சயன்ஸ் என்ற இதழுக்கு 1958ல் கியுபெக்கில் ஜனநாயகத்துக்குள்ள தடைகள் என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் கியுபெக்கில் தேசியவாதமும் மதமுமே தடைக்கற்கள் எனக் குறிப்பிடுகின்றார். இவர் பின்வரும் அட்டவணையில் விளக்கப்படுத்தினார்.

**அட்டவணை**

| பொதுவானது | தனிப்பட்டது |
|---|---|
| அரசியல் மற்றும் பொருளாதார சமூகம் | குடும்பம், சமூகக் குழு, மதம் |
| காரணங்கள் | |
| பல் கலாச்சார சூழல் | இனக் குழக்களுக்கான தேசிய அடையாளாம் தனிப்பட்டது |
| சர்வதேச விழுமியம் அகச்செயல்வாதம் மற்றும் பயன்பாட்டுவாதம் | தனிப்பட்ட ஒரு மதம், இனக் குழவின் கருத்தியல் |
| பகுத்தறிவால் தீர்மானிக்கப்படுவது | உணர்ச்சிமிகு முடிவுகள் |
| விஞ்ஞான முடிவுகள் கருத்திற் கொள்ளப்படும் | கட்டுப்படுத்தப்பட்டிய விழுமியங்களால் தீர்மானிக்கப்படுவது |
| பன்மைத்துவம், மாறுபட்டவை, வெளிப்படையானவை சிறப்பியல்பு பண்புகளாக அமையும் | மாறுதலற்ற இயல்பு, பகுத்தறிவற்ற பிற்போக்கு, அந்நிய அச்சம், குழுக்களிக்கிடையேயான கட்டாய ஒற்றுமை போன்;றவை பண்புகளாக அமையும். |

மேற்கு நாடுகளில் விஞ்ஞான வளர்ச்சி மதத்தின் முக்கியத்துவத்தை குறைத்துவிட்டது. அத்துடன் மதத்துக்கு இருந்த மக்கள் பலமும் வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கின்றது. மதம் என்பது ஒவ்வொருவது தனிப்பட்ட தேர்வு என்பது பொதுவான நிலைப்பாடாக இருந்தது.

1967 மார்கழியில் நீத அமைச்சராக பதவியேற்ற பின்னர் கிரிமினல் சட்டங்களை நவீனமயப்படுத்தினார். அரசு ஒழுக்கத் தத்துவத்தை ஒழுங்குபடுத்துவதனை குறைக்கவேண்டும் எனக் கருதினார். பாவத்தையும் குற்றத்தையும் பிரித்துப் பார்க்க வேண்டும் என்பதனை வரையறையாக்கினார். சுமார் நூறு வருடங்கள் பழமையான பல சட்டங்களை சீர்திருத்தினார். ஒரு பாலியல் உறவுக்கான தண்டனைகளை மறுசீரமைத்தார். கருக்கலைப்புக்கு எதிரான சட்டத்தை நீக்கினார். சட்டம் சி—187 மூலம் விவாகரத்தின் மீதான கட்டுப்பாட்டுக்களை தளர்த்தினார்.

1981ல் ஒட்டாவாற்கு விஜயம் செய்த றொனால்ட் றீகன்" அராபியா;கள் கடவுளை நம்புகின்றார்கள், யூதர்கள் கடவுளை நம்புகின்றார்கள், நாங்களும் கடவுளை நம்புகின்றோம். ஏன் அனைவரும் ஒன்றிணைந்து சோவியத் யூனியனுக்கு எதிராக போரிடக்கூடாது?" எனக் கேட்டார். ரூடோ அப்பொழுது சோவியத் யூனியனின் நண்பன். புன்னகையுடன் றீகனுக்கு விடைகொடுத்தார்.

முன்னால் ஒன்ராரியோ முதலமைச்சரும், மத்திய லிபரல் கட்சியின் இடைக்காலத் தலைவராக இருந்தவரும் பொருளாதார கலாநிதியுமான பொப் ரே தனது வட்ஸ் கப்பின்ட் ரு பொலிற்றிக்ஸ் என்ற நுலீலில் ரூடோ, பிரான்க் ஸ்கொட், பொரா லஸ்கின் ஆகிய மூன்று நண்பர்களும் சட்டவியல் பேராசிரியர்களும் பிரித்தானியச் சட்டங்கள் கனடிய சட்டங்கள் மீது செலுத்திய ஆதிக்கத்தை தகர்க்க விரும்பினார்கள்.

பொப் ரே தனது நூலில்"Like Churchill in 1940, Mr. Trudeau was the right man for the right issue" எனக் கூறியுள்ளார்.

**ரூடோ - அமெரிக்கா- சோவியத் ருசியா**

ரூடோ பிரதமராக இருந்த காலங்களில் அமெரிக்காவிற்கும் அவருக்குமான உறவு சிக்கலாகவேயிருந்தது. 1973ல் வியட்நாமுடனான சமாதானக் குழுவிற்கு கனடாவின் பெயரை அப்போதைய அமெரிக்க அமைச்சர் ஹென்றி கீசிங்கர் முன்மொழிந்திருந்தார். ஆனால் ரூடோ அக் குழுவால் எதுவும் செய்ய முடியாது எனக் கருதியதால் கனடா தொடர்ந்து அக்குழுவில் இடம்பெறவில்லை. அமெரிக்க அதிபர் நிக்சன் ரூடோவை "asshole எனத் திட்டினார். பதிலளித்த ரூடோ நல்ல மனிதர்களால் இதனை விட மோசமாக திட்டு வாங்கியுள்ளேன் என்றார். ( I've been called worse things by better people") (1) நிக்சன் அமெரிக்க இறக்குமதிகளுக்கு பத்து வீத உபரிவரியிட்டபோது கனடாவின் அமெரிக்காவிற்கான ஏற்றுமதிகள் பாதிப்புக்குள்ளானது. ரூடோ கனடிய பொருளாதாரம் அமெரிக்காவில் தங்கியிருக்கக் கூடாது எனக் கருதினார். நிக்சன் 10வீத உபரிவரி உலக நாடுகளுடன் கதைத்த போதும் கனடாவுடன் உரையாடவில்லை. ஒரு தடவை ஹென்றி கீசிங்கரிடம் ரூடோ பிரதமராக இருக்கும் வரை நான் கனடா செல்லமாட்டேன் எனக் கூறியுள்ளார். ஆனால் சித்திரை 1972ல் ஒட்டாவாவிற்கு விஜயம் செய்தார்.

நிக்சன் மிக மோசமான வார்த்தைகளால் ரூடோவை திட்டியுள்ளார். அமெரிக்கா, வியட்நாமுடன் போரிட்டதை ஆதரிக்கவில்லை. கனடிய கடல் எல்லையை அமெரிக்கா மீறுவதாக ரூடோ உறுதி செய்து கொண்டார். ரூடோ பாராளுமன்றத்தில் ஆக்டிக் நீர் மாசுபடுதல் சட்டத்தை அமுல்படுத்தினார். இதனை அமெரிக்கா விரும்பவில்லை. நிக்சனின் அமைச்சராகவிருந்த வில்லியம் பி. றோஜர்ஸிடம் தனது எதிர்ப்பை கனடா தெரிவித்திருந்தது. இறுதியில் கனடாவின் சட்டத்தை பின்பற்றி ஐநா சட்டமொன்றை உருவாக்கியது.

நிக்சன் சீனாவுடனான உறவை மேற்கொண்டபோதும் ருசியாவுடன் ஆயுத கட்டுப்பாட்டு உடன்பாட்டுக்களை மேற்கொண்டபோதும் ரூடோ நிக்சனை பாராட்டினார்.

1971ல் பிரதமராக ருசியாவிற்கு விஜயம் செய்தார். அங்கு அவர் அமெரிக்க அரசியல்வாதிகளுக்கு பிரச்சினைகளை தீர்க்கும் எண்ணம் இல்லை என்றார். சைபீரியாவில் அமைந்துள்ள நோர்லிசிக் (Norilsk) நகரைப் போன்று கனடாவில் ஒரு நகரமும் இல்லை என்றார். இது ஒரு தொழிற்சாலைகள் அடங்கிய நகரம். இதனை கைதிகள்தான் உருவாக்கினார்கள் என்பதனை அப்போது ரூடோ அறிந்திருக்கவில்லை.

ருசிய பயணத்தைத் தொடர்ந்து நேட்டோவில் கனடாவின் பங்களிப்பைக் குறைத்தார். அமெரிக்காவின் எழுச்சியானது கனடாவிற்கு பொருளாதார, கலாச்சார, இராணவ பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கருத்துத் தெரிவித்தார்(3).

1983ல் கொரிய பயணிகள் விமானம் 369 பயணிகளுடன் பறந்த போது பயணிகள் விமானம் எனத் தெரிந்தும் சோவியத் சுட்டு வீழத்தியது. இவ் விடயம் பற்றிய பாராளுமன்ற உரையாடலில் "சோவியத்தை கொலைகாரர்கள் என்ற பார்வையில் பார்க்காமல் அவர்களையும் மனிதர்களாக பார்க்க வேண்டும்" என்றார்.

சோவியத் யூனியனை நேசித்திருந்தாலும் அமெரிக்காவும் சோவியத்தும் இன்றைய உலகின் கழுகுகள் என விமர்சிக்கவும் ரூடோ தவறவில்லை. இந்தத் துணிச்சல் இவரை உலகரங்கில் ஒரு சிறந்த தலைவராக உயர்த்தியது.

**சீனா-கியுபா**

சீனாவிற்கு இவர் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட போது சீனா இவருக்கு பெருத்த வரவேற்பை வழங்கியது. மாவோவின் கொள்கைகளை கனடிய பாராளுமன்றத்தில் ஆதரித்து பேசினார். சீனாவை வெளியிலிருந்து அறிய முடியாது என்று வாதிட்டார்.

தை 26, 1976ல் கியுபாவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார். கியுபாவிற்கு சென்ற முதல் கனடிய பிரதமர், முதல் நேட்டோத் தலைவர் ரூடோ ஆவார். சுமார் இரண்டரை லட்சம் மக்கள் வீதிகளில் வரிசையில் நின்று ரூடோவை வரவேற்றனர். கஸ்ரோ ரூடோவை ஒரு நல்ல வழிகாட்டியாகவே கருதினார். ரூடோ இறந்த போது கஸ்ரோ கியுபாவில் மூன்று நாட்கள் துக்கம் அனுஸ்டித்தனர். அரச அலுவலகங்களில் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டது.

**ஒக்ரோபர் கிறைசஸ் [ஐப்பசி நெருக்கடி நிலை]**

ரூடோ பிரதமராக இருந்த காலங்களில் நடைபெற்ற மிக முக்கிய அரசியல் புரட்சி 1970 ஐப்பசியில் இடம்பெற்றது. ஐப்பசி 26ந் திகதி வோர் மெசிசேர்ஸ் அக்ட்டின் (War Measures Act) நடைமுறைப்படுத்தப்பட்டது. கனடிய சரித்திரத்தில் இச் சட்டம் இன்று வரை மூன்று முறையே நடைமுறைப்படுத்தப்பட்டது. முதலாவது முறை முதலாம் உலகப்போர், இரண்டாம் முறை இரண்டாம் உலகப் போர். மூன்றாவது ஐப்பசி நெருக்கடி நிலை ஆகியவற்றில் மட்டுமே பிரயோகிக்கப்பட்டது. ஐப்பசி நெருக்கடியின் போது 497 பேர் எந்தவித முன்னெச்சரிக்கையோ விசாரணையோயின்றி கைது செய்யப்பட்டனர். பின்னர் 67 பேர் விடுவிக்கப்பட்டனர்.

1963ல் ஆரம்பிக்கப்பட்ட கியுபெக் பிரிவினைவாத ஆயுத அமைப்பு Front de libération du Québec (FLQ).1963லிருந்து 1970 வரை 67 குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டனர். குறிப்பாக ஆங்கில மொழி பேசும் கியுபெக் நகரமான வெஸ்ட்மவுண்ட்டில் அதிகளவு தாக்குதல்கள் இடம் பெற்றன. தபால் பெட்டிகளுக்குள் டைனமைட்டை போட்டனர். இவற்றைவிட மொன்றியல் பங்குச் சந்தை, ஆர்சி.எம்.பி அலுவலகம் மொன்றியல் நகரசபை போன்ற இடங்களிலும் குண்டுகள் வெடித்தன. உச்சக் கட்டமாக ஐப்பசி 5, பிரித்தானிய வணிக உயர் அதிகாரி ஜேம்ஸ் குரொசை அவரது வீட்டில் வைத்துக் கடத்தினர். ஐந்து நாட்களின் பின்னர் கியுபெக் உப முதலமைச்சரும் வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர்கள் அமைச்சர் பியரி லபொட்டைக் (Pierre Laporte) அவரது வீட்டின் பின் முற்றத்தில்வைத்துக் கடத்தினர். 102 வருடங்களின் பின்னர் (Thomas d'Arcy McGee) கனடாவில் ஒரு அரசியல் கொலை நடைபெற்றது. புரட்டாதி 17ம் நாள் சென் கியுபெட் விமான நிலையத்துக்கருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு காரினுள் லபொட்டின் உடல் கண்டெடுக்கப்பட்டது. கியுபெக் முதலமைச்சர் மத்திய அரசாங்கத்தினை நாடினார். அதன் பின்னர் ரூடோவினான ஊடகவியல் மாநாட்டில் நடைபெற்ற உரையாடலே கீழ்யுள்ளது.

Reporter: "Sir what is it with all these men with guns around here?"

Trudeau: " There's a lot of bleeding hearts around who don't like to see people with helmets and guns. All I can say is 'go ahead and bleed' but it's more important to keep law and order in this society than to be worried about weak-kneed people who don't like the looks of..."

Reporter: "At what cost? How far would you go? To what extent?"

Trudeau: "Well, just watch me."

ஜேம்ஸ் குரொஸ் இரு மாதங்களின் பின்னர் ஐந்து எப்.எல்.கியு உறுப்பினர்களை நாடு கடத்தியதுடன் விடுவிக்கப்பட்டார். நாடு கடத்தியவர்களை கியுபாவே ரூடோவின் வேண்டுகோளுக்கிணங்க ஏற்றுக் கொண்டது.

கியுபெக் பிரிவினைவாத ஆயுதப் புரட்சியை ரூடோவின் அதிரடி நடவடிக்கைகளும் இராஜதந்திரமும் கட்டுக்குள் கொண்டு வந்தது. ரூடோ ஒரு பிரென்ச்ஜ தாய் மொழியாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர். கியுபெக் அவரது தாய்ப் பிரதேசம். ரூடோ ஒரு மார்க்சியவாதியாக இருந்தமையினால்தான் கியுபெக் பிரிவினைவாதத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரமுடிந்தது. அவர் சோவியத் யூனியனிலும், சீனாவிலும் பல இனக் குழுக்கள் ஒன்றாக இருப்பதனையும் அதன் பொருளாதார பலத்தையும் கண்டுள்ளார். கியுபெக் பிரிவினைவாதிகள் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டபோதும் ஜனநாயக வழியில் கியுபெக் பிரிவினைவாதக் கட்சிகள் போராடின. சர்வசன வாக்கெடுப்பு ஒன்றையும் நடத்தினார். முதலாவது வாக்கெடுப்பு 1980ம் ஆண்டு வைகாசி 20ம் நாள் நடைபெற்றது. அப்போதைய கனடிய பிரதமரான ரூடோ கியுபெக் மாநிலத்தைச் சேர்ந்தவர். 60 வீதமான மக்கள் பிரிவினைக்கு எதிராக வாக்களித்தனர். இதுவும் ரூடோவின் காலத்திலேயே நடைபெற்றது. இன்று வரை கியுபெக் பிரிவினைவாதிகளால் வெற்றி பெறமுடியாமல் உள்ளது. எமது தேசியமும் இவ்வாறுதான் அடக்கப்பட்டதா? ஜனநாயக முறை தேசியப் போராட்டங்களும் சக்தியை இழக்கின்றனவே? ஏன்? கியுபெக் போராட்டத்தினூடாக எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் தோல்வியையும், இன்றைய நிலையையும் ஆய்வு செய்ய வேண்டும்.

**முதல் குடிகள்**

கனடாவின் முதல் குடிகளின் "இன்டியன் அக்ட்"ஐ நீக்க வேண்டும். அதற்கான அமைச்சை நீக்க வேண்டும் போன்ற விடயங்கள் ரூடோவினால் முன்வைக்கப்பட்டன. முதல் குடிகள் அவா;கள் வாழும் நிலத்தை அவர்கள் பெயருக்கே மாற்ற வேண்டும். அவர்கள் வாழும் பிரதேச மாநிலம் அவர்கள் நலனை பாதுகாக்க வேண்டும் போன்ற கோரிக்கைகள் அவரால் முன்மொழியப்பட்டன.

ரூடோ முதன் குடிகள் தேசிய நீரோட்டத்தில் கலப்பதன் மூலம் தான் அவர்கள் நலன்கள் பாதுகாக்கப்படும் எனக் கருதினார். அவர்கள் பிரதேசம், தேசியம் என்பன பற்றி ரூடோவிற்கு கவலையில்லை. இன்றும் கூட முதல் குடிகள் மிகவும் மோசமான நிலையில்தான் வாழ்கின்றார்கள். அப்படிப் பார்க்கும் பொழுது ரூடோவின் தூர நலன் பார்வை வித்தியாசமானது. தொடர்ந்து அவர்கள் இதே மாதிரி ஒதுக்கப்பட்ட பிரதேசங்களில் ஒடுக்கப்பட்டவர்களாக வாழப்போகின்றார்களா? அவர்களுக்கான தீர்வு என்ன? என்ற கேள்விகளுக்கு ரூடோவின் பின்னர் வந்த அரசுகள் பதிலளிக்கவில்லை.

மீண்டும் ரூடோவின் முதல் குடிகள் பற்றிய கருத்துக்கள் அவர் உள்வாங்கிய மார்க்சிய சிந்தனையின் வெளிப்பாடாகவே கருதலாம்.

**அரசியல்சாசன மாற்றங்கள்**

கியுபெக் பிரிவினைவாதப் போராட்டங்களின் விளைவு பல அரசியல்சாசன மாற்றங்களை ஏற்படுத்தின. ரூடோவின் காலத்தில் சிறுபான்மையினரின் நலன் உறுதிப்படுத்தப்பட்டது.

முதலாவது மாற்றம் பிரித்தானியாவின் ஆளுமையிலிருந்து கனடாவை பிரித்தெடுப்பது, அதாவது சட்ட மாற்றங்களுக்கு பிரித்தானியாவின் அனுமதியை பெறவேண்டிய அவசியமில்லை. இரண்டாவது மாற்றம் மாநில மத்திய அரசுகளின் தன்னிச்சையான நடவடிக்கைகள் பொதுமக்களை பாதிக்கக் கூடாது. (Canadian Charter of Rights and Freedoms) இதற்கு ஒன்ராரியோ முதலமைச்சர் பில் டேவிஸ், நியு புரென்ச்விக் முதலமைச்சர் றிச்சட் ஹட்பீல்ட் ஆகியோர் ஆதரவு தெரிவித்தனர். இவ்விருவரும் பழமைவாதக் கட்சி முதலமைச்சர்கள். ரூடோவிற்கு எதிராக ஏனைய எட்டு முதலமைச்சர்களும் கூட்டுச் சேர்ந்தனர். த கான்க் ஒப் எயிட் (the Gang of Eight) என கனடிய சரித்திரத்தில் பதியப்பட்டுள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எங்களை விட நாங்கள் நியமிக்கும் நீதிபதிகளுக்கு அதிக அதிகாரங்கள் உள்ளன என்றார்கள். தங்களது முடிவுகளை நீதிபதிகள் நிராகரிக்கலாம் என்பது அவர்கள் வாதம். முதலாவது சட்டமாற்றம் உயர்நீதிமன்றத்தில் ரூடோவிற்கு அரசியலமைப்பை மாற்றும் அதிகாரமுண்டு எனத் தீர்ப்பு வழங்கப்பட்டதையடுத்து என்மரால் ஒன்றும் செய்யமுடியாமல் போனது. பொதுமக்கள் நலன் சட்டத்தை தொடர்ந்து எதிர்த்தனர். ரூடோ சர்வசனவாக்கெடுப்பு நடத்துவேன் என தொடர்ந்த அச்சுறுத்தலைத் தொடர்ந்து பணிந்தனர். ஆனாலும் கியுபெக் முதலமைச்சர் இவர்களிலிருந்து இறுதி நேரத்தல் விலகிவிட்டார். சட்ட மாற்றங்கள் தனது மாநில சுயாட்சிக்கு எதிராக அமையும் எனக் கருதினார். இரண்டாம் எலிசபெத் இராணியினால் 1982 சித்திரை 17ம் நாள் ஒட்டாவில் வைத்து கையொப்பமிட்டு மாற்றியமைக்கப்பட்டது. அன்று கியுபெக் அரசு தனது கொடியை அரைக் கம்பத்தில் பறக்கவிட்டு தனது எதிர்ப்பைக் காட்டிக் கொண்டது. இன்று நாங்கள் அனுபவிக்கும் பல சுதந்திரங்கள் ரூடோவினால் ஏற்படுத்தப்பட்டது.

BNA Act from British trusteeship - an insulting vestige of colonialism - and bring it to Canada

The Last Act: Pierre Trudeau, the Gang of Eight, and the Fight for Canada

**பெற்றோ கனடா**

ரூடோவின் ஆட்சியில் மலர்ந்த ஒரு மலரே பெற்றோ கனடா.

1972—1974 காலப்பகுதியில் ரூடோ அரசு ஒரு சிறுபான்மை அரசு. உலக எண்ணெய் விலை உச்சத்தை எட்டியது. அப்பொழுது பாராளுமன்றத்தில் என்.டி.பிக் கட்சி எண்ணெய் விற்பனைக்கான அரச கூட்டுத்தாபனம் அமைக்கப்படவேண்டும் என சட்டமொன்றை முன்மொழிந்தது. ஆட்சியில் இவ்விரு கட்சிகளும் இணைந்தே பெற்றோ கனடா என்ற அரச கூட்டுத்தாபனத்தை அமைத்தார்கள்.

1973ல் எண்ணெய் வழங்கும் அரேபிய நாடுகள் ( Organization of Arab Petroleum Exporting Countries (OAPEC, consisting of the Arab members of OPEC plus Egypt and Syria), இஸ்ரேலுக்கு போரில் ஆதரவு வழங்கும் அமெரிக்க, யப்பான், மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்ய முடியாது என கூறிவிட்டது. இதே சமயம் ஒபெக் ஏழு சகோதரிகள் என அழைக்கப்படும் பின்வரும் அமெரிக்க நிறுவனங்களுக்கு அதிக விலையை தீர்மானித்தது. வளாந்த நாடுகளில் உள்ள எண்ணெய் தேவை காரணமாக இது ஒபெக்கிற்கு சாதகமாக அமைந்தது.

Standard Oil of New Jersey (Esso), which merged with Mobil to form ExxonMobil.

Royal Dutch Shell (Dutch / British)

Anglo-Persian Oil Company (APOC) (British). Gpd;dhypy; BP - British Petroleum Ýè ñ£Pò¶

Standard Oil Co. of New York ("Socony"). Gpd;dhypy ExxonMobil Ýè ñ£Pò¶

Standard Oil of California ("Socal"). Gpd;dh;; Chevron. Ýè ñ£Pò¶

Gulf Oil..

Texaco. Gpd;dh;; Chevron. ஆக மாறியது

இந்த எண்ணெய் விலை மாற்றம் ஒரு கலனுக்கு 1973 வைகாசியில் 38.5 சதமாக இருந்து 1974 ஆனியில் 55.1 சதமாக அதிகரித்தது. 1974ல் ஆறு கிழமைகளில் நியு யோர்க் பங்குச் சந்தை 97 பில்லியனை இழந்தது. பிரான்ஸில் 30 வருட தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சி முடிவுக்கு வந்தது. 2009ல் பெற்றோ கனடா சனோகோ நிறுவனத்துடன் இணைந்தது.

**இவரது பயணங்கள்**

1960ல் நண்பன் ஜக்ஸ் ஹேபர்ட்டுடன் இணைந்து ஆறு வாரங்கள் சீனாவில் சுற்றுப் பயணம் செய்தார். அதன் தொடர்ச்சியாக Two Innocents in China என்ற நூலையும் எழுதினார். சித்திரை 1960ல் கியுபெவாவிற்கு புளோரிடாவிலிருந்து வள்ளத்தில் கியுபாவிற்கு பயணமானார். கடும் அலைகள் இவரது பயணத்தை தடைபோட்டன. 1964ல் கியுபாவிற்கு சென்று விட்டு வந்து " அங்கு தேர்தல்கள் இல்லை. நூறு பரனைட் வெயிலில் மக்கள் வெள்ளத்தின் மத்தியில் கஸ்ரோ 90 நிமிடங்கள் பேசுகின்றார். அங்கு தேர்தலின் அவசியம் என்ன? என்றார் (2) ரூடோ உலகின் முக்கிய மூன்று இடது சாரி நாடுகளுக்கும் பிரதமராக முன்னரும், ஆட்சி செய்த போதும், ஓய்வு பெற்றபின்னரும் விஜயம் செய்துள்ளார். ரூடோ தனது பிள்ளைகளையும் இடது சாரி நாடுகளுக்கும் ஆபிரிக்க ஆசிய நாடுகளுக்கும் அழைத்துச் சென்றுள்ளார். இவரதும் இவரது பிள்ளைகளது வளர்ச்சிக்கும் இவரது பயணங்கள் உதவி புரிந்துள்ளன.

**இளைப்பாறுதல்**

முன்னால் ஜேர்மன் அதிபர் ஹெல்மட் சிமிட், ஜப்பானிய பிரதமர் பொக்கூடா, ரூடோ ஆகிய முன்னால் அதிபர்கள் ஒரு பொது இடத்தில் வருடத்தில் மூன்று தடவைகள் சந்திப்பார்கள். இவர்கள் சந்திக்கும் பொழுது பொதுவாகவே உலகில் நடைபெறும் அப்போதைய முக்கிய பிரச்சினைகள் பற்றி விவாதிப்பார்கள். அவற்றை விட பல்கலைக் கழகங்கள் போன்ற இடங்களில் முக்கிய விடயங்கள், அரசியலமைப்பு மாற்றங்கள் பற்றி விரிவுரைகள் நிகழ்த்தியுள்ளார். தொடர்ச்சியான அரசியலமைப்பு மாற்றங்களில் இவரது உரைகள் முக்கிய பங்காற்றியுள்ளன.

**ரூடோவின் குடும்பம்**

ரூடோ தன்னை விட 28வயது இளைய மார்கிரெட் சின்ஹிலெயரை 1971ல் திருமணம் செய்தார். இவரது தந்தை முன்னர் லிபரல் அமைச்சராக இருந்தவர். இவர்களுக்கு; ஜஸ்ரின், சாசா, மைக்கல் ஆகிய மூன்று பிள்ளைகள் உண்டு. 1977ல் இவர்கள் பிரிந்தனர். 1981ல் விவாகரத்துப் பெற்றனர். இவரது பிள்ளைகள் ரூடோவுடனேயே வளர்ந்தனர். 1998ல் இவரது இளைய மகன் மைக்கல் பனிச் சறுக்கல் விளையாட்டிக் கொண்டிருந்த போது பனிச்சரிவினால் உயிரிழந்தார். அதன் பின்னர் புரட்டாதி 28, 2000ம் ஆண்டு இறந்தார்.

**இன்றைய கனடா**

இன்றைய கனடா ரூடோவின் கனடா. பிரிவினைவாதத்திலிருந்து கனடாவை மீட்டு ஒன்றாக்கியவர். பல்கலாச்சாரம், இருமொழியியல், கலாச்சார, இன ஒத்தியாயமை, மாநில வேறுபாடுகள், சகிப்புத்தன்மை, வேறுபாட்டு ஏற்பமைவு, பண்பட்ட பழக்க வழக்கமுறை, சர்வதேசம், மாநிலங்களிடையே சமஉரிமை போன்றவற்றை கனடாவில் ஏற்படுத்தியவர் ரூடோ. இவர் உள்வாங்கிய மார்க்சிய சிந்தனைகளே இவரை வழிநடத்தின. அவ்வகையில் மேற்கில் நீண்ட காலம் ஆட்சி செய்த ஒரு மார்க்சியவாதி எனக் குறிப்பிட்டால் மிகையாகாது.

இன்றைய லிபரல் அரசாங்கம் பல வழிகளில் ரூடோவையே பின்பற்றுகின்றது. இவரது சீடரான ஜீன் ஹிரிச்சியன் 10 ஆண்டுகள் ரூடோவின் வழியைப் பின்பற்றி கனடாவை ஆட்சி செய்துள்ளார். ரூடோவிடமிருந்த பல குணங்கள் இவரிடமிருந்துள்ளன. இரண்டாவது கியுபெக் பிரிவினை சர்வசன வாக்கெடுப்பு இவரது காலத்திலேயே தோல்வி கண்டது. இன்றைய புதிய பிரதமர் ரூடோவின் மகன் ஜஸ்ரின் ரூடோ. தந்தையின் பிம்பமாகவேயுள்ளார்.

**இவர் எழுதிய நூல்கள்**

Pierre Elliott Trudeau and Jacques Hébert, Two Innocents in Red China(1961).

Pierre Elliott Trudeau, Approaches to Politics (1970).

Pierre Elliott Trudeau and David Crenna, ed., Lifting the Shadow ouÎ fiÉfŠ (1987).

Thomas S. Axworthy and Pierre Elliott Trudeau, Towards a Just Society: The Trudeau Years (1990).

Pierre Elliott Trudeau, Memoirs (1993).

Ivan Head and Pierre Elliott Trudeau, The Canadian Way: Shaping Canada's Foreign Policy, 1968-1984 (1995).

Pierre Elliott Trudeau and Gérard Pelletier, ed., Against the Current: Selected Writings, 1939-1996 (1996).

Pierre Elliott Trudeau and Ron Graham, ed., The Essential Trudeau(1999).

**உசாத்துணை நூல்கள்**

The Truth about Trudeau by Bob Plamondon -Page 35, Page 22,36

Pierre Elliot Trudeau - Approaches to Politics - Oxford Press

The Hidden Pierre Elliott Trudeau - The faith behind the Politics- Edited by John English, Richard Gwyn and P.Whitney Lackenbauer

Pierre Elliott Trudeau by Nino Ricci

What's Happened to Politics by Bob Rae

The Essential Trudeau - M&S

Against the Current - Selected Writings 1939-1996 - M&S

Just Watch Me by John English

ரதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிர்வாண உலகமும்...! இலங்கைத் தீவின் தற்போதைய நிலையும்!!

இலங்கைத்தீவின் அரசியல் தட்பவெப்பம், ஒஸ்றேலியா முதல் அமெரிக்கா வரை ஆட்கொண்டுள்ள வேளை, உலகின் அகலமானதும் அழகானதுமான வீதியில் உலகத் தலைவர்கள் அணிவகுத்திருந்தனர்.

சிரியாவிலும், ஜெமெனிலும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அப்பாவிப் பொதுமக்கள் கொத்துக் கொத்தாக, கொத்துக் குண்டுகளுக்கும் இரசாயனக் குண்டுகளுக்கும் தமது உயிர்களை இரையாகிக் கொண்டிருக்கும் வேளையில்தான், உலக அமைதிக்கான ஊர்வலம் என இந்த உலகத் தலைவர்கள் ஊர்வலம் போயிருந்தனர்.

முதலாம் உலகப் போரை நிறைவுக்கு கொண்டுவந்த ஒப்பந்தத்தின் நூற்றாண்டு நினைவு நிகழ்வுகள், பிரென்சு அரசுத் தலைவர் எமானுவல் மக்ரோன் தலைமையில் தலைநகர் பரிசில் நொவெம்பர் 11 அன்று இடம்பெற்றிருந்தது.

பிரென்சு தேசத்துக்காக உயிர்நீத்த அடையாளம் தெரியாத ஆயிரம் ஆயிரம் படைவீரர்களுக்காக, நெப்போலியனால் நிறுவப்பட்ட 'ஆர் டு திறியோம்ப்' எனப்படும் நினைவுச் சதுக்கத்திலேயே இந்நிகழ்வுகள் நடந்திருந்தன.

அமெரிக்கா, ரஸ்யா, ஜேர்மனி, பிரித்தானியா, துருக்கி என உலகின் 70 நாடுகளைச் சேர்ந்த உலகத் தலைவர்கள் கொட்டும் மழைக்கு அணிதிரண்டிருந்தனர்.

உலக அமைதிக்கான நாள் என இதனை இந்த உலகத் தலைவர்கள் வலியுறுத்திக் கொண்டிருக்க, தமது அமைதியையும் வாழ்வையும் பறித்த இந்த உலகத் தலைவர்களுக்கு எதிரான போராட்டங்கள், தலைநகர் பரிசின் இன்னுமொரு பகுதியான 'றிப்பப்ளிக்' சதுக்கத்தில் நடந்து கொண்டிருந்தது.

'தேசப்பற்று அல்லது தேசபக்தி என்பது வேறு. தேசியவாதம் என்பது வேறு. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரானவை. உலகில் பல நாடுகள் இன்று தேசியவாதம் என்ற மனப்போக்கை கடைபிடித்து வருகின்றன' என பிரென்சு அதிபர் எமானுவல் மக்ரோன் உரையாற்றிக் கொண்டிருந்தார். 'அமெரிக்கா அமெரிக்கர்களுக்கே — அமெரிக்கர்களுக்கே முதலிடம் என முழங்கும் அமெரிக்க அதிபர் ரம்ப் அமைதியாக யாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தார்.

மறுபுறம் சிறிலங்கா அரசாங்கம் அனைத்து இலங்கையர்களினதும் பாதுகாப்பையும் சமாதானத்தையும் உறுதி செய்யவதோடு, மனித உரிமைகள், நீதி மற்றும் நல்லிணக்கத்தை பின்பற்ற வேண்டும் என ஐ.நா செயலாளர் நாயகம் இலங்கையின் அரசியல் தட்பவெப்பம் தொடர்பில் அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்தார்.

சிரியாவிலும் ஜெமெனிலும் ஆக்கிரமிப்பு யுத்தம் ஒன்றை நடாத்திக் கொண்டிருக்கும் இரத்தம் தோய்ந்த கரங்களோடுதான் இந்த வல்லாதிக்க சக்திகள் தமக்கிடையே கரங்களைக் கோர்த்தவாறு உலக அமைதிக்காக ஊர்வலம் போயிருந்தனர்.

சிறிலங்காவின் எந்த அரசியலமைப்பையும் எந்த ஜனநாயகத்தினையும் கொண்டு தமிழர்கள் மீது சிங்கள ஆட்சியாளர்கள் ஆக்கிரமிப்பு யுத்தங்களையும் இனப்படுகொலையையும் நடத்தினார்களோ, இரத்தம் தோய்ந்த அந்த அரசியலமைப்பையும் ஜனநாயகத்தையும் நிலைநிறுத்துமாறு உலக அமைதிக்கான இந்த தலைவர்களே ஓயாது அறிக்கை விடுகின்றார்கள்.

இதுதான் உலகம். இதுதான் உலக அரசுகள். இதுதான் உலக அரசியல்.

இந்த அரசுகள் நிர்வாணமானவை. இவர்களுக்கு தமது நலன்களைத் தவிர வேறொன்றும் தெரிவதில்லை. நலன்களை அடைவதற்காக போரையும் செய்வார்கள், அமைதியையும் போதிப்பார்கள். நலன்களின் நிமிர்த்தம் எந்த ஆடைகளையும் போட்டுக் கொள்வார்கள். தேவை ஏற்பட்டால் நிர்வாணமாகவும் ஊர்வலம் போவர்கள். இவர்களின் நிர்வாணம் 'ஜனநாயகம்—அமைதி—நல்லிணக்கம்' போன்ற கவர்சிச் சொற்கள் மறைக்கப்பட்டு விடும்.

அவ்வாறுதான் பரிசின்பெருவீதியில் இந்த அரசுத்தலைவர்கள் தமது நிர்வாணத்தை 'உலக அமைதிக்கான ஊர்வலம்' என்ற பெயரில் மறைத்திருந்தனர். இதனைத்தான் இலங்கைத்தீவை மையப்படுத்திய விவகாரத்திலும் இந்த அரசுகள் ' ஜனநாயகம் — அரசியலமைப்பு' என தமது நிர்வாணத்தை மூடிறைக்கின்றன.

ஆனால் இன்று இந்த சர்வதேச சக்திகள் இலங்கை விவகாரத்தில் நிர்வாணப்பட்டு அவமானப்பட்டு நிற்கின்றன என்று சொன்னால் அது மிகையாகாது. காரணம் யாரை நல்லாட்சி நாயகர் என புகழ்ந்தார்களோ, அவரே இந்த மேற்குலக சக்திகளின் முகத்தில் கரியைப் பூசிவிட்டு, வில்லனை கதாநாயகனாக்கி விட்டார். இங்குதான் இந்த மேற்குலக சக்திகள் அவமானப்பட்டு நிற்கின்றன.

இந்தோ—பசுபிக் பூகோள அரசியல் சதுரங்கத்தில் இலங்கைத்தீவு என்பது இச்சக்திகளுக்கு ஒரு மூலோபாய மையம்.

தமது மூலோபாயங்களை அடைவதற்கான தந்திரோபாயமாகத் தான், மனித உரிமை மீறல், போர் குற்றச்சாட்டுக்களை கையில் எடுத்து, ஆட்சி மாற்றத்தினைக் கொண்டு வந்திருந்தன.

நல்லாட்சி, நல்விணக்கம், நிலைமாறு கால நீதிகான செயற்பாடென பலவிதமான கவர்ச்சி சொல்லாடல்களை ஒன்றுக்குபத்து தடவை சொல்லிக் கொண்டிருந்த நிலையில்தான் தென்னிலங்கை அரசியலின் நிலைமைகள் தலைகீழாக மாறியுள்ளன.

அமெரிக்கக் கழுகு எதிர் சீன டிராகன் ஆகிய சக்திகளுக்கு இடையிலான போட்டிக்களமாக இலங்கைத்தீவு மாறிவிட்டது.

இலங்கைத்தீவு தற்போது இலங்கையர்களிடம் இல்லை என்பதே யதார்த்தம்.

கடந்த காலங்களில் சிறிலங்காவின் ஆட்சியாளர்களது அரசியல், ஜனநாயக நடத்தைகள் குறித்து தமிழர் தரப்புக்கள் பல தடவை எடுத்துக்கூறிய போதெல்லாம் அவற்றையெல்லாம் அசட்டை செய்வதுபோல், சிறிலங்கா என்பது தேர்தல் முறைமையக் கொண்ட ஒரு சனநாயக நாடு என்ற அந்தஸ்தையும் அங்கீகாரத்தையுமே இந்த சர்வதேச சக்திகள் கொடுத்து வந்துள்ளன.

தமிழர்களின் நியாயமான உரிமைப் போராட்டத்தை மனிதாபிமானத்துக்கான போர், பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என பல்வேறு பெயர்களில், சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் தேசம் மீது நடாத்திய ஆக்கிரமிப்பு யுத்தங்களையும், இனப்படுகொலையையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த இந்த உலகம், இன்று தென்னிலங்கையின் அரசியல் தப்புத்தாளாங்களை பதட்டத்தோடு பார்கின்றது. புதறியடிக்கின்றது.

உலக நியாயாதிக்க சட்டங்களுக்கு அமைய போர்குற்றங்கள் புரிந்தவர் களுக்கு எதிரான பயணத் தடை, சொத்து முடக்கம் என பல்வேறு சர்வதேச தடைகளையும் அனைத்துலக விசாரணையையும் தமிழர்கள் தமக்கான நீதிக்காக கோரிய பொழுதெல்லாம் அமைதியாக இருந்தவர்கள், இன்று தம்மை நிர்வாணப்படுத்தி அவமானப்படுத்தியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கின்றனர்.

யாரை யார் அவமானப் படுத்துவது. தமிழர்களின் நியாயமான போராட்டத்தை ஒரு பயங்கரவுாதமாக சித்திரித்து தமிழர்களை அவமானப்படுத்தி முள்ளிவாய்க்காலில் இந்த உலகமே நிர்வாணப்படுத்தியிருந்தது.

இன்று தாம் சிங்களப் பேரின வாதப்பூதத்திடம் அவமானப்பட்டு நிர்வாணப்பட்டு நிற்கும் நிலையில் கொதித்து எழுகின்றனர்.

போரை நிறுத்தச் சொல்லி பரிசின் வீதிகளில் மட்டுமல்ல உலக வீதிகள் எங்கும் தமிழர்கள் அழுதுபுரண்ட போது, அமைதிகாத்தவர்கள், இன்று சிரயாவிலும்ஜெமெனிலும்குண்டுகளை வீசியவாறு உலக சமாதானத்துக்காக ஊர்வலம் போகின்றனர். கூடவே இலங்கையை தமது வழிக்கு கொண்டுவர தடைகளையும் போட எச்சரிக்கின்றனர்.

ஏன்என்றால் இவர்கள் நிர்வாண மானவர்கள்.

இதுதான் உலகம். இதுதான் உலக அரசுகள். இதுதான் உலக அரசியல்.

இதற்குள்தான் ஈழத்தமிழர்களுக்கும் தமக்கான நீதியையும் உரிமையையும் வென்றெடுக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

அரசுகளின் அரசியல் சதுரங்கத்தில் அரசற்ற இனமாகிய ஈழத்தமிழினத்துக்கு, முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 10 ஆண்டுகள் எட்ட இருக்கின்ற இவ்வேளையில், இந்தோ—பசுபிக் பூகோள அரசியலில் தமிழர்கள் ஒரு தரப்பாக தம்மை மாற்றிக் கொள்வதற்கான ஒரு வாய்பாக இலங்கைத்தீவின் தற்போதை நிலை தோற்றுவித்துள்ளது.

இந்த பூகோள அரசியலை முன்னுணர்ந்தே இலங்கைத்தீவில் தமிழீழமே தமிழர்களின் பாதுகாப்புக்கும் இறைமைக்கும் உரிய தீர்வென தெட்டத் தெளிவான நிலைப்பாட்டை தலைவர் வே.பிரபாகரன் முன்வைத்திருந்தார்.

தீர்க்க தரிசனமான அந்தப்பார்வை ஏற்படுத்தப் போகும் தாக்கத்தினை, இன்றைய இந்தோ—பசுபிக் பூகோள அரசியலில் இலங்கைத்தீவில் ஏற்பட்டுள்ள இருதுருவ சர்வதேச சக்திகளின் அரசியல் ஊடாக புரிந்து கொள்ளலாம்.

**சுதன்ராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை வேளாண் நெல் ஜெயராமன்



'ஏர் முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை; என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லை' — என்ற பழைய பாடல் ஒன்று உங்களுக்கு நினைவிருக்கலாம். விவசாயிகளுக்கு என்றுமே பஞ்சம் இல்லை என்று சொன்னாலும் மழையை நம்பித்தான் அனேகமான இடங்களில் விவசாயம் நடைபெறுகின்றது என்பதை அனைவரும் அறிவர். மழை பொய்த்தால் அவர்கள் படும் கஷ்டம் சொல்லமுடியாதது. ஆனாலும் தாங்கள் படும் கஷ்டத்தை எல்லாம் மறந்து சுயநலமின்றி இரவு பகலாக அவர்கள் உழைப்பதால்தான் இன்று மக்களால் ஓரளவு பசிபட்டினி இன்றி வாழமுடிகின்றது. தங்களை வருத்தி எங்களுக்கு உணவு அளிப்பவர்கள்தான் இந்த விவசாயிகள் என்பதை நாம் என்றும் நினைவில் வைத்திருக்க வேண்டும். விவசாய முறையில் இன்று பசுமைப்புரட்சி, இயற்கைவேளான் என்றெல்லாம் பல மாற்றங்கள் நடைபெறத் தொடங்கி விட்டதால், ஓரளவு ஆரோக்கியமான உணவு மக்களுக்குக் கிடைப்பதற்கு வழிவகுத்திருக்கிறார்கள்.

இயற்கை விவசாயம் அல்லது இயற்கை வேளாண்மை என்பது செயற்கைஉரம்,செயற்கைபூச்சிக்கொல்லி மருந்துகள், செயற்கை வளர்ச்சி ஊக்கிகள் போன்றவற்றை முற்றிலும் தவிர்த்து இயற்கை உரம் பாரம்பரிய விதை போன்ற இயற்கை சாகுபடி முறைகளை அடிப்படையாக கொண்ட ஒரு வேளாண்மை முறைமையாகும். உடல் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு இந்த முறை இப்போது பரவலாக விவசாயிகளிடைய அறிமுகப் படுத்தப் படுவதால், மக்களிடையே பிரபலமடைந்து வருகின்றது.

அனேகமான ஆசிய மக்களின் முக்கிய உணவாக அரிசியில் செய்யப்படும் உணவு வகைகளாக இருப்பதை யாவரும் அறிந்ததே. கி.மு. சுமார் 4500 வருடங்களுக்கு முன்பிருந்தே ஆசிய நாடுகளில் நெல் பயிரிடப்படுவதாகத் தெரிகின்றது. சங்க இலக்கியங்களில் இது பற்றிய குறிப்புக்கள் இருக்கின்றன. சீனா, இந்தியா,இந்தோனேசியா போன்ற ஆசிய நாடுகள் நெல் உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றன. நெல்லில் இருந்து உமியை நீக்கி இந்த அரிசி பெறப்படுகின்றது. சோறு என்று சொல்லப்படுகின்ற முக்கிய உணவைத் தயாரிக்கவும், அரிசியை இடித்து மாவாக்கி வேறு உப உணவுகள் செய்யவும் நெல்லில் இருந்து பெறப்படும் இந்த அரிசியே உதவுகின்றது. இந்த நெல்லைச் சேமித்து வைக்கும் இடத்தை நெல் களஞ்சியம் என்பர். இலங்கையில் கொம்பறை என்று அழைப்பர். ஆயிரக் கணக்கான நெல்வகைகள் தொடக்கத்தில் இருந்தாலும் அவற்றில் அனேகமான நெல்வகைகள் காலப்போக்கில் பாவனை இல்லாமல் அழிந்து போயின.

இந்த நெல் வகைகள் அழிந்ததற்கு வெளி நாடுகளில் இருந்து கோதுமை, சோளம் போன்ற உணவு வகைகளின் இறக்குமதியும், விவசாய நிலங்கள் குடிமனை, தொழிற்சாலை நிலங்களாக மாறியதும், வரட்சி காரணமாக விதை நெல் அழிந்து போனதும், விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வேறு தொழில்களை மேற்கொண்டதாலும் பயன்பாடு இல்லாமல் பல அரிய நெல்வகைகள் அழிந்து போயின. இதைவிட பூச்சி புழுக்களும் பயிரில் நோய்களை ஏற்படுத்தியதால் விதை நெல் கிடைக்காமல் போய்விட்டது. இன்னுமொரு காரணம் விரைவாகப் பலன் தரக்கூடிய புதிய நெல்வகைகளைக் கண்டு பிடித்ததால் விவசாயிகள் அதிக விளைச்சல் தரும் நெற்களைப் பாவிக்கத் தொடங்கினர். இந்த நெல்வகைகள் செயற்கை உரம் போட்டு வளர்க்கப்பட்டதால் விளைச்சல் அதிகமாகக் கிடைத்தது. ஆனால் செயற்கை உரம் போட்டு பலன் எடுப்பதால் ஆரோக்கியத்திற்கு ஊறு விழைவிக்கும் என்று கருதியதால், இன்று சிலர் இயற்கை விவசாயத்தை விரும்பி ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இயற்கை வேளான் மண் வளத்தையும் பாதுகாக்கிறது.

நமது நெல்லைக் காப்போம் என்ற பெயரில் விவசாயிகளின் அமைப்பு ஒன்று தமிழ் நாட்டில் செயற்படுகின்றது. இந்த அமைப்பு பாரம்பரிய நெல் வகைகளைக் காக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. ஆறு அடி உயரமும், அதிர்ந்து பேசாத இயல்பும் கொண்ட திரு. ஜெயராமன் அவர்கள் இயற்கை வேளாண்மை மீது மாறாத பற்று கொண்டவர். இயற்கை வேளாண்மையில் ஈடுபாடு கொண்ட இவர் 'கிரியேட்' என்ற தன்னார்வ தொண்டு அமைப்பின் சார்பில் பாரம்பரிய விதை ரகங்களை அடையாளம் கண்டறிந்து சேமிக்கத் தொடங்கினார். அதை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு ஆண்டு தோறும் திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள ஆதிரெங்கம் கிராமத்தில் 'நெல் திருவிழா' நடத்தப்பட்டு வருகிறது. இந்த அமைப்பின் முயற்சியால் தமிழ்நாடு முழுவதும் இதுவரை சுமார் 27 ஆயிரம் விவசாயிகளுக்குப் பாரம்பரிய நெல் வகைகளை விநியோகித்திருப்பதாகத் தெரிகிறது. விதை நெல்லைப் பெறுபவர்கள் அடுத்த ஆண்டில் இரண்டு பங்காகத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்பதே இவர்களின் விதி முறையாகும். வருடந்தோறும் நடைபெறும் நெல் திருவிழாவை ஒரு விதை வங்கியாகவும், விதைப் பரிமாற்ற நிகழ்வாகவும் நடத்திக் காட்டினார் நெல் ஜெயராமன். நெல் ஜெயராமனின் சேவையைப் பாராட்டி குடியரசுத் தலைவர் விருதும், தமிழக அரசு விருதும், கோவை வேளான் பல்கலைக்கழகம் போன்றவற்றின் உயரிய விருதும் வழங்கிக் கௌரவித்திருக்கின்றனர்.

பாரம்பரிய நெல்வகைகள் அழிந்து போவதைத் தடுக்கவும், ஏற்கனவே பாவனை அற்றுப் போயிருந்த நெவ்வகைகளை அறிமுகப்படுத்தவும் விரும்பிய ஜெயராமன் அவர்கள் சுமார் 170 பாரம்பரிய நெல் வகைகளை மீட்ட பெருமைக்கு உரியவர். பத்தாம் வகுப்புவரை மட்டுமே படித்திருந்த நெல். ஜெயராமன், தமிழ்வேளாண் பல்கலைக் கழகத்தின் இயற்கை வேளாண்மை ஆலோசகராக பணியாற்றியதோடு, அதே பல்கலைக் கழகத்தின் மாணவராகவும் பதிவு செய்து கொண்டு தமது அறிவை நாளும் வளர்த்துக் கொள்வதில் அயராத ஆர்வம் காட்டினார். நெல் தொடர்பான சேவைகள் செய்ததால் அவரை 'நெல்' ஜெயராமன் என்று பெயர் சூட்டி அனைவரும் கொண்டாடினர்.

வளர்ந்து விட்ட பருவப்பெண் போல் உனக்கு வெட்கமா? தலை வளைஞ்சு சும்மாப் பாக்குறியே தரையின் பக்கமா _ என்ற பழைய பாடல் வரிகளை மீண்டும் நிஜமாக்க வேண்டுமானால், இயற்கை வேளான் முறைப்படி அறிமுகமான நெற்பயிர்கள் அந்த மண்ணில் செழிப்பாக வளர்ந்து பூத்துக் காய்த்து நாணி நிற்கும் போதுதான் எங்களுக்கும் ஆத்மதிருப்தி ஏற்படும்.

பாரம்பரிய நெல் விதைகளை அழிவிலிருந்து காப்பதற்காகப் போராடிய நெல் ஜெயராமனால் தன்னைப் பிடித்துக் கொண்ட புற்று நோயிடம் இருந்து தன்னைக் காப்பாற்றி கொள்ள முடியாமல் போய்விட்டது. சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த, இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வாரின் மாணவர்களில் ஒருவரான நெல் ஜெயராமனை பல்வேறு அரசியல் கட்சியின் தலைவர்களும், முக்கிய பிரமுகர்களும் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து வந்தனர். ஆனாலும் அவரது நோயைக் கட்டுப்படுத்த முடியாமற் போனதால், 6—12—2018 ஆம் ஆண்டு அவர் இவ்வுலகை விட்டுப்பிரிய வேண்டி வந்தது. ஐம்பது வயதான நெல் ஜெயராமனுக்கு மனைவியும் ஒரு மகனும் இருக்கிறார்கள். அவரின் மறைவு இயற்கை விவசாயத்தில் ஆர்வம் கொண்ட பலரையும் பாதித்துள்ளதால், அவரது சமூக பங்களிப்பைப் பாராட்டி நடிகர்கள், அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்கள் சமூக ஊடகங்களில் இரங்கல் உரையாற்றினார்கள். அவரது சேவைகளை தொடர்ந்து முன்னெடுத்து, பாரம்பரிய நெல் ரகங்களை பாதுகாத்து, அவற்றை உரிய முறையில் பயன்படுத்தி, அவரது வழியைப் பின்பற்றி நடப்பதுமே அவருக்கு நாம் செய்யும் மிகச்சிறந்த அஞ்சலியாக அமையும்.

**குரு அரவிந்தன்**



இயற்கை வேளான் முறையை இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் அறிமுகப் படுத்துவதில் மிகப் பெரிய பங்கைக் கனடாவில் இருந்து ஈகுருவி நிறுவனத்தினரும், அவர்களது ஆதரவாளர்களும் வகிக்கின்றனர். இந்த வருடத் தொடக்கத்தில் தென்னிந்தியாவில் இருந்து இயற்கை விவசாயத்தில் அனுபவம் மிக்க சிலரை அழைத்து வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இயற்கை விவசாயம் பற்றிப் பயிற்சிப்பட்டறைகள் நடத்தியிருந்தனர். இதைவிட அவர்கள் உதவியுடன், 32 வகையான எம்மிடமிருந்து அழிந்து போன மரபு நெல் விதைகளை ஜனவரி மாதம் 2018 ஆம் ஆண்டு வடமாகாணத்து விவசாயிகளுக்கு அறிமுகம் செய்திருந்தார்கள். அவற்றில் சில நெல் வகைகளைக் குறிப்பிடுகின்றேன். அறுபதாங்குறுவை, குடவாழை, பூங்கார், கருங்குறுவை, தேங்காய்பூச்சம்பா, சேலம்சம்பா, சீரகச்சம்பா, இலுப்பைப்பூச்சம்பா, கைவிரச்சம்பா, கருத்தக்கார், கறுப்புக்கௌனி, மாப்பிள்ளைச்சம்பா, கொத்தமல்லிச்சம்பா, தங்கச்சம்பா போன்றவை இதற்குள் அடங்கும். இலங்கையில் ஏற்கனவே சீனட்டிநெல், முருங்கக்காயன், பச்சைப்பெருமாள், இளங்கலையன், முல்லைநெல், மணல்வாரி போன்ற நெல் வகைகள் பாவனையில் இருக்கின்றன.

புதிய வெளிச்சம் சார்பாக நவஜீவன் அனந்தராஜ் அவர்களினால் 32 வகையான மரபு நெல் வகைகள் வடக்கில் அறிமுகப்படுத்திய காணொளிகளை பார்வையிட இதில் அழுத்தவும் http://www.biztha.com/video/nel1 http://www.biztha.com/video/nel2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்துவிட்டது பேஸ்புக்கின் 'டேட்டிங்' அப்!



இந்த வருடம் மே மாதம் நடந்த f8 எனும் வருடாந்த ஃபேஸ்புக் மாநாட்டில், தங்களது டேட்டிங் செயலி ஒன்றை அறிமுகப்படுத்தப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. பேஸ்புக்கில் இருக்கும் ஒருவரைப் பற்றிய தகவலை எடுத்து, அதன்மூலம் சரியான துணையை சில வழிமுறைகளைக் கொண்டு கண்டுபிடித்துத் தருமாம் இந்தச் செயலி. டேட்டிங் செயலியான இதற்குப் பெயரும் 'டேட்டிங்' தான். சோதனை செய்ய கொலம்பியா நாட்டில் மட்டும் இதை பேஸ்புக்கில் தற்போது வெளியிட்டிருக்கிறது.

இந்த விஷயத்தில், மற்ற டேட்டிங் செயலிகளில் இல்லாத வசதி பேஸ்புக்கிடம் இருக்கிறது.

என்னதான் உங்களைப் பற்றிய கேள்விகளைக் கேட்டு உங்களின் குணநலன்க்ளை மற்ற செயலிகள் அறிந்தாலும், பேஸ்புக் தளத்தில் உள்ள உங்கள் நடவடிக்கைகளை வைத்து கணிப்பதைப் போல துல்லியமாக எந்த டேட்டிங் செயலியும் செய்துவிடாது. மற்ற செயலிகள் கேட்கும் கேள்விகளில்கூட வேண்டுமென்றே வேறு ஒரு பதிலை அளிக்க முடியும்.

டேட்டிங் என்றால் உடனே காதலுக்கு முன்னே நெருங்கி பழகும் சமாசாரமாக பலர் கருதுகின்றனர். ஆனால், டேட்டிங் என்பது திருமணத்திற்கு முன்பு பெண் பார்க்க போவது போல, காதலுக்கு முன் பழகி பார்ப்பது. இவர்கள் நமக்கு செட் ஆவார்களா? ஆகமாட்டார்களா? என்பதை அறிவது.

ஐரோப்பிய நாடுகள் மற்றும் வடக்கு, கிழக்கு ஆசிய நாட்டவர்கள் ஹொங்கொங் உட்பட ஒரு வயது எல்லைக்குப் பின் தமக்குப் பொருத்தமான துணையைத் தாமே தேடிக்கொள்ளும் முழு உரிமையைஇந்த சமுதாயக் கட்டமைப்புகள் கொண்டுள்ளன.

அது போன்றே ஒருவர் தனக்கு ஏற்ற துணையை"பொருத்தம் பார்த்தல்" ஊடாக சந்தித்து இருவருக்குமான பொருத்தம் இல்லைஎனும் நிலையில், குறிப்பிட்ட அவர்களின் சந்திப்பு அன்றுடன் முற்றுப்பெறும். சிலவேளை சிலநாட்களாக அல்லது சிலகாலமாக தொடர்ந்து பின்னர்"பொருத்தம் இல்லை" என பிரிந்து விடுவதும் உண்டு. தமிழர் பண்பாட்டில் ஜாதகப்பொருத்தம் சரிவராவிட்டால் வேறு ஜாதகம் தேடுவது போன்றே, மேற்கத்திய பண்பாட்டிலும் ஒருவருடன் பொருத்தம் இல்லையாயின் தமக்கு ஏற்ற வேறு துணையைத் தேடத் தொடங்கிவிடுவர்.

"இணையத்தில் ரிலேஷன்ஷிப் வளர்க்கச் சிறந்த இடமாக பேஸ்புக் மாறவேண்டும் என்பதே இந்தச் செயலி தயாரிப்பின் முக்கிய குறிக்கோள்"என்கிறார், இதன் தயாரிப்பு உயர் அதிகாரியான நேத்தன் ஷார்ப். மேலும், இவர்கள் செயலியை டிண்டரில் இருக்கும் ஸ்வைப் வசதி போல இல்லாமல் நிரந்தர உறவுகளை இணைக்கவே தயாரித்துள்ளனராம்.

மொபைல் பேஸ்புக் செயலி இருந்தால்தான் இதைப் பயன்படுத்த முடியும். இது, 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமானது. பயன்படுத்த விரும்புபவர்கள் தனியாக இதில் பதிவுசெய்ய வேண்டியதிருக்கும். பேஸ்புக்கில் இருக்கும் குறிப்பிட்ட சில தகவல்கள் மட்டுமே தற்போதைக்கு பயன்படுத்தப்படும் எனவும் கூறப்படுகிறது.

தற்போது, கொலம்பியாவில் இது வெளிவந்துவிட்டாலும் ஓரளவு மக்கள் சேர்ந்தபின்தான் மேட்சிங் வேலைகளை ஆரம்பிக்குமாம் 'டேட்டிங்'. இது விரைவில் ஏனைய நாடுகளுக்கும் வர உள்ளது. நம் நாட்டிற்கு இது பொருத்தம் ஆகுமா... ஆகாதா? பொறுத்திருந்து பார்ப்போம்.


**அனைத்து விதமான உடல் பிரச்சனைகளுக்கும் பக்க விளைவுகளற்ற முழுமையான தீர்வுக்கும் நமது 5000 வருட பாரம்பரிய மருத்துவ முறையான ஆயுர்வேத மருத்துவமே சிறந்தது என்பது நம் எல்லோருக்கும் தெரியும்**




**Treatments Available For**
PSORIASIS, ECZEMA and all types of skin problems, ARTHRITIS, LOW BACK ACHE, SCIATICA, STROKE, GYNAECOLOGIC PROBLEMS, PCOS, MALE AND FEMALE INFERTILITY, KIDNEYSTONE, PILES, ULCER, HEADACHE, DIABETES, HYPERTENSION, OBESITY, HAIR FALL, DANDRUFF, SPECIAL TREATMENT FOR STRESS RELIEF & ALL KINDS OF MALE SEXUAL PROBLEMS.

இவ்விடத்தில் பாரம்பரிய கேரளா முறைப்படி இங்குள்ள தட்ப வெப்ப நிலைக்கேற்ப சிறந்த முறையில் சிகிச்சையளிக்கப்படுகிறது

கேரளா பாரம்பரிய முறை பஞ்சகர்மா சிகிச்சை, உடலில் உள்ள நச்சுத்தன்மைகளை நீக்கி புத்துணர்வு அளிக்கும் – ஷிரோதாரா சிகிச்சை, நாட்பட்ட தலைவலி, தலைமுடி உதிரல். போன்றவற்றை நீக்கவல்லது.

மற்றும் ஆயுர்வேத தைலங்களால் அனைத்து வித வாத நோய்களுக்கும் மசாஜ் சிகிச்சையளிக்கப்படும்.



VASISHTA AYURVEDIC

**Vasishta Ayurvedic Wellness Inc**
**2199 Midland Avenue, Unit# 1 Scarborough ON, M1P 3E7**
**For Appointments : (647) 532-1255**
**(416) 291-6730** www.vasishta.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The new 2019 Civic is here

## Bring home a HONDA




THE NEW
2019 Civic LX
FROM
**$66/3.99% APR**
WEEKLY LEASE FOR 60 MONTHS
$0 DOWN PAYMENT/OAC
$0 SECURITY DEPOSIT

**Honda Sensing™ Technologies standard on most Civic models**



2018 CR-V LX AWD
FROM
**$78/2.99% APR**
WEEKLY LEASE FOR 60 MONTHS
$2,290 DOWN PAYMENT/OAC
$0 SECURITY DEPOSIT


HONDA
## Formula Honda
*Where You're Treated like Family.*



Shan Sarvananthan
*Sales & Leasing Consultant*
Cell 416-720-1184

2240 Markham Road
Scarborough,
ON, M1B 2W4
Telephone:
416-754-4555

formulahonda.com






Rajah Tharmalingam
*Sales & Leasing Consultant*
Cell 647-833-4998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org